759

No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1350 துல்ஹஜ்ஜு 1932 மேமீ | இதழ் 5

15 MAY 1932

உள்ளடக்கம்		பக்கம்
1.	ஸூரத்துஷ் ஷம்ஷ் ...	193
2.	நாயக வாக்கியம் ...	200
3.	நாம் செய்யவேண்டுவதென்னே? ...	202
4.	இஸ்லாமிய ஷரீஅத்தில் தொழிலின்மேன்மை...	205
5.	மேனாட்டு நாகரீகமும் இஸ்லாமிய நாடுகளும் ...	208
6.	நஞ்சிறார்கட்கு ...	211
7.	நண்பருணர ...	213
8.	மௌலானா அவர்களின் கடிதம் ...	215
9.	காதியானீ இயக்கம் ...	216
10.	சென்னை உலமாக்களின் மார்க்கத் தீர்ப்பு ...	247

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

அறிவிப்பு

திருநெல்வேலி ஜில்லா சாத்தான் குளத்தில் 24-4-32-ல் நடைபெறும் சுன்னத்வல் ஜமாஅத்தார்கள், காதியானீ விவாத மகாநாட்டிற்கு நாம் செல்ல வேண்டியதினிமித்தம் நம் அரும் மாசிகையை முற்கூட்டியே முடித்து விடும்படி நேரிட்டமையால் அம்மகா நாட்டின் சகல நடவடிக்கைகளையும் பிரசுரிக்க முடியாது போயிற்று. ஆதலின் அம்மகா நாட்டில் நடைபெறும் விஷயங்களை அடுத்த இதழின்கண் விபரமாகப் பிரசுரிப்போம்.

பத்திராதிபர்.

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 3	ஹிஜ்ரி 1350 துல்ஹஜ்ஜு மீ 1932ஹு மே மீ	இதழ் 5

5 MAY 1932

ஸூரத்துஷ் ஷம்ஸ்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நாம் இதனை ஆரம்பிக்கின்றோம்)

1. சூரியன் மீதும், அதன் பிரகாசத்தின் மீதும் பிரமாணமாக,

2. (சூரியனை) பின்தொடர்ந்து செல்லும் போது சந்திரன்மீதும், (பிரமாணமாக)

3. (சூரியன்) பிரகாசிக்கும் போது பகலின் மீதும், (பிரமாணமாக)

4. (சூரியன்) மறைந்து போகும் போது இரவின் மீதும், (பிரமாணமாக)

5. வானத்தின் மீதும், அதனைப் படைத்தவன் மீதும், (பிரமாணமாக)

6. பூமியின் மீதும், அதன் பரப்பின் (சக்தியின்) மீதும், (பிரமாணமாக)

7. ஆத்மாவின் மீதும், அதை பரிபூர்ணமாக்கிவைத்ததின் (சக்தியின்) மீதும், (பிரமாணமாக)

8. பிறகு அதன் (நப்ஸின்) தீயகாரியங்களையும் நலவான வற்றையும் அறிவித்துக் கொடுத்தான்,

9. (நப்ஸை)பரிசுத்தப்படுத்தியவன் நிக்ஷயமாகவே வெற்றியடைந்து விட்டான்.

10. மேலும் (தீயகருமங்களில்) அதை (நப்ஸை) சேர்த்து விட்டவன் நிக்ஷயமாகவே தோல்வி அடைந்து விட்டான்.

11. “ தமூத்,, (கிளையார்) தங்களது அக்கிரமத்தினால் (ஆண்டவனுடையவும் அவனது ரசூலினுடையவும் கட்டளைகளை) பொய்யாக்கி வைத்தனர்.

12. அவர்களிலுள்ள மகாக் கெட்டவனொருவன் வெளியானபோது,

13. அது பொழுது அவர்கட்கு அல்லாஹ்வின் தூதர் சொன்னார், அல்லாஹ்வின் ஒட்டகத்தையும் அதன் தண்ணீர் அருந்தலையும் (விட்டுவிடுங்கள்)

14. அதனால் அவர்கள் ரசூலைப் பொய்யாக்கி வைத்து அதை (ஒட்டகத்தை) கொன்று விட்டார்கள்; ஆதலின் அவர்களது பாவத்தின் காரணமாக அவர்களுடைய நாயன் அவர்கள்மீது நாசத்தை அனுப்பி (அவர்களை ஒழித்து) விட்டான்.

15. மேலும் அதன் (அக்கிளையாரின்) முடிவைக்குறித்து அல்லாஹ் (தஆ) அஞ்சவில்லை.

[அதாவது நபியினது மனதைப் போன்றிருக்கின்ற சூரியன் மீதும், நபிப்பட்டத்தின் ஒளியைப் போன்று யாவற்றின் மீதும் பிரகாசிக்கச் செய்கின்ற ஜோதியின் மீதும் பிரமாணமாக. இன்னும் நபிமார்களைப் பின் தொடர்ந்து பிரசாரம் புரிந்து வரும் அவர்களது அனந்தர வாரிஸ்களை போன்றுள்ள சந்திரன் மீதும், நேர்வழியைப் போன்று பிரகாச மளிக்கக் கூடிய பகலின் மீதும், பாவங்கள் செய்வது போன்றுள்ள இருளைக் கொடுக்கக்கூடிய இரவின் மீதும், வானத்தின் மீதும், அதனை ஒழுங்கு படுத்திவைத்திருக்கும் சக்தியின் மீதும்; பூமியின்மீதும், அதன் பரப்பின் சக்திமீதும், மானிடன் மீதும், அவனை ஒழுங்குபடுத்திய சக்தியின் மீதும், நப்ஸிற்கு அதன் தீய, நல்ல கருமங்களை அறிவித்துக் கொடுத்த சக்தியின்மீதும் பிரமாணமாக தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டவன் நிட்சயமாகவே ஜெயம் பெற்று விட்டான். இன்னும் நப்ஸை தீய கருமங்களில் சேர்த்து விட்டவன் தோல்வி அடைந்து விட்டான். "தமூத்" வர்க்கத்தினரில் மிகக் கெட்டவனொருவன் கிளம்பியபோது அவர்களவது அக்கிரமத்தினால் தங்கள் நபீயாகிய சாலிஹ் (அலை) அவர்களுடையவும், அல்லாஹ் (ஜல்) வினுடையவும் கட்டளைக்கு முற்றும் விரோதஞ் செய்ய ஆரம்பித்தனர். அதுபொழுது அல்லாஹ்வின் பெண் ஒட்டகத்தையும் அதன் தண்ணீர் அருந்தலையும் அவ்வாறே விட்டு விடுங்களென்று தமூத் கூட்டத்தினருக்கு அல்லாஹ்வின் ரசூலாகிய சாலிஹ் (அலை) அவர்கள்கூறினார்கள்; அதைப் பொருட் படுத்தாது நபீ அவர்களை பொய்யாக்கி வைத்து ஒட்டகத்தைக் கொன்று விட்டார்கள். அவர்கள் ஆண்டவனது கட்டளைக்கு மாறு செய்த காரணமாய் அவர்கள் மீது ஆண்டவன் நாசத்தை அனுப்பி விட்டான். அல்லாஹ் தஆலா அக்கூட்டத்தினரின் நாசத்தின் முடிவைக் குறித்து அஞ்சுவது கிடையாது என்பதே]

இத்திரு வத்தியாயம் மக்கியாம். இதற்கு ஸூரத்துஷ் ஷம்ஸ் என நாமஞ் சூட்டப் பெற்றதின் காரணமாவது:—ஆண்டவனது பாதையைத்தேடிச் செல்பவனுக்கு நுபுவ்வத் தென்னும் சூரிய னொளியே மிகமிகப் பிரதானமாகயிருக்கின்றது. அவ்வொளியின் காரணமாகஅன்னேன் ஈடேற்றம் பெற்றுய்வதற்குள்ள மார்க்கமின்னதெனவும், துர்மார்க்க மின்னதெனவும் அறிந்து கொள்ளவும், பகையன் சினேகிதன் இவர்களை வேறு படுத்திக் கொள்ளவும் ஹேது உண்டாய் விடுகின்றது. நமது பார்வைக்கு வெளிரங்கத்தில் தென்படும் சூரியனுனது நுபுவ்வத் தென்னும் சூரியனுக்கு பிரகாசமளிப்பதிலும், படைப்புகளுக்கு விமோசன மளிப்பதிலும் ஒற்றமைமந்திருக்கிருக்கின்றது. ஆதலின் எவ்வாறு நுபுவ்வத் தென்னும் சூரியனின் ஒளியைக் கொண்டன்றி நேர்வழி பெற முடியாதோ அவ்வாறே உலக ஜீவிப்பிற்கு சூரிய ஒளியில்லாது யாதொரு பிரயோசனத்தையும் அடைய முடியாது. இத்தியாதி பிரயோசனங்களும் இச்சூரியனுலேயே உண்டாகின்றது. அதாவது மானிடனது ஜிவிப்பிற்கு சூரியன் சந்திரன் இரவு பகல் வானம் பூமி இவைகளினது பிரயோசனங்கள்வேண்டற்பாலனவாகயிருப்பதே போன்று அவன் மறுமைக்காகவும் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வெள்ளாமை செய்ய நாடின் நுபுவ்வத் தென்னும் சூரிய வெளிச்சமும் அது சம்மந்தமான சகல வஸ்துக்களும் அவனுக்கு மிகமிகத் தேவை யுள்ளனவாக ஆய்விடுகின்றன. ஆதலின் அவைகளை இங்கு குறிப்பிடுவது ஆவசியமாய் விட்டது. இவ்வுலகின்கண் வெள்ளாமை செய்பவனுக்கு ஆறு வஸ்துக்கள் பிரதானமாக வேண்டற்பாலனவாக யிருக்கின்றன. (1) சூரியன், அதாவது தானியம் பூமியில் விழுந்தபிறகு இதன் உஷ்ணத்தினுல் தான் அது முளைக்கின்றது; இதன் உஷ்ணத்தைக் கொண்டேதான் அது வளர்கின்றது; அவ்வுஷ்ணத்தைக்கொண்டே கனி புஷ்பம் உற்பத்தியாகின்றது; இதன் சுற்றுதலைக் கொண்டு தான் கால வேறுபாடுகள் ஏற்படுகின்றன. (2) சந்திரன், இதனுல் தான் கனிவர்க்கங்களில் சத்து எற்படுவதுடன் கடலின் பெருக்கும் வடிவும் எற்படுகின்றது; இரவில் சூரியனின் பிரதிநிதியாகவுமிருக்கின்றது. (3) பகல்காலம், இதில்தான் மானிடர்களுக்குப் பிரயோசன மளிக்கும்படியாகிய பற்பல காரியாதிகளைப் புரிய வேண்டியிருக்கின்றது. (4) இரவு, இதில் மானிடர் சுகம் பெறுகின்றனர்; பகலில் எற்படும் சிரமமனைத்திற்கும் பரிகாரந் தேடிக் கொள்கின்றனர் இரவில் உண்டாகும் பனியானது பகற் காலங்களில் ஏற்படும் உஷ்ணத்தை

நீக்கி விடக்கூடியதாக யிருக்கின்றது. (5) வானம், மழை பெய்வது இதிலிருந்தே உண்டாகிறது; இதிலேயே சூரியன் சந்திரன் இவைகளிருக்கின்றன. (6) பூமி, அது நல்ல விதமாக இருப்பது கொண்டு தானியங்கள் உற்பத்தியாகின்றன. ஆதலின் மானிடன் மறுமையிலடையக் கூடியவைகளுக்குள்ள பாக்கியங்களை பயிறிடுவதற்காகவே இவ்வுலகின்கண் அனுப்பப்பட்டிருப்பதால் மேலே குறிப்பிடப் பட்டதே போன்று இதற்காகவும் ஆறு வஸ்துக்கள் அத்தியா அவசியமாக யிருக்கின்றது. (1) நுபுவ்வத் தென்னும் சூரியன். அதன் காரணமாய் மறுமையில் ஜெயம் பெற்றுய்வதற்குள்ள சகல விஷயங்களும் நன்கு துலாம்பரமாய் விடுகின்றது. (2) நுபுவ்வத் தென்னும் சூரியனுக்குப் பின் அதன் ஸ்தானத்திலிருக்கக் கூடியதும், அதற்குப் பகரமாக வரக்கூடியதுமாகிய ஒளிதரத்தக்க சஹாபாக்கள், உலமாக்க ளென்னும் சந்திரன். எவ்வாறு சந்திரனுக்கு சூரியனால் ஒளி எற்படுகின்றனவோ அதேப் போன்று சஹாபாக்கள் அன்பியாக்கள் உலமாக்களினது பிரகாசமும் நாயகம் (ஸல்) அவர்களினின்றே ஏற்படுகின்றது. (3) நற்கருமங்கள் புரிவதற்கு ஒப்பாக்கப்பட்ட பகல். (4) சகல காரியாதிகளையும் விட்டு ஒழிந்திருப்பதற்கு ஒப்பிடப்பட்ட இரவு. (5) மானிடனை அவனது நிர்ணயத்திலும் நடப்பிலும் நானுபாகங்களிலும் சூழ்ந்து கொண்டிருக்கிற ஷரீஅத்தென்னும் வானம் இதிலிருந்துதான் பிரீதி என்னும் காற்று வீசுகின்றது. எவனொருவன் மார்க்கவரம்புக் கடந்து இவ்வெள்ளாமை புரிய நாடுகின்றானோ அவன் வானத்தை விட்டு வெளிஎர நாடுபவன் போலிருக்கின்றான். (6) மானிடனது மனதின் விசாலத்திற்கு ஒப்பிடப் பட்டிருக்கும் பூமி. இவைகளில் மிக மேலானதும் பிரதானமானதுமாகிய வஸ்து சூரியனேயாகும். அதற்கு அரபியில் ஷம்ஸ் எனப்படும். இத் திரு அத்தியாயத்தின் ஆரம்பத்தில் மிகமேலான ஷம்ஸ் (சூரியன்) என்னும் பதம் குறிப்பிடப்பட் டிருப்பதால் இது ஸூரத்துஷ்ஷம்ஸ் என்னும் பெயரோடு வழங்கப் பெருகின்றது.

இதன் ஒன்பதாவது வஸனத்தில் தன்னைப் பரிசுத்தப்படுத்தியவன் நிச்சயமாகவே ஜெயம் பெற்று விட்டான் எனக் கூறப்பட்டிருக்கிறது அவ்வாறு பரிசுத்தப்படுத்துவதற்குள்ள வழியாவது:—மானிடன் இச்சை கோபம் இவ்விரண்டும் ஏற்படுகின்ற சக்திகளை அடக்கி புத்தி என்னும் இரத்தினத்திற்கு அடிபணியச் செய்ய வேண்டியதும், புத்தியை மார்க்கத்திற்கு கட்டுப்பட்டுநடக்கச் செய்யவேண்டியதுமேயாகும் அதனால் மனம் ஆத்மா இவ்விரண்டும் ஆண்டவனது ஒளியினால் பிரகாசித்திலங்கிக் கொண்டிருக்கும்; இதன்காரணமாய் மானிடன் மலக்குகளைவிட மேன்பதவி அடைந்து பெரும் ஜெய சீலனாகி ஆய்விடுகின்றான் என்பதே.

இதன் 11-வது வஸனத்தில் தமூத் வர்க்கத்தினர் தங்களது அக்கிரமத்தின் காரணமாக ஆண்டவனுடையவும் அவனது ரசூலினுடையவும் கட்டளைகளைப் பொய்யாக்கி வைத்து விட்டார்களெனக் கூறப்பட்டிருக்கிறது அதாவது:— தமூத் கிளையாரின் மனோ இச்சை, நப்ஸின் விருப்பம் முதலியவைகள் அவர்களின் புத்தி மார்க்கம் இவைகளை மிகைத்து அவைகட்கு அதிகாரியாக ஆய்விட்டதின் காரணமாக அவர்கள் இவ்வாறு பொய்யாக்கி வைக்கும்படி நேர்ந்தது. ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களது சந்ததிகளின் நான்காம் தலைமுறையில் தமூத் என்னும் பெயருடைய ஒருவரிருந்தார்; அக் கூட்டத்தினர் மரணமடைந்துவிட்ட பின் தமூதின் சந்ததிகள் நானா பாகங்களிலும் வதிந்து வந்ததுடன் பற்பல ஊர்களுக்கும் அதிபதியாகவுமாய்விட்டார்கள். அவர்களது புராதன ஊர்களில் ஹிஜாஸுக்குச் சமீபமாக "வாதியகுரா" என்னுமொரு பட்டணமிருந்தது; இவ்விரண்டிற்குமிடையில் 1700 சிறிய பெரிய ஊர்களிருந்தன; அவை யாவற்றும் அவர்கள் வசமே யிருந்தது; அவ்வூர் வாசிகள் கல் சித்திர வேலையில் தேர்ச்சிபெற்றிருந்ததுடன் வெள்ளாமை செய்துகொண்டு மிருந்தனர்; அதற்காகத் தோட்டங்களில் பெரும் பெரும் கிணறுகளை வெட்டி யிருந்தார்கள்; அங்கு தண்ணீர் கிடைப்பது பெரும் அரிதாக யிருந்ததுடன் கல் கறடான தேசமாகவுமிருந்ததால் பெரும் பிரயாசை, பணச் செலவு முதலியவைகளைக் கொண்டுதான் கிணறு தோண்ட வேண்டியிருந்தது; அவர்களின் தனங்களி லனேகம் கட்டட வேலைகளிலும் பூங்காவன உற்பத்தியிலும் மலைக்

குள் கிணறு தோண்டுவதிலும் கற்களில் சித்திர வேலைகள் செய்வதிலுமே செலவாய்க் கொண்டிருந்தன. முடிவாகக் கூறுமிடத்து சித்திர வேலைகளில் தேர்ச்சிபெற்று விளங்கக் கூடிய மாபெரும் சிற்பிகளைக்கொண்டு மலைகள்மீது சித்திர வேலைப்பாடுகளும் செடி கொடிகளும் உண்டுபண்ணுவதிலேயேஈடுபட்டிருந்ததுடன் கற்களில் அழகிய உருவச்சிலைகளையும் செதுக்கி அதை வணங்கி வருவதற்கும் ஆரம்பித்து விட்டனர். சிலநாட்களுக்குள் அவர்கள் யாவரும் உருவச்சிலை வழிப்பாடுடையவர்களாகவே ஆய் விட்டனர்; அதனால் அவர்கள் ஆண்டவனை முழுதும் மறந்து தங்கள் இஷ்டப்படி நடக்க முற்பட்டனர். அதுபொழுது ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களுக்கு நபிப் பதவி அளித்து வஹியை அனுப்பி அக்கூட்டத்தினர்பால் அனுப்பிவைத்து அவர்களை விக்கிரஹப் பூஜையிலிருந்து தடுக்க வேண்டுமெனவும், ஆண்டவனது வணக்கத்தின் பக்கல் அவர்களுக்கு பிரீதி ஏற்படும்படி செய்யவேண்டுமெனவும் ஆண்டவன் அவர்களுக்களித்திருக்கும் அளவற்ற - மட்டிலடங்கா காருண்யங்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்களெனவும், அகப்பெருமை தற்பெருமை முதலியவைகளை விட்டுவிடும்படியும் கட்டளை பிறப்பித்தான். அதற்கேற்ப ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களும் தங்கள் கூட்டத்தினர்கட்குப் பிரசாரஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் யாவரும் இவர்களது பிரசாரத்திற்குக் கிஞ்சிற்றேனும் தலைசாய்க்காது போனதுடன் நபீ அவர்களிடம் (முஃஜிஸா) அற்புத நிகட்சிகள் ஏற்பட வேண்டுமெனவும் கேட்டார்கள். "உங்கள் விருப்பப்படியே அற்புத நிகட்சிகள் ஏற்பட்டபின் நீங்கள் என் வார்த்தையைக் கேளாமலும், என்னைக்கொண்டு ஈமான் கொள்ளாமலுமிருப்பீர்களேல் நீங்கள் யாவரும் ஆண்டவனது தெண்டனைக்குட்படவேண்டி யிருக்கும்" என நபீ அவர்கள் கூறினார்கள். அவர்கள் யாவரும் இவ்விஷயங்களை உண்மையென நினையாது கூறியதாவது:—நாங்கள் யாவரும் ஒவ்வொராண்டிலும் இன்னதினத்தில் ஊரைவிட்டு வெளியே சென்று விக்கிரஹங்களுக்கு பல்வகையான ஆபரணதி பிடவை முதலியவைகள் அணிவித்து அவைகளை சிங்காரித்து வெளியில் கொண்டுவந்து வைத்து, வருடம் முழுதிற்கும் எங்களுக்குத் தேவைப்படுபவைகளை அவைகளிடமே கேட்டுக் கொள்கின்றோம்; அவைகள் எங்களுக்குத் தேவைப்படுபவைகளை அளிக்கின்றன; நீரும் அன்றைய தினம் எங்களுடன் அங்குற்று உம்முடைய நாயனிடம் உமக்குத் தேவையானவைகளைக் கேளும்; அவன் உமக்கு எவ்வாறு அளிக்கின்றான் என்பதைப் பார்ப்போம் எனக்கூறினார்கள். ஹஸ்ரத் அவர்கள் இதை ஒப்புக்கொண்டு குறிப்பிட்ட தினத்தில் அவர்களுடன் ஊருக்கு வெளியே சென்றார்கள். நபீ அவர்களது சொல்லுக்கு ஐக்கியப்பட்டு ஈமான் கொண்டிருந்தோரும் அவர்களுடன் புறப்பட்டார்கள். ஆங்கு சென்று விக்கிரகங்களை அழகு படுத்தி பலகையின் மீது உட்காரவைத்து அதற்குமுன் மரியாதையோடு தலைசாய்த்த வண்ணமே நின்று தங்களுக்குத் தேவையான வஸ்த்துக்கள் யாவற்றையும் அவைகளிடம் கேட்டுக்கொண்டிருப்பதை ஹஸ்ரத் அவர்கள் பார்த்துக் கூறியதாவது:—நீங்கள் உங்கள் விக்ரஹங்களிடம் நூதனமாகிய ஏதாகிலுமொரு வஸ்த்துவைக் கேளுங்கள்; அவைகள் அதனை அளிக்க சக்தி பெற்றிருக்கின்றனவா என்பதைப் பார்ப்போம் என்பதே. அம்மதிகெட்ட வர்க்கத்தினர் இதை ஒப்புக்கொண்டு மிகுந்த பயபக்தியோடு ஆச்சரியமானவும் நூதனமானதுமாகிய ஒரு வஸ்துவைக் கேட்டு அளவற்ற அழுகை துக்கத்துடன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் யாதொன்றும் அவர்களுக்குக்கிட்டவில்லை. கடைசியாக ஒன்றுமியலாதவர்களாகச் சோர்வுற்று உட்கார்ந்து விட்டார்கள். அதுபொழுது நபீ அவர்கள் முன்வந்து நீங்கள் அனுமதி அளிப்பீர்களேல் சகல வஸ்துக்களின்மீதும் சக்தி பெற்றிருக்கும் அல்லாஹ்வின் திருசமுகத்தில் கைநீட்டி தேவையானவற்றை கேட்டுப் பெற்றுக்கொள்வது கொண்டு ஆண்டவனது சக்தி,கிருபை முதலியன அவனது உண்மை அடியார்கள் மீது எவ்வாறு ஏற்படுகிறதென்பதை நன்கு தெரிந்துகொள்வீர்களெனக் கூறினார்கள். ஜன்தஃபின் அமர் என்பார் அக்கூட்டத்தினரின் தலைவர்களின் முக்கியஸ்தராக விளங்கினர்; அவர் யாவரையும் பார்த்து சாலிஹிடம் ஒரு நூதன வஸ்த்துவை—அகப்படுவதற்கு அறிதான வஸ்த்து

வைக் கேளுங்கள் ; அவரால் கொண்டுவர முடியாது போகும்; அதுபொழுது நம்முடைய விக்கிரஹங்களின் மதிப்பும் குறையாதிருக்கும்; அதனால் நம்முடைய மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் ஹானி நேராதிருக்கும்; இதுவன்றி நாம் பெரும் கேவலமாக மதிக்கப்படுவோம் எனக் கூறினார். அதற்கு யாவரும் ஒன்று சேர்ந்து தாங்கள் எங்களுக்குத் தலைவராகவும், எங்களில் மாபெரும் புத்திசாலியாகவு மிருக்கின்றீர்கள் ; தாங்கள் நன்காலோசித்து அவரால் கொண்டு வருவதற்கியலாத ஒரு வஸ்த்துவைக் கேளுங்கள் எனக் கூறினார்கள். அதுபொழுது ஜந்தஃ என்பார் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, இம்மைதானத்திலிருக்கின்ற உயர்ந்த மலைக்குள்ளிருந்து ஒரு ஒட்டகம் வெளியாகும்படி செய்யுங்கள் ; அதன் நெற்றி கறுப்பாகவும் தேக முழுதும் வெண்மையாகவும், உரோமங்கள் நீண்டனவாகவும் மிருதுவானதாகவும், பத்து மாத கெர்ப்பமுடையதாகவும், பருமனுடையதாகவு மிருக்கவேண்டும். அவ்வாறுள்ள ஒட்டகம் கல்லிலிருந்து வெளிவந்தவுடன் எங்கள் முன் குட்டி போடவேண்டும். அதுவும் உருவத்திலும் பருமனிலும் நிறத்திலும் தாயைப் போன்றே இருக்க வேண்டும். ஆகவே இவ்வம்சங்கள் பொருந்திய ஒட்டகமொன்று வெளிவரச் செய்யுங்கள் பார்க்கலாமெனக் கூறினார்கள். இது கேட்டு ஹஸ்ரத் அவர்கள் அவ்வாறு அழைத்துவிடுவேனாகில் நீங்கள் யாவரும் ஆண்டவனது கட்டளைக்கு அடிபணிந்து ஈமான் கொண்டு விடுவீர்களாவென வினவியமைக்கு, எங்கள் கோரிக்கைப் பிரகாரம் ஏற்பட்டுவிடுமாயின் நிட்சயமாகவே நாங்கள் ஈமான் கொண்டு விடுகிறோமென அவர்கள் யாவரும் கூறினர். இவ்வார்த்தையின் மீது உறுதி வாங்கிக்கொண்டு ஈமான்கொண்டிருந்த சிலர்களை தங்களுடன் அழைத்துக்கொண்டு அக்கல்லுக்குச் சமீபம் சென்று இரு ரக்கஅத்துத் தொழுகை நிறைவேற்றி ஆண்டவனது சன்னிதானத்தில் பிரார்த்தனை புரிய ஆரம்பஞ் செய்தார்கள். அவர்களுடன் கூட யிருந்தவர்களும் ஆமீன் கூறினர். அதுபொழுது தமூத் வர்க்கத்தினருடைய தலைவர்களும் மற்றோரும் சூழால் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் ; திடுகூறாக அம்மலைக்குள்ளிருந்து உயிர் பிராணி கனைப்பதே போன்றுள்ள சப்தமொன்று வெளிவந்தது; அவ்வோசையானது உயிர் பிராணிகள் பிரசவிக்கும் சமயம்போடும் சப்தம்போன்றிருந்தது. அவர்கள் விரும்பியதே போன்று மலைக்கல்லுக்குள்ளிருந்து ஒட்டகம் வெளிவந்து அக்கானகத்தின்கண் மேய ஆரம்பித்தது. சற்று நேரத்திற்கெல்லாம் பிரசவ வேதனை ஏற்பட்டு கன்றொன்றை ஈண்டெடுத்தது. அது உருவ வடிவத்திலும் பருமனிலும் தாயைப் போன்றே யிருந்தது. இச்சம்பவம் நிகழ்வுற்றதைப் பார்த்து யாவரும் பெருங் கூக்குரலிட்டெழுந்து ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களது நாயன் மாபெரும் சக்தி வாய்ந்தவனாக யிருக்கின்றான் ; ஆதலின் அவன் மீது ஈமான் கொள்வது மாபெரும் கடமையாய் விட்டதெனக்கூற முற்பட்டனர். அது சமயம் தலைவரான ஜன்தஃ என்பார் 6000 பேர்களுடன் இஸ்லாத்திலாகி நபீ அவர்களது பாதார விந்தத்தில் விழுந்து முன் சென்ற விஷயங்கள் மீது வெட்கித்தவராய் மன்னிப்புத் தேடிக் கொண்டார்; மற்றவர்களோ தங்கள் கெட்ட காலத்தின் அறிகுறியாக நபீ அவர்களுக்கிணங்காது போனதுடன், சாலிஹின் மாயவலைக்குள் சிக்குண்டு மார்க்கத்தை விட்டு விடவேண்டாமெனவும் மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். தவிரவும் இது சோதனை காலமாக யிருக்கின்றது ; உங்கள் மார்க்கத்தின் மீதே ஸ்திரமாகயிருங்கள் நம்மிலுள்ள சில அனியாயகாரர்களோ வெனில் தங்கள் தலைவனது வார்த்தையைக் கேட்டுக்கொண்டு வழி தவறிவிட்டார்கள் எனவுங்கூறி ஹஸ்ரத் அவர்களை மாபெரும் சூனியகாரரென தீர்மானித்துச் சென்று விட்டார்கள். அது பொழுது நபீ அவர்கள் கூறியதாவது :—ஏஜனங்களே ! நீங்கள் அறுதிமானத்திற்கு மாற்றஞ் செய்ததுடன்; என்மீது ஈமானும் கொள்ளவில்லை ஆதலின் நீங்கள் ஆண்டவனது வேதனைக்கு பாத்தியஸ்தர்களாக ஆய்விட்டீர்கள் ; என்கிலும் அதை விட்டுத் தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு வழி தானிருக்கின்றது ; அதை நீங்கள் கவனித்து நடந்து வரும்வரை உங்களுக்கு ஆண்டவனுடைய வேதனை வந்தணுகாது ; அதாவது நீங்கள் இவ்வொட்டகத்தையும் அதன் குட்டியையும் உங்களூரில் வைத்து நல்ல விதமாக எவ்வளவு

தூரம் பாது காத்து வருகின்றீர்களோ அது வரை ஆண்டவனது வேதனை உங்களை வந்தணுகா. எவ்வாருயினும் அதற்குக் கெடுதி செய்ய முற்படுவீர்களேல் அதனுல் நீங்கள் ஆண்டவனது கோபத்திற்குப் பாத்தியஸ்தர்களாய் விடுவீர்கள் என்பதே. அவ்வொட்டகமானது மிகப்பருமனுடைய தாகயிருந்தமையால் எப்பிராணியும் அதைப் பார்த்து பயந்து அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்குங்கூட, அடி எடுத்து வைக்காமலே யிருந்தது. ஏதாகிலுமொரு கிணற்றிலோ, குளத்திலோ அது தண்ணீர் குடிக்கச் செல்லுமாகில் அங்குள்ள தண்ணீர் யாவற்றையும் குடித்து விடுவதும், மேயச்செல்லுகின்ற இடத்திலுள்ள வஸ்துக்கள் யாவற்றையும் ஒன்று விடாது மேய்ந்து விடுவதும், அதன் வழக்கமாக யிருந்தது. மேய்ந்து திரும்புங்கால் ஊர்வாசிகள் யாவரும் தங்கள் பாத்திரங்களைக் கொண்டு வேண்டிய மட்டில் பால் கறந்து கொள்வர்; இவ்வாறு சில காலம் நடைபெற்று வந்ததால் ஊர்வாசிகளிடமிருக்கும் பிராணிகள் மேய்வதற்கும் தண்ணீர் குடிப்பதற்கும் சௌகரிய மில்லாது போய் விட்டது இது விஷயமாக ஊர்வாசிகள் ஹஸ்ரத் அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார்கள் ; அதத்கு ஹஸ்ரத் அவர்கள் ஒரு முடிவுசெய்து ஊரிலுள்ள சகலப்பிராணிகள் ஒரு நாளும், ஒட்டகத்திற்கு ஒரு நாளுமென முறை ஏற்படுத்தினர்கள்; கடைசியாக இது அவ்வூர் வாசிகளுக்கு கஷ்டமாகத் தோன்றி எவ்வகையிலும் அப்பிராணியைக் கொன்று விடவேண்டுமென உறுதிகொண்டனர் என்ருலும் அறுதிமானத்தை முறிப்பது கொண்டு பெரும் சங்கடங்கள் நிகழ்வுருமென்னும் எண்ணமானது அவர்களை அக்காரியத்திலீடுபடாது செய்திருந்தது. அக்கூட்டத்தாரிலுள்ள கதார் என்பான் ஒரு பெண்ணின் மீது காதலுற்றிருந்தான்; அவள் மிக அழகு சுந்தரியாதலால் அவள் மீது பலரும் காதல் பூண்டு அவளிடம் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் கதார் என்பவன் துர்நடத்தையுடைய அப்பெண்ணிடஞ் சென்று நாமிருவரும் சினேகிதத்தை இவ்வாறு மறைமுகமாக எத்தனை நாளைக்கு வைத்துக் கொண்டிருப்பது ; பஹிரங்கமாக ஏன் விவாகஞ் செய்து கொண்டு சந்தோஷமாகக் காலங்கழிக்கலாகாது எனக்கேட்டான். அவள், என்னை மணந்து கொள்ள உமக்கு விருப்பமிருப்பின், எனக்குள்ள ஒரு பிரதான நாட்டத்தை நிறைவேற்றி வையும்; பிறகு என் வேலையாட்கள், பிராணிகள், சாமான்கள் சகிதம் உமக்கு அடிபணிந்து விடுகிறேம் எனக்கூறித் தன் கோரிக்கையைத் தெரிவித்துக் கொண்டாள். அதாவது எனக்கும் மற்றும் ஊர்வாசிகளுக்கும் சதா தொந்திரை கொடுத்துக்கொண்டிருக்கும் ஒட்டகத்தைக் கொன்றுவிடவேண்டுமென்பதேயாகு மென்ருள். அவளிடம் மிகுதமான பிராணிகளிருந்ததால் யாவர்களைப்பார்க்கினும் அவளுக்கு அவ்வொட்டகத்தின்மீது அதிகக் கோபமேற்பட்டிருந்தது. முடிவாக அற்ப சுகத்தைக்கருதி மாபெரும்பாவமான காரியத்தைச்செய்ய கத்தார் என்பான் முடிவு செய்துகொண்டு அதற்குள்ள யோசனை செய்து தன் சினேகிதர்களையும் அதில் ஈடுபடுத்திக்கொண்டு சமயம்பார்த்து நெருக்கமுள்ள ஓர் தெரு வழியில் தன் சினேகிதர்களுடன் வழிமறித்து உட்கார்ந்துகொண்டு "அவ்வொட்டகம் வருவதைப்பார்த்து மிஸ்தஃ என்பான் அதன் நெற்றியைப்பார்த்து ஈட்டியால் குத்தவே, கூடயிருந்த ஏழுபேரும் வாளை உருவிக் கொண்டு சத்தமிட்டவர்களாக அதன் சமீபத்தில் சென்ருர்கள். அது காயப்பட்டிருந்த போதிலும் யாரையும் தன் சமீபம் வரவிடவில்லை. கடைசியாக கத்தார் என்பான் அதற்குப் பின்சென்று அதன் திமிழின்மீது வாள் வீசினன் அதனுல் அவ்வொட்டகம் பூமியின் மீது விழுந்தது; உடனே கூடயிருந்த யாவரும் சமீபஞ்சென்று வாள்கொண்டு அறுத்துத் துண்டந் துண்டமாக ஆக்கி மாமிசத்தைப்பங்கிட்டுச் சென்றுவிட்டனர். கானகஞ் சென்று மேய்ந்துவிட்டு தாய்க்குப் பின்வந்த கன்ருனது இச்சம்பவத்தைப் பார்த்துப் பயந்து திரும்ப அம்மலைக்கே ஓடி அதன்மீது நின்றுகொண்டது ; இது செய்தி ஹஸ்ரத் சாலிஹ் (அலை.) கேள்வியுற்று மிக சஞ்சலத்துடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுவந்து, நீங்கள் பெரியதோர் கஷ்டத்தைச் சம்பாதித்துக் கொண்டீர்கள் ; அதை விட்டுத் தப்புவதற்கு யாதொரு மார்க்கமு மில்லாதிருக்கிறது ; ஆனுல் நீங்கள் என்னுடன்வந்து அக்குட்டியைத் திரும்பக் கொண்டு வருவீர்களேல் ஒருக்கால் உங்களுக்கு ஆண்டவனது

வேதனை ஏற்படாதிருக்கக் கூடுமெனக் கூறினார்கள். இதுகேட்டு அநேகர் அசட்டையாக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் முஸ்லிம்களுடன் அம்மலைக்குச் சென்றார்கள் இவர்களைப்பார்த்ததும் அது மூன்று சத்தம் கொடுத்துவிட்டு உடனே மலைப்பிளப்புக்குட் சென்று விட்டது. இதைப்பார்த்து சாலிஹ் (அலை.)அவர்கள் மனம்வருந்தி, திரும்பவந்து ஊர்வாசிகளை நோக்கி உங்களுக்குக் கஷ்டத்தை நீங்களே வருத்திக்கொண்டீர்கள்; குட்டியானது மூன்று முறை சப்தம்கொடுத்ததின் காரணமானது, உங்களுக்கு ஆண்டவனுடைய வேதனை ஏற்படுவதற்கு மூன்றுநாட்கள் தவணை கொடுக்கப்பட்டிருக்கின்றது; அதற்குப்பின் அடுத்நாள் உங்கள் முகம் மஞ்சளாய்விடும்; இரண்டாம்நாள் சிவந்துவிடும்; மூன்றாம்நாள் கறுப்பாய்விடும் என்பதுதான் கருத்தாகும் எனக் கூறினார்கள். அஃதேபோன்று மூன்றுநாட்கள் கழிந்தவுடன் யாவருடைய முகமும் மஞ்சனித்துப் போயிற்று. இதைப்பார்த்து ஹஸ்ரத் அவர்கள் சொன்னது உண்மை என யாவருக்கும் புலனாய்விட்டது என்றாலும் அவர்களுக்கேற்பட்ட கோபமேலீட்டால் புத்தி என்பதையே இழந்தவர்களாய் மூன்றாம்நாள்வருவதற்குள் ஹஸ்ரத் அவர்களையே கொன்றுவிட சதியாலோசனை புரிந்தார்கள். இதற்காக இரவிலேயே ஒன்பது நபர்கள் ஹஸ்ரத் அவர்களது வீட்டுக்குச்சென்று பார்த்தபொழுது அவர்களைக் கண்டுகொள்ள முடியவில்லை; அதுசமயம் ஹஸ்ரத் அவர்கள் பள்ளியிலிருந்தார்கள் அதில் ஓர் மரமிருந்தது அது உறத்ததொனியில் கதார் என்பான் தன் கூட்டாளிகளுடன் தங்களைநாடி வந்திருக்கின்றான்; தாங்கள் வீட்டுக்குச்சென்று கதவைத் தாளிட்டுக் கொள்ளுங்களெனக் கூறிற்று. ஹஸ்ரத் அவர்களும் அதுபோல் வீட்டுக்குச் சென்று தாளிட்டுக் கொண்டார்கள். அம் மூதேவிகள் யாவரும்வந்து பார்த்தும்கிடைக்காமையால் கதவை உடைத்து உள்புகுந்து மரியாதைக்குறைவு செய்துவிடக்கருதி வருங்காலை ஆண்டவனது கட்டளைப்பிரகாரம் ஓர் மலக்கானவர் ஹஸ்ரத் அவர்களின் உதவிக்காக ஆங்குற்று தமது இறக்கையை அம் மூதேவிகளது முகத்தின்மீது படும்படி செய்தார். உடனே அவர்களெல்லோரும் குருடர்களாய் தட்டுத் தடுமாறி அங்குமிங்கும் மோதிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். இவ்வாறு ஓடும்போது சிலரின் தலை, சுவற்றில் மோதி உடைந்துபோயும் சிலர் கிணற்றில் விழுந்தும் மரணமடைந்து விட்டார்கள். சுறுங்கக்கூறின் அவ்வொன்பது நபர்களும் மரணித்து இரு பதியினுடைய நஷ்டத்தையுஞ் சம்பாதித்துக் கொண்டார்கள். மறுதினம் ஊர்வாசிகள் எழுந்தவுடன் யாவருடைய முகமும் சிவந்திருப்பதைப் பார்த்தார்கள். கதாரின் பந்துக்களெல்லாம் அவனைத் தேடி வருங்காலை சாலிஹ் (அலை.) அவர்களது வீட்டுக்குச் சமீபமாக அவ்வொன்பது நபர்களும் மறித்துக் கிடப்பதைப் பார்த்து இச்செய்தியை ஊர் தலைவர்களுக்கு அறிவிப்பதற்காக ஆங்கு சென்று நிகட்சிகளைக் கூறவே, யாவரும் சேர்ந்து ஹஸ்ரத் அவர்களைச் சூழ்ந்துகொண்டு ஒரு ஒட்டகத்திற்காகவா எங்களில் ஒன்பது நபரைக் கொன்றிருக்கின்றீர்கள். அதற்குப்பகரமாக உங்களையும் உங்கள் குடும்பத்தினர்களையும் கொன்று விடுவோமெனக் கூறினார்கள். இதுகேட்டு ஹஸ்ரத் அவர்கள், நான் இவர்களைக் கொல்வதற்காக இவர்களது இருப்பிடத்திற்குச் செல்லவில்லை; இவர்கள் தாங்களே என் வீட்டுக்கு வந்திருக்கின்றார்கள்; இதைப் பார்த்து ஆண்டவன் அவர்களுக்கு தெண்டனை கொடுத்திருக்கின்றான் எனக் கூறினார்கள். இவ்வாறு வார்த்தையாடிக் கொண்டிருக்குங்கால் ஏற்கனவே இஸ்லாம் மதத்தைத் தழுவியிருந்த ஜன்தஃ என்பவர் ஹஸ்ரத் அவர்கள்மீது அளவற்ற அன்பு பூண்டிருந்ததின் காரணமாக தன்னைப் பின்பற்றியோர் சகிதம் ஹஸ்ரத் அவர்களது உதவிக்காக அங்கு வந்துசேர்ந்து அக்கூட்டத்தினருடன் எதிர்த்துப் போராடவே, சிலர் குறுக்கிட்டு மத்தியஸ்தஞ்செய்து ஹஸ்ரத் அவர்களை ஊரைவிட்டுச் சென்றுவிட வேண்டுமென முடிவுசெய்தார்கள். இது சரியெனக் கண்டு தங்களைத் துயர்ந்தோர் சகிதம் ஊரைவிட்டு வெளியே போய் விட்டார்கள். மூன்றாம் நாள் ஊர் வாசிகள் விழித்தெழுந்தவுடன் யாவரின் முகமும் கறுத்திருப்பது பார்த்து யாது நிகழப் போகின்றனவோ என்னும் கலக்கத்திலிருந்தார்கள். கடைசியாக ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஆண்டவனது கட்டளைப்பிரகாரம் பூமிக்கும் வானத்திற்குமிடையில் ஒரு பயங்கர

மான தோற்றத்தில் வெளியாகி, ஒரு சப்தம் கொடுத்தார்கள். அதனால் மலைகள் யாவற்றும் நடுங்கி அசை உற்றது ; பட்டண வாசிகளும் பயத்தினால் நடுக்கமுற்றவர்களாய் பெரும் பெரும் கட்டடங்களுக்குள் புக ஆரம்பித்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) முன்னைவிட பெரும் சப்தமொன்று கொடுத்தார்கள். அதன் காரணமாய் ஊர் வாசிகள் யாவரும் குப்புற விழுந்து நெஞ்சுடைந்து நரகத்திற்குப்போய் சேர்ந்துவிட்டார்கள். அதில் ஒருவரேனும் மிஞ்சவில்லை. இது தெரிந்து ஹஸ்ரத் அவர்கள் இது ஆண்டவனால் மிக கோபமாக்கப்பட்ட ஊராக யிருக்கின்றது ; இதற்குள் நுழையலாகாதெனக்கூறி அதைவிட்டுப் புறப்பட்டு மக்கமா நகருக்குச் சென்று அங்கிருந்தார்கள். ஆதலின் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களால் காட்டப்பெற்ற நேர் வழியைப் பின்பற்றாது, தமூத் வர்க்கத்தினர் தங்கள் ரசூலாகிய சாலிஹ் (அலை) அவர்களைத் துன்புறுத்தியதே போன்று நாயகம் (ஸல்) அவர்களையும் துன்புறுத்துவார்களாயின் அவர்களுக்கேற்பட்ட கெதியே இன்னோர்க்கும் ஏற்பட்டு விடுமென இவ்வத்தியாயம் எச்சரிக்கை செய்யா நிற்பது காண்க. (அல்லாஹ் அஃலம்)

நாயக வாக்கியம்

ஆண்டவன்மீதும், இறுதித் தீர்ப்புநாளின்மீதும் (ஈமான்) உறுதிகொண்டிருக்கும் மாதுக்கள், மரணமாய்விட்ட எந்த மையத்தின்மீதும் மூன்று தினங்களுக்கு மேல் துக்கங் கொண்டாடுவது கூடாத காரியமாகும். ஆனால் புருஷன் இறந்துவிட்டதற்காக 4-மாதம் 10-நாள் (இத்தா) துக்கம் கார்க்கவேண்டியது அவசியமாகும்

சோதரீர் ! மாதர்களின் பலஹீனமானது அவர்களை துக்கங் கொண்டாடுவதில் ஆண்களைப்பார்க்கினும் மிகைப்படுத்தி வைத்திருக்கின்றது. அதனால் மரணமடைந்து விடுபவர்களுக்காக ஆண்கள் துக்கப்படுவதைப் பார்க்கினும் பெண்மணிகள் பதிமடங்கு அதிகமாக துக்கங் கொண்டாடுகின்றனர். ஆதலின் மேலே கூறப்பெற்றுள்ள நாயக வாக்கியத்தில் பெண்டிர்கள் துக்கங்கொண்டாடுவது கூடாதென வற்புறுத்தப்பட்டிருப்பது காணலாம். தவிர ஆண்டவன்மீது ஈமான் கொள்வது, மறுமை நாளின்மீது உறுதி கொள்வதுமாகிய முஸ்லிம் மாதுக்களுக்குறிய இரு அம்ஸங்களையும் ஹதீதில் சேர்க்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கனவேயாகும். அவ்வாறின்றி சாதாரணமாக முஸ்லிம் மாதர்கள் தம் புருஷனல்லாதவர்கள் மரணமாய் விடுவார்களேல் அவர்கள் மூன்று தினங்களுக்குமேல் துக்கங் கொண்டாடுவது கூடாதென கூறப்பட்டிருக்குமாயின் யாவர்களும் அதற்குத் தலைசாய்த்து நிற்பர். அவ்வாறின்றி பெண்களின் இரு குண அம்ஸங்களைக் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருப்பதானது அம்மாதுக்கள் தங்களது துவர்க்கத்தையும் முடிவையும் யோசிக்க வேண்டுமெனவும், துக்கம் நேரிடுங்கால் முடிவை மறந்திருக்கலாகாதென்பதை அறிவித்துக் கொடுக்கவுமே கூறப்பட்டனவாகும். அதாவது அம்மாதுக்கள் தாங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டிருப்பதையும், ஜீவிக்கச்செய்வது மரணிக்கச் செய்வது இவ்விரண்டிற்கும் அவன் அதிபதியாக யிருப்பதால் அவன் கட்டளைப் பிரகாரமே ஜனிக்கின்றோம் மரணிக்கின்றோம் ; அவ்வதிகாரத்தில் யாருக்கும் சம்மந்தமில்லாதிருக்கிறது; யாவரும் மரணமடைந்த பின் எழும்பி கணக்குகளை ஒப்புவிக்க நேரிடுமென்பதையும் சிந்தனை செய்து பார்ப்பார்களாயின், அதன்மீது ஏற்படும் துக்கமும் கவலையும் மிகைத்து மரணிப்பவர்கள் மீது கவலை கொள்ளாமற் செய்து விடும். அவ்வாறு துக்கம் ஏற்படுங்கால் ஆண்டவனுடையவும் இறுதித் தீர்ப்பு நாளினுடையவும் ஞாபகமானது அம்மாதுக்களை முற்காலத்திய பழைய துர்அனுஷ்டானத்

தைவிட்டும் தடுத்துவிடும். இந்த ஹதீதை நன்கு கவனித்துப் பார்ப்போமாயின், நமது பெண்மணிகளிடம் காணப்பெறும் துக்கங் கொண்டாடுவதென்னும் புயல் காற்ருனது அதிசீக்கிரம் மறைந்து போய்விடுமென்பது திண்ணம். இதுபொழுது மரணமடைபவர்களுக்காக பற்பல மாதக் கணக்கிலும் வாரக் கணக்கிலும் துக்கங் கொண்டாடப்படுகிறது; இவ்வாறு கொண்டாடுவதானது மனிதத் தன்மைக்குறியது எனக் கூட நினையாது மார்க்கக் கடமை என்பதாகவே கருதப்படுகிறது. மார்க்கமோ புருஷனல்லாதவர்களுக்காக மூன்று தினங்களுக்குமேல் துக்கங் கொண்டாடக் கூடாதென வற்புறுத்திக் கூறுகின்றது அபூஸுப்யான் மரணமடைந்த மூன்ரும் நாள் நாயகம் (ஸல்) அவர்களினது அருமைப் பத்தினியும் அபூஸுப்யானின் புதல்வியுமான ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் வாசனையுள்ள ஒர் வஸ்துவைத் தருவித்து அதனை முகத்திலும் கையிலும் தடவிக்கொண்டு இதைப் பூசிக்கொள்ள வேண்டுமென்னும் ஆவசியம் எனக்கில்லை; ஆனல் ஆண்டவன் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின்மீதும் உறுதி கொண்டிருக்கும் எப்பெண்மணியும் தன் புருஷனல்லாதோர் மரணித்து விடுவதற்காக மூன்று தினங்களுக்குமேல் துக்கங் கொண்டாடக் கூடாதென ரசூல் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்ருர்கள். துக்கத்தை விட்டதற் கறிகுறியாக வாசனை பூசிக்கொண்டிருக்கின்றேன் எனக் கூறினர்கள். ஆதலின் அவர்கள் வாசனை வஸ்துவைப் பூசிக்கொண்டதானது நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் மூன்று தினங்களுக்குமேல் துக்கங் கொண்டாடும் வழக்கமில்லை என்பதை நன்கு தெரிவிக்கின்றது. அருமை நாயகியாரவர்கள் தன் தந்தை மரணித்துப் போயுங்கூட; நாயகம் (ஸல்) அவர்களது கட்டளைக்காக துக்கங் கொண்டாடுவதை மூன்ரும் நாளோடு முடித்துக் கொண்டார்கள். ஆதலின் நம் முஸ்லிம் நேயர்கள், ஹிந்துக்களைப் போன்று மாதக் கணக்கிலும் வாரக் கணக்கிலும் துக்கங் கொண்டாடும் பெண்மணிகளுக்கு இந்நாயக வாக்கியத்தைத் தெரிவித்துவிட வேண்டியது அவசியமாகும். இந்நிலைமையில் சிலர் பனிரண்டு மாதங் கழிந்துங்கூட தங்கள் துக்கத்தை நீக்கிக்கொள்வதில்லை; இதற்கிடையில் அவர்கள் வீட்டில் யாதொரு விவாகமும் நடைபெறுவதில்லை; எவ்வித சந்தோஷ வைபவங்களிலும் கலந்துகொள்வது கிடையாது. ஆதலின் நம் முஸ்லிம் மாதர்கள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் நடந்து வந்ததே போன்று நடந்துகொள்வதற்கு ஆண்டவன் கிருபை பாலிைப்பாைகவும். தவிர மடமையே குடிகொண்டிருந்த முற்காலத்தவர்களின் பழக்க வழக்கம் நம்மிலேற்படாதிருக்கச் செய்வாைகவும்.

அரும் மொழிகள்

1. செல்வமென்பது பொருள் சேர்ந்திருப்பதால்ல தேவையற்றிருத்தலே செல்வமாகும்.

2. பிச்சை கேள்ப்பதைவிட்டும் தப்புவதற்காகவும், தன் குடும்பத்தார்களைப் பாதுகாப்பதற்காகவும், அண்டை அயலார்களுக்கு உதவிசெய்வதற்காகவும் ஒருவன் நியாயமான வழியில் உலகத்தைத் தேடுவானாகில் கியாமத்நாளில் அவனது முகமானது பூர்ண சந்திரனைப்போறிலங்கும் நிலைமையில் அவன் ஆண்டவனைச் சந்திப்பான்.

3. பொருளிலும் செலவு செய்வதிலும் வீண் விரயஞ் செய்வதைவிட்டும் விலகியிருங்கள்; இன்னும் நீங்கள் நடு நிலைமையைக் கைக் கொள்ளுங்கள்; நடு நிலைமையைக் கைக்கொண்ட எந்த சமூகமும் தரித்திரமடைவதில்லை.

4. தொழுகை நோம்பு முதலிய முக்கிய கடமைகளுக்குப்பின் அடுத்தபடியாக நியாய வழியில் சம்பாதிப்பதும் ஓர் கடமையாகும்.

5. ஜீவனத்திற் குறிய தொழில்களில் மேலானது எதுவென்று நபீ பெருமானரவர்களிடம் கேட்டபோது அவர்கள் "தன்னுடைய கையினல் முயற்சி செய்து சம்பாதிப்பதும், பொய்யும் மோசமும் கலவாத வியாபாரமுமே யாகுமெனக் கூறினர்கள்.

6. வாங்குவதிலும் விற்பனை செய்வதிலும் கடன் கொடுப்பதிலும் கடன் கேட்பதிலும் சாந்தத்துடன் நடந்துகொள்பவன் மீது ஆண்டவன் கிருபை செய்வான்.

7. ஒரு வஸ்துவினுள்ள குற்றங் குறைகளை ஒருவன் அறிந்திருந்தும் அக்குற்றங்களை வெளிப்படுத்தாமல் விற்பனை செய்வது கூடாது.

நாம் செய்யவேண்டுவ தென்னே?

"இன்றையதினம் உங்களுடைய மார்க்கத்தை சம்பூர்ணமாக்கிவிட்டேன்; என்னுடைய காருண்யங்களை உங்கள்மீது பூரணமாக்கிவிட்டேன்; உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்"

குர்ஆன்

இத்திரு அத்தியாயம் ஹஜ்ஜத்துல் விதாஃ என்னும் இறுதி ஹஜ்ஜில் வெளியிடப்பட்டனவாகும். அது பொழுது இவ்வத்தியாயத்தைக் கேட்டுக்கொண்டிருந்த சஹாபாக்கள் அல்லாஹ்வின் (நிஅமத்) கிருபை உம்மத்த முஹம்மதிய்யாவின் பேரில் பூர்ணமாக்கி வைக்கப்பட்டதுபற்றி சந்தோஷ ஆரவாரஞ் செய்யத் தொடங்கினர்; செய்யிதுனா அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இத்திரு வஸனத்தைக் கேட்டவுடன் அழத் தொடங்கினார்கள்; அங்குள்ளோரனைவரும் ஆச்சரியமுற்று, கிருபை நிறைபூர்ணமாக்கப்பட்டுளது பற்றி சந்தோஷிக்க வேண்டியதிருக்க அழத் தொடங்குவ தெங்கனமென வினவினார்கள். அல்லாஹ் தஆலா மானிட வர்க்கத்தினருக்கு அவசியமானதை "வஹீ" யின் மூலியம் அருள் செய்கின்றான்; அஃது அவனின் மாபெருங்காருண்யமாகும்; அக் காருண்யம் நிறைபூர்ண மாய்விட்டதென்றால் வஹீயின் காலம் முடிவடைந்து விட்டன என்பதல்லவோ கருத்தாகும். மேலும் நுபுவ்வத்தின் காலம் சமீபத்தில்முடிவடையப்போகிறதென்னும் சமிக்கையும் அதிலிருக்கின்றது; இதற்காக அழவேண்டியதைத் தவிர வேறென்ன இருக்கின்றது என விடை பகர்ந்தார்கள். அவ்வாறே ஈதருளப்பட்டகாலத்தின் சமீபத்திலேயே உலகயதயாளர் எம்பிரான் (ஸல்.) அவர்களும் இவ்வுலகை விட்டு ஆண்டவனது சன்னிதான மடைந்தார்கள்.

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களது காலமுதற்கொண்டே மானிடவர்க்கத்தினர்களுக்கவசியமானதை அவ்வப்போது அல்லாஹ் தஆலா அருள்செய்து வந்திருக்கின்றான்; நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இறுதி நபியானதால் அவர்களுக் கனுப்பப்படும் திருவேதம் கியாமநாள் வரை ஜோதித்துக்கொண் டிருக்கக்கூடியதாய் இருக்க வேண்டியதாக யிருந்தது. அதைப்போலவே இத்திருவேதம் இற்றைக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. எத்தகைய சீர்திருத்தக்காரர்களும் இதில் ஒரு சிரங்கை எடுத்துச் சாப்பிடலாம்; எவ்வகையான சட்டங்கள் இயற்றுவோரும் இதிலிருந்து தக்க ஆதாரங்களை எடுத்தாளலாம். அத்துணை மேன்மைவாய்ந்தனவாய் எம் திருவேதம் அமைந்துளது ஆதலின் அஃது சம்பூர்ணமாக்கப் பெற்ற வேத மென்பதில் எவ்வித சந்தேகமுமின்று. மானிடனுய்னர் ஒவ்வொருவரும் அம்மகா சமுத்திரத்தில் அள்ளிப்பருகுவது கொண்டு இகபர சாதனங்கள் யாவற்றையும் அடையப்பெறுவார்களாக.

சங்கை பொருந்திய சஹாபாக்கள் திருக்குர்ஆனை அல்லும் பகலும் ஓதினவர்களாகவும் அதன் உயரிய கருத்துக்களை ஆராய்ச்சி செய்பவர்களாகவும் தங்களுக்கு விளக்கமாகாதவைகளை நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பால் கேட்டுத்தெரிந்து கொள்பவர்களாகவு மிருந்ததோடு மக்கள் பால் அதன் உயரிய கருத்துக்களையும் சட்டதிட்டங்களையும் எடுத்தோதிக் கொண்டுமிருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருவஸனங்களும் நடவடிக்கைகளும் குர்ஆன் ஷரீபின் வியாக்கியானங்களாகவே அமைந்திருந்தது. மானிடர் நல்வழியேகும் சகல வழிகளையும் அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் கூறியுள்ளான்; அவைகளை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நம்மனோர்க்கு அனுஷ்டித்துக் காட்டினார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் நற்குணங்களைப் பற்றி ஆயிஷா நாயகி (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது நபிபெருமானார் (ஸல்.) அவர்க

ளது நற்குண நல்லொழுக்கங்கள் திருக்குர்ஆனுகவே இருந்ததென்று விடை பகர்ந்தார்கள். திருவேதத்தில் அருளப் பெற்றவைகள் யாவற்றையும் உருவமுகத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பால் கண்டு கொள்ளலாம் என்பதே கருத்தாகும்

சங்கைவான்களான சஹாபாக்களுக்குப் பின் வந்த இமாம்கள் உலமாக்கள் முதலியோர்களின்காலத்தை எடுத்துக்கொண்டோமானல் அம்மகான்கள் இஸ்லாத்திற்காகச் செய்திருக்கும் அரும்பெரும் தொண்டுகளை வரைவதற்கு இச் சிற்றேடிடந்தரா. பற்பலரிடத்தும் இறைந்துகிடந்த நாயக வாக்கியங்களை ஒருங்குதிரட்டிகிரந்தங்கள் மூலம்வெளியிட்டார்கள்; இலகுவாய் எடுத்துக்கொள்ளும் பொருட்டு பாகங்களாகவும் பாடங்களாகவும் அதனை பாகுபாடு படுத்தினர்கள்; நாயக வாக்கியங்களெனக் கூறப்படுபவைகளில் சரியானதையும், ஆதாரமற்றவைகளையும் செவ்வனே தெரிந்துகொள்வதற்கு அநேக சட்டதிட்டங்களையு மியற்றினர்கள்; ஒரு சிறு துண்டு ஹதீதை நேரில் கேட்டுத் தெரிந்துக்கொள்வதற்கு நூற்றுக்கணக்கான மைல் தொலைதூரம் நடப்பதையும், இவர்கள் பொருட்படுத்தவில்லை என்னே? இவர்களின் மார்க்க பக்தி!

மத்ஹபினுடைய இமாம்கள் செய்த சேவைகளையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. அம்மகான்கள் குர்ஆனையும் ஹதீதுகளையும் ஆராய்ந்து மானிடர்கள் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை இலகுவில் எடுத்துக் கொள்வான்வேண்டி பிக்ஹுனுடைய சட்டதிட்டங்களை இயற்றினர்கள். குர்ஆனும் ஹதீதுகளும் மாபெரும் சமுத்திரத்தைப் போனுற்றதாகயிருக்கின்றது; அதில் நம்போலொற்ருர் ஒரு இடம் பெறுவது கஷ்ட சாத்தியமாகவே இருக்கின்றது; ஒரு மனிதன் தாயினுடைய வயிற்றிலிருந்து புதைகுழி சேரும் வரை எத்துணைவிதமான சம்பவங்கள் ஏற்படுமோ அத்துணைக்கும் வேண்டியவற்றை குர்ஆன் ஹதீதுகளிலிருந்து ஆராய்ச்சி செய்தெடுத்தெழுதி விட்டார்கள். முஸ்லிம்கள் வெகு சுளுவில் அவைகளைத்தெரிந்து நடந்துகொள்ளக் கூடியனவாய் அமைந்துள்ளது. இவர்களுக்குப் பின் ஏற்பட்ட நிபுணர்கள் மேற்குறித்த பிக்ஹை சட்ட திட்டத்திற்குட்படுத்தி உசூலென்னும் சட்ட கிரந்தங்களை இயற்றியுள்ளார்கள்.

சூபியாக்கள்,மானிடர்மீது அவசியமாக்கப் பெற்றுள்ள காரியங்களை செய்வதுடன் எஞ்சிய நேரங்களில் மானிடர்கள் அனுஷ்டிக்க வேண்டிய பற்பலமுறைகளை விவரித்து சுலூக்கென்னும் கிரந்தங்களை இயற்றினர்கள். ராஜர்கள் முதல் வியாபாரிகளீராகக் கூலி வேலைக்காரர்கள் வரை யாவரும் நடக்க வேண்டிய சகல நற்குணங்களும் அந்நூற்களில் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

வலிமார்கள் குர்ஆன் ஹதீதுப் பிரகாரம் தாங்கள் ஒழுகிவந்ததோடு மக்களுக்கும் ஹிதோபதேசம் புரிந்துவந்தார்கள். அல்லாஹ் தஆலா அவர்களால் நிகழ்த்திய கராமத்தென்னும் அற்புத நிகழ்ச்சிகள் பொது சனங்களின் ஹிருதய கமலங்களைக் கவரச் செய்வதற்குள்ள மாபெரும் கருவியாக அமைந்திருந்தது. செய்யிதுனு முஹையித்தீன் அப்துல்காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்களுடைய உபதேச மகா சபைக்கு கிறிஸ்தவர்கள், யூதர்கள், குப்பார்கள், முதலிய பற்பல வகுப்பினர்களும் ஆஜராகும் வழக்கமிருந்தது. கிரிஸ்தவர்கள், யூதர்கள் இவர்களில் மட்டும் ஐநூற்றுக் கதிகமானவர்கள் ஹஸ்ரத் அவர்களால் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவியிருக்கின்ருர்கள்.

பாரவான்களான இமாம்களும் பெரியார்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் தன்னடக்கத்தோடு தங்கள்மீதுள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றேம் எனக் கூறி மார்க்கச் சேவை புரிந்து வந்தார்கள். அதில் எவரும் தற்பெருமை கொண்டவர்களாகயில்லை. அவர்களின் கீர்த்தியும் புகழுரையும் இறுதி நாள் வரை உயர்ந்துகொண்டேயிருக்கின்றது. ஈதிங்கனமிருக்க சமீப கால முன் பாஞ்சாலத்தில் கிளம்பிய குலாம் அஹ்மத் என்பார் ஆரம்பத்தில் பற்பல நூற்களை எழுதி விற்பனை செய்துவந்தார்; அவைகளை முஸ்லிம்கள் வாங்கிப் படித்து வந்தார்கள்; இதனுல் தான் இஷாஅத்தெ இஸ்லாம் செய்துவிட்டதாகத் தற்பெருமை கொள்ளலானர்; தன்னை ஒரு சீர்திருத்தக்காரரென்று பறைசாற்றினர்; இன்னுமொரு படி ஏறி வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹும் மஹ்தியும் தாமே என உளறிக் கொட்டினர்; அதன்பின் தமக்கு நபிப் பட்டம் வந்திருக்கிறதெனவும், யாவரும் தன்னை நபீ

என ஒப்புக் கொள்ள வேண்டுமென வும் செப்பினர். ஒரு சிலர் தவிர ஏனை யோ ரடங்கலும் தன்னை ஒப்புக்கொள்ள வில்லை என மனம் புழுங்கி 40 கோடி முஸ்லிம்களையும் காபிரெனக்கூறத் துணிந் தார்; கடாசியாக கிருஷ்ணனாகத் தாம் அவ தரித்திருப்பதாகவும்; தாமே கிருஷ்ணசாமி என்றும் ஓலமிட்டார். இவரால் இஸ்லாத் திற்கு பற்பல இன்னல்களும் தீவினைகளும் ஏற்பட்டதே யன்றி எள்ளளவேனும் நன்மை உண்டாக வில்லை. சன்மார்க்கத்தை நன்குண ராமல் தானே இறுதி நபீ என்றுங்கூட கூறத்துணிந்து விட்டார். இத்தியாதி காரணங் களைக் கொண்டு அன்னவர் (முர்தத்தாய்) இஸ்லாத்தை விட்டுநீங்கியவராய்விட்டாரென தீர்மானிக்கப்பட்டுப்போயிற்று; அவருடைய தாவாக்களும் பகற்கூற்றுகளும் தக்க ஆதா ரங்களோடு மறுக்கப்பட்டுப் போயிற்று; வருங்கால நிகட்சிகளைக் குறித்து அவர் கூறிய தீர்க்கதரிசினங்கள் யாவும் நேர்மாற்ற மாகவே முடிந்தது. அதனால் அவர் புழுக ரென்றும், 14-ம்நூற்றாண்டின் தஜ்ஜாலென் றும் யாவராலும் தீர்மானிக்கப்பட்டுப்போயி ற்று. அவர் இவ்வாறெல்லாம் தாவாச்செய்து முஸ்லிம்களுக்கிடையில் பெரும் குழப்பத் தையும் பித்னாவையும் கலகத்தையும் உற் பத்தி செய்தாரேயன்றி இஸ்லாத்திற்கு ஒரு கடுகத்துயணைம் பிரயோசனம் செய்தாரில்லை. இவருடைய தாவாவும் முன்னறிக்கைகளும் பொய்யாக்கப்பட்டதைக்கண்டு இஸ்லாத்தின் விரோதிகளான கிறிஸ்தவர்களும், ஆரியர் களும் பரிகசிக்க முற்பட்டனர். அவர்களோ இவரை முஸ்லிமென்றே கருதியிருந்ததால் நம் சமயத்தையே குறைகூறும் சந்தர்ப்பம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது இந்தப் பொய் மஹ்தியால் இஸ்லாத்திற்கேற்பட்ட பிரயோசனமிதுதான். எம்பெருமானார் நபி களுதர் (ஸல்.) அவர்களின் தீர்க்கதரிசனம் உண்மையாகவே முடிந்தது, அவர்கள் கூறி யதாவது:—என்னுடைய உம்மத்தோர்களில் 30 புழுகர்கள் தஜ்ஜாலாக எழுவார்கள்; அவர்களிலொவ் வருவரும் தன்னை நபீ என் றே நினைத்துக்கொள்வர் என்பதே. இத்திரு வாக்கியத்திற்கிணங்க மிர்ஸா சாஹிபும் ஆகாய அண்டப்புழுகரென்று பெயர் வாங் கியதுடன் தன்னை நபீ என்றும் ரசூலென் றும் கூறிக்கொள்வதை விட்டுப் பின் வாங்க வில்லை.

மூடபக்தி நிறைந்த கோஷ்டியினரும், சுய நலமிகளிற் சிலரும், ஊதியம் பெற்றுண்ணக் கருதிய ஒரு சிலரும் இன்னவரைப் பின் பற்றிவருகின்றனர்; இன்னோரது அண்டப் புழுகுகளும், அடாச்செயல்களும் அனந்த முள. அவைகளை விரிவஞ்சி விடுத்தனம். இந்நவீன கிறிஸ்தவர்கள் பாஞ்சாலத்தில் அட்டகாசஞ் செய்து வந்தனர்; ஆங்குள்ள உலமாக்களும் கனவான்களும் தக்கமுயற்சி செய்து அதனை அடக்கி விட்டனர்; அக் கோஷ்டியினரிடமிருந்து ஊதியம் பெறும் ஒரு சிலர் தற்சமயம் நந் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணஞ்செய்து தங்கள் மாய வலைகளை வீசி வருவதாகத் தெரிகிறது; இவர் கள் பழய கிறிஸ்தவர்களே போன்று பிர சாரம் புரிவதில் வெகு தந்திரமுடையவர்கள்; ஆரம்பத்தில் தங்களுடைய கொள்கையை வெளியாக்கி விடமாட்டார்கள்; பொது ஜனங்களிடையே காணப்படும் அனுச்சாரங் களையும் நூதன அனுஷ்டானங்களையும் கண்டிக்கின்றவர்களே போன்று நடிப்பார் கள்; குர்ஆனையும் ஹதீதுகளையும் பிரசாரஞ் செய்யப் புறப்பட்டுளோம் என்றும் பறை சாற்றுவார்கள்; தங்கள் மாயவலையில் பொது ஜனங்கள் சிக்கும் நேரமறிந்து தங்கள் தீய கொள்கைகளை ஒவ்வொன்றாக வெளியிடுவார் கள். இஃது அவர்களது குருவாகிய மிர்ஜா வின் பழம் பாடமேயாகும். தஜ்ஜாலென்னும் பதத்திற்கு ஏமாற்றக் கூடியவனென்பது பொருள். அதற்கிணங்கவே, மிர்ஸாவின் சிஷ்யர்களும் ஏமாற்றுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்; அல் லாஹ்வையும் அவனது ரசூலையும் போற்றிப் புகழ்ந்தே தங்கள் பிரசங்கத்தை ஆரம்பிப் பார்கள்; கடாசியாக தங்கள் குருவாகிய மிர்ஸா, நபிகள்திலகம் எம்பெருமானார் (ஸல்.) அவர்களது உம்மத்திலுள்ள தீர்க்க தரிசி எனக் கூறுவார்கள். இவர்களின் மாய வலையில் பொதுமக்கள் சிக்குண்டுழலக் கூடு மாதலால் ஆங்காங்குள்ள உலமாக்களும் மார்க்கபக்தி நிறைந்த மகா ஜனங்களும் இதற்குத்தக்க ஏற்பாடுசெய்து அப்பிரசாரம் தலை காட்டாது தடுக்க வேண்டியது கடமை யாகும்.

இஸ்லாமிய ஷரீஅத்தில் தொழிலின் மேன்மை

(சென்ற மீ தொடர்)

காலக்ஷேபத்திற்குவேண்டி ஏதேனும் தொழில்செய்வதுஅவசியம்எனபல உதாஹரணங்களைக்கொண்டு சிறப்புத்தங்கிய ஹதீதுகளிலும் கற்றறிந்த சான்றோர்களின் சொற்செயல்களிலும் வற்புறுத்தப்பெற்றிருப்பது காணலாம். ஷரீஅத்திற்கு மாற்றமில்லாத எத் தொழிலையும் நாம் செய்வதற்குக் கடமைப்பட்டுள்ளோம். எத்தொழிலையும் அற்பமானதென்றும், கேவலமானதென்றும் வெறுத்து பிற்போக்காகநடப்பது மிக மதியீனமேயாகும்.பாருங்கள் ஹஸ்ரத்ஆதம்(அலை) அவர்கள் நெசவுத் தொழில் செய்பவர்களாக யிருந்தார்கள். இத்ரீஸ் (அலை) அவர்கள் தையல்வேலை செய்பவர்களாகயிருந்தார்கள். ஜவுளி வியாபாரஞ் செய்வது ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களது வேலையாக இருந்தது. தாவூத் (அலை) அவர்கள் உறுக்குச் சட்டை செய்துகொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்கள் பேரீத்த மட்டையால் பற்பல வஸ்துக்களைச் செய்து விற்பனை செய்துவந்தார்கள். ஹஸ்ரத் நூஹ (அலை) அவர்களும் ஜகரிய்யா (அலை) அவர்களும், கொல்லுவேலைசெய்துகொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் 10-வருடங்கள் வரை ஹஸ்ரத் ஷுஐப் அவர்களுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். நம் ஸர்தார் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் தங்கள் இளம்பிராயத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பால் அபூதாலிப் அவர்களுடன் தூரதேசங்களுக்கு வர்த்தக நிமித்தம் யாத்திரை செய்பவர்களாக இருந்தார்கள்; கடைவீதிக்குச் சென்று சாமான்கள் வாங்கி தலைமேல் சுமந்து வருவார்கள்; அதை யார் கேட்டாலும் கொடுக்கமாட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி), ஹஸ்ரத் உதுமான் (ரலி), தல்ஹா (ரலி), அப்துற்றஹ்மானிப்னு அவ்ப் (ரலி) ஆகியவர்கள் எல்லோரும் ஜவுளி வர்த்தகம் புரியும் கடைகள் வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தரகு ஏஜென்ஸி வேலை பார்த்துவந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி), ஸஅதிப்னுமாலிக் (ரலி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி), உமரிப்னு அப்துல் அஜீஸ், காஸிம், உர்வாபின் ஜுபைர், அபூபக்ர் (ரலி) அவர்களுடைய குடும்பத்தினர், உமர் (ரலி) அவர்களுடைய வமிசத்தினர், அலீ இப்னு ஸீரினுடைய இனத்தார், அப்துற்றஹ்மானிபுனு அஸ்வத், அப்துற்றஹ்மானிபுனு எஜீத் (ரலி) முதலியோர் வெள்ளாமை புரிந்துவந்தார்கள். குபாபிப்னு இர்து (ரலி) என்பவர் இரும்புவேலை செய்யக்கூடியவராக யிருந்தார். அபூதைபா (ரலி)இரத்தங்குத்திவாங்கும்தொழில்செய்துவந்தார். ஹஸ்ரத் ஜுபைரிப்னு அவாம் (ரலி), உதுமானிப்னு தல்ஹா (ரலி), கைஸிப்னு முக்ரிமா (ரலி) முதலியோர் தையல்வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஸஅதிப்னு அபீவக்காஸ் (ரலி) அம்புகள் செய்துவிற்றுஜீவனஞ்செய்தார்கள். ஸல்மான் பார்ஸீ (ரலி) அவர்கள் 5000 திர்ஹம் சம்பளத்தில் அமர்ந்திருந்தார்கள்; அவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளப்பணத்தை ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்துவிட்டு தாங்கள் கூடைகள் தயார்செய்து விற்றுவந்தார்கள். ஆமிறிப்னு கரீஜ், உமரிப்னுல் ஆஸ் (ரலி) இவர்கள் கஸ்ஸாப்புக்கடை வைத்திருந்தனர். வலீதிப்னு முகைரா(ரலி)இரும்புவேலை செய்து கொண்டிருந்தார்கள். அமீர் முஆவியாவின் தந்தையாகிய அபூசுப்யான் (ரலி) அவர்கள் கிச்சடி செய்துவிற்று ஜீவனம் செய்தார்கள். அபூதல்ஹா அன்ஸாரீ, அபூஉபைதத்து பின் ஜர்ராஹ இவர்கள் குழிகள் தோண்டும்தொழிலி லீடுபட்டிருந்தார்கள். இமாம்அஃலம்அபூஹனீபத்துஇபுனு நுஃமான் (ரலி) அவர்கள் பட்டுஜவ்ளி வர்த்தகம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். ஹஸ்ரத் காஜா பஹாவுத்தீன் நக்ஷபந்தீ அவர்கள் பூட்டா நெய்யும்தொழிலை மேற்கொண்டிருந்தார்கள். ஜுனைத பக்தாதீ அவர்கள் ஜவுளி வர்த்தகம் புரிந்தார்கள். இப்ருஹீம் காஸ் என்பவர்

தொட்டில், ஊஞ்சல் முதலியவைகள் செய்யும் கைத்தொழிலை நடத்திவந்தார்கள். அபூ அலீதக்காக் அவர்கள் மாவறைத்து விற்கும் தொழில் செய்துவந்தார்கள். பரீதுத்தீன் அத்தார் அவர்கள் அத்தர்கடைவைத்து சம்பாத்தியம் புரிந்துவந்தார்கள். அஹ்மதிப்னு நஸ்ர் என்பவர்கள் ஹல்வா விற்று பொருளீட்டி அதனால் காலக்ஷேபம் செய்துவந்தார்கள். முடிவாகக்கூறுமிடத்து நம் மார்க்கப் பெரியார்களாகிய முன்னோர்கள் அனைவரும் சப்பாணிகள்போன்று வெறுமனே உட்கார்ந்துக் காலங்கழிக்கவில்லை. ஆனால் தொழில், வர்த்தகம், உத்தியோகம் முதலியவைகளால் பொருள்தேடி அவற்றால் ஹலாலான உணவை அருந்தி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள். கைத்தொழில் வியாபாரம் இவைகளின் காரணமாக அவர்கள் யாரையும் எதிர்பார்க்கவோ அல்லது எவர்க்கும் அடிமைப் பட்டிருக்கவோ யில்லாது சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்தார்கள். ஜீவிதப் பொருளை ஈட்டுதற்கு வர்த்தகம் வெள்ளாமை கைத்தொழில் முதலிய அநேகவழிகளுண்டாயிருக்கின்றன.

வியாபாரிகளுக்கு மார்க்க போதனை

வர்த்தகம் புரிவதில் அநேக விதமுண்டு. தானிய வர்க்கங்களை சேமித்து வியாபாரஞ் செய்பவர்கள் தானிய விலை அதிகரிக்க வேண்டுமென்று ஒருபொழுதும் எண்ணலாகாது; அளவையிலும் நிறுவையிலும் மோசஞ் செய்யாதிருக்கவேண்டும்; அநாவசியமான ஒப்பந்தங்களும் முன்னேற்பாடுகளும் செய்வது தகாது. உதாரணமாக, சில வியாபாரிகள் பயிர்கள் அறுவடையாகு முன்பே பயிர்த்தொழிலாளிகளிடம் பணம்கொடுத்து ஈனக்கிரயத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்; இவ்வாறுசெய்தல் அநீதமாகும்.

தானியங்கள் வாங்குவதிலும் விற்பதிலும் சிற்சில அவசியமான விதிகளுண்டு. அவற்றில் ஏதேனுமொன்று தவறிவிடுமாயின் அங்ஙனம் வாங்குவதும் விற்பதும் நேர்மையாகாது. அவ்விதிகளாவன :—நிறையும் அளவும் தெரிந்திருக்க வேண்டும்; அதாவது இன்ன இடைக்கு அல்லது இன்ன அளவிற்குத்தான் தானியம் கொடுப்பதென்னும் விபரம் நன்றாகத் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும். தானியத்தின் தினுசையும் நன்கு அறிந்திருக்கவேண்டும். அதாவது இன்ன தானியம் இன்ன தினுசிலிருக்கவேண்டும் என்பதை உணரவேண்டியது அவசியமாகும். சரக்கின் நலவிளப்பத்தையும் அது இவ்வளவு நாள் கெடாதிருக்கும் என்பதையும் தெரிந்துக் கொள்ளவேண்டும். ஹனபிகளிடம் எப்பொருளுக்காக விலை பேசப்படுகிறதோ அப்பொருளுக்காகப் பணம் கொடுத்தது முதல் பொருளைப் பெறுகின்றவரை, அப்பொருள் தயாராக இருக்கவேண்டியது அவசியமாகும். இன்னும் தயாராகாமல் சில நாள் கழித்துத் தயாராகும் ஒரு வஸ்த்துவுக்கு முன் பணம் அளிக்கப் படுமானால் ஹனபீ மத்ஹப் பிரகாரம் அவ்வொப்பந்தம் கூடாததாய் விடுகிறது. உதாரணமாக புதுக்கோதுமை அறுவடையாகு முன் பணம் கொடுப்பது விளக்கப் பட்டிருக்கிறது. ஆனால் புதுக்கோதுமை அறுவடையாகுஞ் சமயத்தில் விலை பேசி முன் பணம் கொடுத்தால் அது ஜாயிசாகும். ஷாபீஈ வர்க்கத்தாருக்கு இவ்விதிகள் அவசியமில்லை. அவர்கள் புதுக்கோதுமை அறுவடையாகு முன்னர் முன்பணம் கொடுத்தால் அது ஜாயிசாகும்.

சில அவசியச் செய்திகள்

வியாபாரத்தில் பற் பல வகையுண்டு. ஆதலின் முக்கியமாகத் தேவையுள்ள சில விஷயங்களை மட்டும் ஈண்டு குறிப்பிடுவோம்.

1. எல்லா வகையான மதுதினுசுகள், பன்றி, உரிமை விடப்பட்ட அடிமை முதலியவைகளை விற்கவோ வாங்கவோ செய்வது கூடாத காரியமாகும்.

2. மரணித்துப் போன பிராணிகளின் தோலிகளைப் பாடஞ்செய்யும் வரை அதனை விற்கவோ வாங்கவோ கூடாது.

3. குளங்குட்டைகளில் மீன்கள் ஏராளமாக இருந்து, அவைகள், வலை போலொற்ற வஸ்த்துவின் உதவி இல்லாது அகப்படுவது அரிதாகயிருக்குமாயின் அம்மீன்களை விற்பதும் வாங்குவதும் நேர்மையாகாது. குளத்தில் தண்ணீர் குறைவாகவும், வலைகளின் உதவி யில்லாமல் மீன் அகப்படக் கூடியதாகவும் இருக்குமாகில் அம்மீன்களை விற்பதும் கொள்முதல் செய்வதும் கூடும்.

4. மரத்தின் மீதுள்ள கனிகளின் பருவகாலம் முற்றுப் பெறும் வரை அக்கனிகளை விற்பது ஆகாதென விலக்கப் பட்டிருக்கின்றது.

6. கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை தின்பதற்காக விற்பனை செய்தல் கூடாது.

7. சாராயம் முதலிய மதுபானங்கள் தயாரிப்பவர்களிடம் பழைய கற்கண்டு வெல்லம் முதலியவைகளை விற்பனை செய்வது மக்ரூஹாகும்.

8. ரொக்கத்திற்காக சவுகரியமாகவோ விலை குறைவாகவோ பணத்திற்குப் பகரம் ஒரு பொருளை விலை நயமாக விற்பது ஜாயிஸாக இருந்தாலும் மக்ரூஹேயாகும்.

வேள்ளாமையின் மேன்மை

வெள்ளாமை செய்யும் தொழிலை ஸஹாபாக்களிலனேகர் சிலாகித்துக் கூறி இருக்கின்றார்கள். உழுதுண்டு வாழ்வதே மிகச் சிறந்த முறையாகும். வெள்ளாமைத் தொழில் எவ்வாறு பரிசுத்தமானதாக இருக்கின்றதோ அவ்வாறே அத்தொழிலை அனுசரிப்பதிலும் பரிசுத்தமான முறைகளை விவசாயிகள் கையாளவேண்டியது கடமையாகும். அதாவது, எருதுகளை நோவினை செய்யாமல் சகல பாதுகாப்புகளுடன் சூட்சித்தல், அளவுக்கு மிஞ்சி வேலை வாங்காதிருத்தல், அவற்றிற்கு தீனி அளிப்பதில் எவ்வாற்றானும் குறைவு செய்யாதிருத்தல் முதலியவைகள் விவசாயிகள் நன்கு அனுசரிக்க வேண்டிய மார்க்கங்களாகும். உயிர்ப் பிராணிகளைக் காரணமில்லாது அடிப்பதும் திட்டுவதும் பாவமென்றறிய வேண்டும்; பயிர் நட்டது முதல் செய்யவேண்டிய கடமைகளை பிரதிதினமும் செய்து வருவதில் மறதி உண்டாகக் கூடாது; பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருக்குங்கால் தொழுகை முதலிய மார்க்கக் கடமைகளையும் விடாது நிறைவேற்றல் வேண்டும். தொடை தெரியும்படியாக வேஷ்டிகளைக் கட்டிக்கொண்டு வயல், பயிர் ஜோலிகளைக் கவனித்தல் மிக இழிவான செயலாகும். சாணம் முதலியவைகள் தேகத்திலோ உடையிலோ படாதவண்ணம் எச்சரிக்கையோடிருக்க வேண்டும். ஏனெனில் கப்றில் உண்டாகும் வேதனைகள் எல்லாம் இவ்வாறு பேணுதலாக நடக்காத்ததினாலேயே ஏற்படுகின்றன.

கைத்தொழிலின் மேன்மை

கைத்தொழில் புரிவது வர்த்தகம் வெள்ளாமை முதலியனவற்றை விட ஒரு படி சிறந்ததாகவே காணப்படுகின்றது. வர்த்தகமும் வெள்ளாமையும் பிறர் உதவி இன்றி முற்றுபெறுதனவாக யிருக்கின்றது. அன்றியும் அவை எப்பொழுதும் மனிதனுடனேயே இருக்க முடியாது; விஞ்ஞான ஆராய்ச்சியும் வித்வத்தனமும் ஒரு மனிதன் எங்கு சென்றாலும் அவனுடனே அவைகளும் செல்லும்; பிரயாணிக்கு அவனது யாத்திரை சமயத்திலும், ஏழைக்கு அவனது வறுமையிலும் கைத்தொழிலானது தக்க உதவியளிக்கின்றது. தொழிலாளி தன் விருப்பம்போல் எக்காரியங்களும் நிறைவேறக் காண்பான். கைத்தொழிலுக்கும் சாஸ்திர ஆராய்ச்சிக்கும் எந்தவிதமான முடிவுங் கிடையாது.

சில கைத்தொழில்கள்

கல்வியானது இறைவனாலும், ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களாலும் மற்றும் உலக மாந்தர்களாலும் மிகவும் சிறப்பாகப் புகழப்பட்டிருக்கின்றது. அதைப் பார்க்கினும் இருவழியிலும் உதவக்கூடிய வேறு எவ்வித வஸ்துவுங் கிடையாது. விஞ்ஞானத்தால் விருத்தியாகும் கைத்தொழிலைவிட வேறெந்த அப்பியாசமும் தேர்ச்சி மிகுந்த பிரயோசனகரமானதாக இருக்க முடியாது. கைத்தொழிலின் வெவ்வேறு விதமான முறைகளும் அவற்றின் நன்மைகளும் பெரும் பெரும் நூற்களில் விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. ஊன்றி நோக்கின் நன்குபுலனாகும்.

எழுத்து வேலை.—இவ்வேலை மிக்க கண்ணியமானதும் இன்பந் தரத்தக்கதும் நன்மை பயக்கக் கூடியதுமாய் இருக்கின்றது. அழகிய கை எழுத்துக்காரர்களுக்கு இக்காலத்தில் மிதமிஞ்சிய மதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இவர்கள் தங்கள் வீட்டிலிருந்துகொண்டே மிக மகிழ்வுடன் ஜீவனஞ் செய்கின்றனர். ஆனால் எழுத்துக்காரர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய முக்கிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது, வட்டிச் சிட்டைகுறிப்பிடும் வேலையினின்று விலகிவிட வேண்டியது அவசியமாகும் இல்லை யெனில் நிந்தனைக் காளாவார்கள்.

குர்ஆன் மஜீத் எழுதிக்கொடுத்து கூலி வாங்குவது ஜாயிஸாகும். மிஷ்காத் ஷரீபில் இது விஷயமாக ஒரு ஹதீது காணப்படுகிறது. அதாவது:—ஒரு மனிதர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம், குர்ஆன்மஜீத்

எழுதிக்கொடுத்து கூலி வாங்குவது ஆகுமாவென வினவியதற்கு, அதனல் பாதகமில்லை என்றும், அவர்கள் சித்திர வேலைக்காரர்களாய் இருந்து தங்கள் கையாலேயே பாடுபட்டுத் தேடி உண்கின்ருர்களென்றும் பதில் கூறினர்கள்.

தையல் வேலை:—இத்தொழிலும் மனோ உற்சாக முள்ளனவாகவே இருக்கின்றது. ஹதீது ஷரீபுகளில் இத்தொழிலைக் குறித்த சிறப்புக்கள் விளக்கமாக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.

"எனது உம்மத்துக்களிலுள்ள ஆடவர்கட்கு தையல் வேலை மிக நல்ல தொழிலாகும்." "தையல் வேலை நல்ல மனிதர்களின் தொழிலாகும்" என்பன நாயகம் (ஸல்) அவர்களின் திருவசனங்களாம். இவ்வேலைக்காரர்கள், தங்களுடைய திருட்டு சுபாவங்களை விட்டு நீங்கவேண்டும்; சொந்தக்காரரின் உத்திரவன்றி ஒரு நூலிழைகூட வஞ்சிக்கக் கூடாது. துணிகளில் பட்டு, சரிகை முதலியவைகளால் புஷ்பங்கள், செடிகள்போன்ற விசித்திர வேலைப்பாடுகள் செய்வதும் இவ் வகுப்பிலேயே சாரும்.

நெசவு வேலை:—இத்தொழிலும் மிக்க அநுகூலமுண்டு. அநேகர் இத்தொழிலின் காரணமாக உயர்நிலைக்கு வந்திருக்கின்றனர். கம்பளி ஷால்கள் செய்யும் வேலையும் இவ் வர்க்கத்திலுள்ளதே யாகும். கைராட்டில் நூல் நூற்பதும் இவ்வகுப்பிலே சார்ந்தது தான். ஹதீதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—"என் உம்மத்துக்களிலுள்ள பெண்டீர்களுக்கு கைராட்டால் நூல் நூற்பது மிக உத்தமமான தொழிலாகும்." "கொட்டை நூத்தல் பெண்மணிகள் வேடிக்கையாக செய்யக்கூடிய ஒரு அருமையான தொழிலாகும்." "நூல் நூற்பது பெண்பாலாரில் சிரேஷ்டமானவர்களின் வேலையாகும்."

தச்சு வேலை:—இத்தொழில் மிக்க ஊதியம் அளிக்கக்கூடிய அரிய தொழிலாக இருக்கின்றது. இக்காலத்தில் ஒருவரை செல்வந்தராக்குவதற்கு இத்தொழில்தான் மிக்க உதவிசெய்யுமென புலப்படுகின்றது.

இரும்பு வேலை:—இத்தொழில் பூர்வீக கால முதற்கொண்டு இருந்தே வருகிறது. இதுகாலேயும், இரும்பு வேலையின் முன்னேற்றத்தினலேயே ரயில் வண்டிகளும் தந்திப் போக்குவரத்து அமைப்புகளும் ஏராளமாக நடைபெறுகின்றன.

தட்டார வேலை:—மனதிற்கு உத்சாகமும் நல்ல வரும்படியும் அளிக்கக்கூடியது இத் தொழிலே யாகும். ஆனல் இக்காலத்தில் இத்தொழிலில் அநேகமாக ஏமாற்றங்கள் செய்யப்படுகின்றன. அவற்றை விவரமாக எடுத்துக் காட்டுவதற்கு முடியாத அத்துணை அளவுகடந்து அவை நடைபெறுகின்றன.

எனவே, கை இல்லாதவர், கால் இல்லாதவர் போன்று ஒரு வேலையுமில்லாது வீணே நாட்களைச் செலவுசெய்யாமல் ஏதேனும் ஒரு தொழிலின்மூலம் ஹலாலான உணவை சம்பாதித்து உண்டு களித்து வாழ்ந்துவரவேண்டியது மானிடராகப் பிறந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

மேனட்டு நாகரீகமும், இஸ்லாமிய நாடுகளும்

கீழ்நாட்டார் ஒருபக்கல் சுயேச்சைக்காகப் பெரும்போராடி வருகின்றனர்; மறுபக்கல் கீழ்நாட்டு பழக்கவழக்கங்களையும் தங்கள் முன்னோர்களின் நடைவுடை பாவனைகளையும் ஏகமாக மறந்து ஐரோப்பிய நாகரீகத்தில் சிக்குண்டிருக்கின்றனர்; அவர்கள் எவ்வாறெல்லாம் விரும்புகின்றனரோ அவ்வாறெல்லாம் மேனட்டு நாகரீகத்தை அநுசரிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் மேனட்டாருக்கு ஒத்தவண்ணம் தாண்டவம் புரிவதில் சற்றும் பின்னடையவில்லை. இவ்வித அபாயகரமான கூற்றுக்களின் முடிவு யாதாகுமென்பதை யாரறிவர். அரப் நாடும் இதர இஸ்லாமிய ராஜாங்கமும் தங்கள் திருநாமத்திற்குள் ஒரு விசேஷ தெய்வீகசக்தி அமையப் பெற்றதாக யிருந்தது. இன்னும் நற்குண நல்லொழுக்கங்களுக்கு உறைவிடமாகவும், பிற நாடுகளுக்கெல்லாம் சன்மார்க்கப் போதனையின் வழிகாட்டியாகவும் இருக்கும்படியான பெரிய பதவி அந்நாடுகளுக்கு ஏற்பட்டிருந்

தது. ஆனால் சென்ற மகா யுத்தத்திற்குப் பின்னர் இந்நாடுகளும் ஐரோப்பிய நாகரீகத்திற்கும் நடைவுடை பாவனைகளுக்கும் பிறப்பிடமாகி விட்டன. இந்நாட்டினர் தங்கள் முன்னோர்களின் பரிசுத்த வாழ்க்கையின் மாதிரிகளை எல்லாம் மறந்து புத்திப் போக்கில் மேனாட்டாரைப் பின்பற்றிச் செல்லும் அடிமைத் தனத்திலும் மதியீனத்திலும் சிக்குண்டு விட்டனர். துர்க்கியர்களின் மதத்திலும் நடத்தையிலும் என்ன என்ன மாறுதல்கள் உண்டாகி யிருக்கின்றனவோ அவைகளைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், பண்டைய இஸ்லாமிய நாகரீகத்தின் மீது அதிகப் பற்றுதலுள்ள அரப் நாடுகள் எவ்வாறு பிரஞ்சுக்காரரின் நடைவுடை பாவனைகளால் நிரம்பி யிருக்கிறதென்பது தான் அதிசயிக்கத் தக்கதும் வருந்துதற்குரியதுமாகும்.

அரப் நாட்டின் நிலைமை

உஸ்தாத் தஆலபீ என்பவர் ஒரு பிரக்யாதி பெற்ற யாத்திரைக்காரரும் சீர்திருத்தக்காரருமாக இருக்கின்றார். அவர் சமீபத்தில் காஹிராவில் நடைபெற்ற மகாநாட்டில் அரபு நாடுகளின் அரசியல் நிலைமைகளையும் சமூக நிலைமைகளையும் குறித்து தெளிவாக எடுத்தோதியுள்ளார். அதிலிருந்து நம் முஸ்லிம் சோதரர்கள் உணர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

அப்பெரியார் கூறுவதாவது :—

மேனாட்டு வெள்ளப் பிரளயமானது அரப் நாடுகளின் நற்குண நலனையும் சன்மார்க்கச் சிறப்பினையையும் நாளுக்கு நாள் வாரியடித்துக்கொண்டு போகின்றது ; அதைத் தடுப்பதற்காக யாரும் இதுவரை தைரியமாக முன் வந்தார்களில்லை ; ஐரோப்பாவானது அதன் மதியீனமான தீயச் செய்கைகளின் காரணமாக எப்பொழுதாவது தலைகீழாக விழுமென்பது திண்ணம். அது நம் அரபு நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்து ஆழ்த்திவிடுமோ என்று தான் அஞ்சவேண்டியதாக யிருக்கிறது.

பாலஸ்தீன் நிலைமை

மேற்கூறிய விஷயங்களுக்கு தக்க உதாரணமாக அப்பெரியார் கூறுவதாவது :—

உதுமானியர்கள் அரசாட்சி செய்யும் காலத்தில் பாலஸ்தீன் எவ்வித தீய கருமங்களுக்கும் பாவச்செய்கைகளுக்கும் உள்ளாகாமலிருந்தது; ஆனால் இன்று அவைகளெல்லால் சற்றும் குறைவில்லாமல் காணப்படுகின்றன. அங்கு யேற்பட்டிருக்கும் போதை வஸ்துக்கள் தின்பது போன்ற துர்நடத்தைகளை நினைக்குந்தோறெல்லாம் மன நடுக்கமுண்டாகின்றது. விலைமாதர்கள், வாலிபர்களாக இருக்கும் அரபிகளின் நடத்தையினைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். சினிமாக் காட்சி ஸ்தாபனங்களும் நடனக்காட்சி சாலைகளும் அராபியர்களை என்று மில்லாத வறுமையில் ஆழ்த்திக்கொண்டே போகிறது. நிர்வாண நாட்டியம் அவர்களின் சரித்திரக் காலப் பெருமையினையும் கீர்த்தியினையும் கொள்ளை கொண்டு போய் மண்ணோடு மண்ணாக்கி விட்டது.

பக்தாதின் நிலைமை

பக்தாதின் நிலைமையினை என்னவென்று ஆராய்வோம். பக்தாத் நகரத்தை, அது தொன்று தொட்டு மிக்க சிறப்புற்றிருந்த தன் காரணமாக 'பக்தாத் ஷரீப்' என்றழைக்கப்படுகிறது. இது விஷயமாய் மேற்கூறிய உஸ்தாத் அவர்கள் கூறுவதாவது :—

அப்பாஸிய கலிபாக்களின் அரசாங்கத் தலை நகராயும், மற்ற நகரங்களுக் கெல்லாம் கிரீடமாயும் விளங்கிய பக்தாதில் கலைஞானம், அறிவு, நல்லொழுக்கம் என்னும் ஆறானது தேவாமிர்தம் போன்று ஓடிக்கொண்டிருந்தது. இன்று அதன் சமுதாய நிலைமையினைக் கவனிக்குமிடத்து அரபிகளின் முகத்தில் கரி பூசினமாதிரி தோன்றுகிறது; சாராயக்குடிக்குக் கணக்கில்லை; வீதிகள் தோறும் வேசிகள் வதியுமிடங்கள் நிறைந்திருக்கின்றன ; அங்குள்ள ஜனங்கள் பூர்வீக காலத்தின் அனுச்சாரங்களைப்புதிதாக ஞாபகஞ்செய்து அனுஷ்டித்து வருகின்றனரோ என்றுங்கூட சொல்ல வேண்டிய தாயிருக்கிறது. உதுமானியர்களின் ஆளுகை காலத்தில் கனவிலுங்கூட நினைக்க முடியாத அத்துணை ஆபாஸங்கள் இது காலை சர்வ சாதாரணமாக நிகழ்வுறுகின்றன. சுறுங்கக்கூறின் சுவண்டி பெறுவதில் பாரீஸ் தேசத்தைவிட இஃது சிறந்து விளங்குகின்றதெனக் கூறுவது மிகையாகாது.

துர்க்கிகளின் முற்கால நிலைமை

மேற்கூறிய பெரியார் கூறுவதாவது :—

"துர்க்கிகளின் ஒவ்வொரு செயல்களும் அந்தரங்கமாகவோ அல்லது பகிரங்கமாக வோ நடைபெற்றுக் கொண்டிருந்தன; எனினும் அரப்நாட்டின் கெவர்வம் மதிப்பு இவைகள் ஒரு பொழுதும் அவர்களது மனதை விட்டு நீங்கவில்லை. அன்னோர் அரப் நாட்டினை சுவர்க்கத்திற்குள்ள அடையாளமென மதித்திருந்தார்கள். ஆனால் எதுபொழுது பாலஸ்தீன், பக்தாத், அதன், முதலிய நகரங்களில் பிரஞ்சுக் காரர்கள் அடிவைத்தனரோ அக்காலமுதற்கொண்டு அப்புனித நாட்டின் மகிமை குறைய ஆரம்பித்தது."

இருக் உலமாக்களின் ஓசை

அராபிய நாடுகளின் நடத்தைகள் எவ்வளவு தூரம் பிற்போக்கடைந்திருக்கின்றதென்பதை மெய்ப்பிக்க இருக்கிலுள்ள உலமாக்களும் ஷெய்குகளும், ஷாஹ் பைஸல் அரசர் அவர்களுக்கு அனுப்பியுள்ள விண்ணப்பப்பத்திரத்தை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். அக் கோரிக்கைகளாவன:—

1. மானங்கெட்டு நடப்பவனுக்கு தண்டனை அளிக்கப்படல் வேண்டும்; நிர்வாண ஆட்டத்தை நிர்மூலமாக்க வேண்டும்; மதுபான மருந்தும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

2. வேசிகள் இங்கிருந்து நாடு கடத்தப்பட வேண்டும். எனெனில் இப்படிப்பட்ட நாணமற்ற நாரிமணிகளின் காரணமாக நாட்டில் அளவிடற்கரிய ஆபத்திற் கிடமான தொத்து வியாதிகள் பரவிக் கொண்டிருக்கின்றன. அதனால் ஆயிரக் கணக்கான மாந்தர்கள் தவிக்கும்படி நேர்ந்திருக்கின்றது. பெரிய பெரிய ராஜவீதிகளிலுங்கூட பகிரங்கமாக விபசார விடுதிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

3. அனுச்சாரத்திற் கிடமான வேடிக்கைகளும் கூத்துக்களும் அடியோடு அகற்றப்படல் வேண்டும்; அவை சம்பந்தமான எந்தக் காரியத்துக்கும் யாருக்கேனும் லைசென்ஸ் அளிக்கப்படாதிருக்க வேண்டும்.

4. பந்தய விளையாட்டுக்கள் பாவமென்று அறிவித்துவிட வேண்டும்; அவை தொத்து வியாதிகள் போன்று நாட்டில் பெரும்பான்மையாகப் பரவி வருகின்றன; இதனால் சமூகம் யாவற்றுக்கும் கெடுதியும் ஆபத்தும் விளையும்போலிருக்கிறது.

5 பரிசுத்த ரமலான் மாதத்தில் சாப்பாட்டு விடுதிகளையும் தேயிலைக் கடைகளையும் கண்டிப்பாக மூடும்படி கட்டளை பிறப்பிக்க வேண்டும்; இஸ்லாமிய அரசரால் நிர்வகிக்கப்படுகிற எத்தேசத்திலும் ரமலான் மாதத்தில் ஹோட்டல்கள் திறந்து வைக்கப்பட்டு அது மனிதர்களால் நிரப்பிக் காணப்படுவது மிகவும் வெட்கத்திற்குரிய தன்றோ? இவ்வாறாகவுள்ள அநேக கோரிக்கைகள் தேச சீர்திருத்த விஷயமாகக் கேட்கப்பட்டிருக்கின்றன. அத்துடனே பக்தாதிலுள்ள ஜமீஅத்துல் இஸ்லாமிய்யா சங்கமும் பொதுக் கூட்டம் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றது. அதில் ஒன்று மதுவருந்துவதை ஒழிக்க வேண்டுமென்றும், வாலிபர்கள் தீயகாரியங்களில் பிரவேசித்துக் கெட்டுப் போவதால், விலைமாதர்களின் நடனக் கச்சேரிகளை தடை செய்ய வேண்டுமென்றும் அரசாங்கத்தாருக்கு மனு செய்து கொள்வதென தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது என்பதே.

மேற்கூறிய விஷயங்களால் இஸ்லாமிய நாடுகளின் நிலைமை மேனாட்டு நாகரீகத்தின் காரணமாய் எவ்வாறு தலைகீழாகி இருக்கின்றதென்னும் உண்மையினைத் தெரிந்துக் கொள்ளலாம். ஐரோப்பாவிற்கு அடிமைப்பட்டிருப்பதைக் குறித்து தற்கால அதிருப்தி கொள்கின்றனர். விடுதலை அடைவதற்காக அதி தீவிரமாக கிளர்ச்சியும் செய்கின்றனர். ஆனால் ஐரோப்பாவின் கேடுகெட்ட நாகரீகத்தைப்பின் பற்றுவது அதைவிட மிக்க மதியீனமான அடிமைத்தனமாகாதோ?

அறிவிப்பு.

நந்தென்னாட்டின் கண் காதியானீ—அஹ்மதிய்யாப் பிரசாரம் தலைவிரித்துத்தாண்டவமாடும் இக் காலத்தில் தென்காசி முஸல்மான் ஆசிரியரவர்களால் இயற்றப்பெற்றுள்ள காதியானீ மத ரத்து நூற்களை வாங்கி வாசித்து ஜெயம் பெறுவீர்களாக.

கிடைக்குமிடம் மானேஜர்,
முஸல்மான் ஆபீஸ் தென்காசி.

நஞ்சிறார் கட்கு.

புத்தியுள்ள சிறுவன்.

முற்காலத்திலோர் அரசன் நெடுங்காலமாக அரசாட்சி புரிந்து வந்தான். அவ்வரசாட்சி மிக நீதமாக விளங்கிற்று. அவ்வரசனுக்கு சிறுவர்கள்மீது அளவற்ற அன்பு ஏற்பட்டிருந்தது. அதனால் இராஜ சபைக்கு வருபவர்கள் தங்கள் குழந்தைகளையும் அழைத்து வருவார்கள். அரசன் அச்சிறுவர்களுடன் வார்த்தையாடுவதும் அவர்களிடம் சம்பாஷணைகள் புரிவதும் வழக்கம். எந்த சிறுவனாவது புத்திசாலித்தனமாயும் சுறுசுறுப்பாயும் வார்த்தையாடினால் அரசன் அதனால் மிக்க மகிழ்ச்சியுற்று வெகுமதி அளிப்பான்.

அவ்வரசனுக்கு ஒரு மந்திரி உண்டு. அம்மந்திரி ஒருநாள் அரச சபைக்குச் செல்லும்போது தமது சிறுவனையும் அழைத்துச் சென்றான். சிறுவன் மிக இளம்பிராய முள்ளவனும் புத்தி சாதுர்யம் நிறைந்தவனுமிருந்தான். படிப்பில் மிகக் கருத்துள்ளவனும், பெற்றோர்களின் வார்த்தைகளைக் கேட்டு நடப்பவனும், சுத்தமாக இருப்பதில் பிரியமுள்ளவனாகவு மிருந்தான்.

இச்சிறுவன் தன் பிதாவினுடன் அரசமண்டபத்தில் நுழைந்தபோது முதலில் மிக்க மேதை மரியாதைகளோடு அரசனுக்குச் சலாம் செய்துவிட்டு தன் தகப்பனது சமீபம் ஒரு பக்கத்தி லுட்கார்ந்தான். அரசனுக்குச் சிறுவனின் நடையும், மரியாதையும் கூரிய சுறு சுறுப்பும் மிக்க சந்தோஷத்தை விளைத்தது. அதனால் அரசன் திருப்தியுற்று சிறுவனை தன் பக்கல் அழைத்து உட்காரும்படி செய்து மிகுந்த அன்பு பாராட்டினான். பிறகு அரசன் சிறுவனை நோக்கி "குழந்தாய்! உனது தந்தையின்வீடு நன்றாய் இருக்கின்றதா? அல்லது என் வீடு நன்றாய் இருக்கின்றதா? யாருடைய வீடு நல்லதாக இருக்கிறது? சொல் பார்ப்போம்" என வினவினான் உடனே சிறுவன் கூறிய விடையாவது: "என் தந்தையின் இல்லம் இந்த வீட்டைப் பார்க்கினும் அவ்வளவாக நன்றாய் இல்லை; இருந்தாலும் காருண்யமிக்க அரசபெருமான் அவர்கள் என் பிதாவின் வீட்டிற்கு விஜயஞ்செய்து அங்கு சிறிது நேரம் தங்கி இருந்து என் பிதாவினுடனும் என்னுடனும் சம்பாஷணை புரியுஞ்சமயத்தில் என்னிடம் இக்கேள்வி கேட்கப்படுமேயாகில், நிச்சயமாக யான் என் தந்தையின் வீடே மிக நன்றாயும் அழகாகயுமிருக்கிற தென்று சொல்வேன்."

வேந்தனது கைவிரலில் மிக அழகும் பளபளப்பும் பொருந்திய மோதிரமொன்றிருந்தது; அதை அரசன் கையிலிருந்து கழற்றி சிறுவனிடம் காண்பித்து "பைய்யா! இம்மோதிரத்தை விட சிறந்த வஸ்துவை நீ எங்கேனும் பார்த்திருக்கின்றாயா? இதைவிட நேர்த்தியான பொருள் உன் தகப்பன் வீட்டில் ஏதேனும் இருக்கிறதா?" எனக்கேட்டான். அதற்கு சிறுவன் அரசனைப் பார்த்து "மன்னர் பெருமானே! என் தந்தை வீட்டில் இதை விட அழகிய பொருள் ஒன்றுமில்லை; ஆயினும் இம்மோதிரத்தைவிட அழகிய பொருளை நான் பார்த்திருக்கின்றேன்; அப்பொருள் மோதிரம் மாட்டப் பட்டிருக்கிற அரசர் பெருமானின் கையேயாகும். நான் அக்கையினையே மோதிரத்தைப் பார்க்கினும் மிக அருமையான வஸ்து வென்று எண்ணுகின்றேன். அதை விட நல்ல வஸ்துவை நான் இதுவரை பார்த்ததில்லை." எனமிக்க சாதுர்யமாக விடையளித்தான். சிறுவன் அளித்த விடையால் இராஜன் மிக்க மகிழ்ச்சியடைந்து அநேக வெகுமானங்கள் கொடுத்து அனுப்பி வைத்தான்.

சிறுவர்கள் எப்பொழுதும் பரிசுத்தமாக இருக்கவேண்டும்; முன் யோசனையுடனும் மரியாதையுடனும் பிறரிடம் வார்த்தையாடி வரவேண்டும்; உஷாராகவும் புத்தி சாதுர்யமாகவும் பதிலளிக்கப் பழகவேண்டும்; இத்தகைய நடையினையுடைய குழந்தைகள் எந்த இடத்திலும் நன்கு மதிக்கவும் கௌரவிக்கவும் உபசரிக்கவும் படுவார்கள். அன்னோரை எல்லோரும் மிக்க ஆதரவோடும் அன்போடும் அணைத்து நன்றி பாராட்டுவார்கள். ஆகவே குழந்தைகள், கூரிய யோசனை சக்தியையும், புத்தி சாதுர்யத்தையும், பெரியோர்

கள் முன்பாக மரியாதையுடன் வார்த்தை யாடுவதையும் கற்றுக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

அச்சிறுவனிடம் காணப்பட்ட மரியாதை, யோசனை, புத்தி, இவைகளினாலேயே அரசன் மிக்க களிப்பெய்தினன்; அதனால் அவன் மீது அளவில்லா அன்புகொண்டு நன்கொடைகளும் கொடுத்துதவினன். சில சிறுவர்கள் மூர்க்க குணமும் பிடிவாதமும் பிறர்க்குத் தீங்குசெய்யும் சுபாவமும் உடையவராகக் காணப்படுகின்றனர்; தெருக்களிலும் சந்துக்கள் பாலங்களிலும் விளையாட்டு, வேடிக்கை முதலியவைகளில் கலந்து வீணே நேரத்தைப் போக்குகின்றனர். எழுதுவதற்கும் படிப்பதற்கும் அவர்கள் மன இடம் தருவதில்லை. இத்தகைய குழந்தைகளிடம் மரியாதை, யோசனை, புத்தி சாதுர்யம் முதலிய சிறந்த குணங்கள் அறவே உண்டாக மாட்டா. கெட்ட பிள்ளைகளுடன் சகவாசஞ் செய்வதினாலும் அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதினாலும் இன்னும் அவர்களுடன் வார்த்தையாடுவதினாலும் நல்ல பிள்ளைகளுங்கூட முடிவில் தீய பிள்ளைகளாகி விடுகின்றனர். நல்ல பிள்ளைகளாக இருந்தால் உஷாரும் புத்தி சாதுர்யமும் அவர்களிடமிருந்து அடிக்கடி வெளியாகும், பெற்றோர்களின் வார்த்தைகளை தட்டி நடக்க மாட்டார்கள்; தங்களுக்கு அறிவு கற்பிக்கும் உபாத்தியாயருக்கு மரியாதை செய்வார்கள்; சகோதர சகோதரிகளுடன் ஒற்றுமையாக நடப்பார்கள்; விரோதம் பாராட்ட மாட்டார்கள்; எழுத வாசிக்கக் கற்றுக் கொள்வதில் மிகுந்த கவனஞ் செலுத்துவார்கள்; உடலிலும் உடையிலும் அழுக்குப் படியவிடாமல் சுத்தமாக இருப்பார்கள்; சிறுவர்கள் இப்புத்திமதிகளை நன்கு மனதில் பதிய வைத்து நல்ல பிள்ளைகளாக விளங்குவதற்கு முயற்சி செய்வார்களாக.

ஒரு சிறுவனின் வீரம்

சிறார்காள்! சற்று கவனியுங்கள். பெரும் பெரும் காரியங்களை உங்களால் சாதிக்க முடியாதென்று நீங்கள் ஒருவேளை எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு சிறுவன் தன் தைரியத்தினால் எவ்வாறு பல மனிதர்களின் உயிரைக் காப்பாற்றினன் என்னும் விஷயத்தைக் கூறுகின்றோம். இதனை நீங்கள் நன்கு படித்துப் பார்ப்பீர்களாகில் சிறுவர்களால் மாபெரும் பார தூரமான காரியங்களைச் செய்ய முடியாதென்னும் எண்ணம் உங்களைவிட்டு மாறிவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

அச்சிறுவன் பிரான்ஸ் தேசத்தின் கடலோரமாகவுள்ள ஒரு ஊரி லிருந்தவன்; 1898-ம் ஆண்டில் ஒருநாள் ஒரு கப்பலானது அவனது கிராமத்திற்குச் சமீபம் வந்து கடலில் மூழ்கிப் போயிற்று; அக்கப்பலிலிருந்த அநேக ஜனங்களும் அதனுடன் மூழ்கி விட்டனர்; ஆனால் கப்பல் மாலுமிகள் வெகு சாமர்த்தர்களாக இருந்தனராதலின் அக்கப்பலின் உச்சஸ்தானங்களில் ஏறிக்கொண்டனர்; கப்பல் மாலை நேரத்தில் மூழ்கியதால் அச்சம்பவம் இரவு முழுவதும் ஒருவருக்கும் தெரியாது போயிற்று. மறுநாள் பொழுது விடிந்ததும், ஜனங்கள் வழக்கம்போல் வேலை யளவில் முன்னேக்கிச் சென்றபோது ஒரு மரக்கலத்தின் அடிப்பாகம் பூராவும் தண்ணீருக்குள் மூழ்கி இருக்கவும், மேற்பாகம் மட்டும் நீர் பரப்பின்மேல் தெரிவதையும் அதுவும் மெள்ள மெள்ள கடலுக்குள் ஆழ்ந்துக் கொண்டிருப்பதையுங் கண்டனர்; ஊரிலுள்ளோர் கடற்கரையில் வந்து கூடி கப்பலின் மேல் பாகத்தில் இருக்கும் மனிதர்களை எவ்வாறு காப்பாற்றலாமென்று யோசனை செய்தனர்.

சமுத்திரத்தில் அலைகள் மிக உயரமாகவும் உறமாகவும் அடித்துக் கொண்டிருந்ததால் உயிரை வெறுத்து அக்கடலில் தாவிச் செல்வதற்கு ஒருவருக்கும் மனந் துணியவில்லை; பிற ருயிரைக் காப்பாற்றுவான் வேண்டி தங்களுயிருக்கு அபாயத்தைத் தேடிக் கொள்ள யாருக்கும் தைரியம் வரவில்லை. 13 வயதுள்ள ஒரு சிறுவனும் அக்கிராம வாசிகளுடன் நின்றுகொண்டிருந்தான்; அவன் அவர்கள் எல்லோரும் பேசிக் கொண்ட வார்த்தைகளை நன்கு கவனித்தான். அவர்களுள் ஒருவராவது கப்பலின் சமீபம் போவதற்கு முன் வராத்ததைக் கண்டுமிக்க ஆத்திரமடைந்து உடனே ஒரு சிறிய படகில் குதித்து அதனைக் கப்பலை நோக்கிச் செலுத்தினன். இதனைக் கண்ணுற்ற கிராம வாசிகள் நாணமுற்றவர்களாக படகுகளில் ஏறி அவன் பின்னே புறப்பட்டுச் சென்றனர்; சிறுவன் கப்பலினருகிற் சேர்ந்த பின்னர் அநேக பட

குகள் அங்கு வந்து சேர்ந்தன. அடுத்த நிமிஷத்தில் அநேக உயிர்கள் காப்பாற்றப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டன.

அருமைச் சிறுவர்காள்! சிறுவன் எத்துணை தைரியமான வேலை செய்தான் பாருங்கள்; அவன் இன்று உலகத்தில் காணப்படாவிட்டாலும் அவனது வீர தீரத்தைக்குறித்த செய்திகள் இதுவரை உலகத்தில் நிலைத்திருக்கவே செய்கின்றன. அப்பையன் அவ்வாறு மிகத் தைரியமாக முன்வராவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். அவ்வூரிலிருந்த வயது சென்றவர்களும் அதைர்யசாலிகளாகவே போய் விட்டனர். அப்பையன் துணிந்திராவிட்டால் அக்கப்பலிலிருந்தவர்கள் ஒருபொழுதும் தப்பி இருக்க முடியாது. இச்சரிதையினால் தைரியமானது மகா சிலாக்கியமான பொருள் என நன்கு விளங்குகின்றது. அது எவ்வளவு அபூர்வமான காரியத்தையும் சாதிக்க வல்ல மிகச் சிரேஷ்டமான கருவியாக இருக்கின்றது; எவன் தைரியமாக முன் வருகின்றானோ அவனுக்கு இறைவன் பக்கபலமாக இருக்கின்றான். ஆகவே அவன் நிச்சயமாகத் தன் காரியத்தில் வெற்றி பெறுவான்; சிறுவர்களாகிய நீங்கள் தக்க வயதை எய்திய காலத்து பெரிய மனிதராக விளங்கவேண்டுமென்றும், உலகம் உங்களுடைய பெயரைக் கொண்டாடவேண்டும் என்றும் நீங்கள் உண்மையில் விரும்பவே செய்வீர்கள். உங்களுடைய இங்நாட்டம் நிறைவேற வேண்டுமானால் எந்த வேலையையும் மிக ஆண்மையுடனும் தீரத்துடனும் நடத்த முன்வரவேண்டும். ஆனால் நீங்கள் தைரியமாக முன் வந்து முயற்சி எடுத்த காரியங்களில் முதன்முதலில் ஜெயம் பெறத்தான் வேண்டுமென்பது அவசியமில்லை. உங்கள் காரியம் வெற்றிகரமாக முடியாமல் போயினும் அதனால் நீங்கள் தைரியத்தைமட்டும் இழக்காதீர்கள்; மறுபடியும் அவ்வேலையில் ஊக்கமாக உழைத்தால் ஆண்டவன் உங்களுக்கு உதவி செய்வான்; முடிவில் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

தற்கால உலகில் கீர்த்திவான்களென பெயரெடுத்திருக்கும் பெரியோர்களிற் பலரும் சாமானிய குடும்பங்களில் பிறந்துவளர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அன்னோர் தங்கள் விடாமுயற்சியினாலும் தைரியத்தினாலுமே தங்கள் பெயர் பிரஸ்தாபம் உலகில் எங்கும் பரவத்தக்க பெரிய கீர்த்திக்கும், உலகத்தவர் தங்களைப் போற்றிக் கொண்டாடும்படியான பெரிய பதவிக்கும் வந்துள்ளனர். ஒரு வேளையில் மட்டும் ஒரு அருமையான காரியத்தைச் செய்யத் தைரியமாக முன்வருவதுகொண்டு ஒருவர் பெரிய மனுஷராகிவிடமாட்டார். எந்தக் காரியத்திலும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி நேரிடுவதியல்பு. ஆகவே எத்துணை முறை தோல்வியுறினும் அதைரியங் கொள்ளாமல் மறுமுறையும் அக்காரியத்தைச் செய்யவேண்டும். அதனால் எப்படியாவது நீங்கள் வெற்றியுறுவீர்கள்.

சிறுவர்காள்! நீங்களும் பிற்காலத்தில் பெரிய மனுஷர்களாக விளங்க வேண்டுமென்று ஆசையுறுவீர்களேல் தொடங்கிய வேலையினை கடைசி வரையில் செவ்வனே நடத்திச் செல்லுங்கள்; தைரியத்தை விடாதீர்கள்; அப்பொழுது நீங்கள் வெற்றியடைவது நிச்சயம்.

நண்பருணர.

காரைக்கால் அமுர்தகவி அ. சாயபு மரைக்காயர் அவர்களால் வரையப் பெற்றது.

சந்தக்கவி விருத்தம்

கடல்பரந்த புவிதடத்தில்
கருணையோடு மக்களை
உடல் உயிர்போலொன்றுய்வாழ்க
உபன்னியாசம் புகட்டிடும்
மடல் விரிந்து கமழ்ஹிபாஜத்
இஸ்லாம்மாலை இதழினுள்
படல்வரைந்து கட்டுரையை
பதித்தழிக்க வேண்டுவாம்.

சென்ற சில நாளைக்கு முன் வெளிவந்துள்ள குடி அரசு மாலை 7-மலர் 30-17-வது

பக்கத்தில் (வீர இளஞ்சிறுர்களே! மதத்தை ஒழியுங்கள்) என மகுடமிட்டு பட்டுக்கோட்டை கோ. ஷண்முக சுந்தரம் அவர்கள் எழுதிய வியாசத்தில் எல்லாமதங்களையும் பொதுப்படையாகத் தாக்கியும் முக்கியமாக இந்துமதத்தைப் பற்றி பரிசீலனைச் செய்து அவற்றிலுள்ளத் தவறுகளில் சிலவற்றை விளக்கியும் வரைந்திருக்கின்றார். மற்ற மதங்களும் இத்தகைய ஊழலில் தானிருக்குமென்பது நண்பரின் கருத்துப்போலும்.

சோதரீர் வந்தனம். உடம்பிற்கு உயிரும் நாடியும் பிரதானம்; அதற்கோர் அல்லல் ஏற்பட்டால் தக்கவைத்திய நிபுணர்களைக் கொண்டு பரிசீலனை செய்து அவிழ்தங் கொடுக்காதவரை பெரும்ஆபத்திற் கிடமாகுமென்பதும் வெள்ளிடையே. அதுபோல் மதங்களில் உள்ள குற்றங்குணங்களை முற்றும்ஆராய்ச்சிசெய்து பாமரமக்களுக்கு விளக்கித் தருவது கலைவல்லப் பெரியார்கட்குள்ள முக்கியக் கடமை யென்பதை யாரே மறுக்க வல்லார்; அதுவே சிறந்தப் பணி யென்பதற்கு எள்ளத்துணையும் அய்யமில்லை.

மதமென்பது கடவுளால் அனுக்கிரகஞ் செய்யப்பட்டதும், மனிதர்களின் கட்டுரைகள் கலக்கப் படாததும் அறிவிர்க்கும் ஆருய்ச்சிக்கும் முரண்படாது ஒத்தமைந்ததாகவுமிருக்கவேண்டு மென்பதே அறிஞர்களின் சித்தாந்தம். அதுவே சன்மார்க்கமெனவும் நேருனவழி யெனவும் கூறுவது பொருந்தும்.

இத்தகைய அம்ஸமற்று மனிதர்களால்சுய நலங்கருதி மக்களை மாக்களாக மதித்து முன்னுக்குப் பின் முரணுக பலக் கட்டுரைகளைப் பொறித்து வெளியிட்டிருக்கும் மதங்கள் மதமாகுமா? அம்மதத்தையும் அதற்கனுசரணையாக துணைனிற்கும் நூற்களையும் ஒழிப்பதோடு நில்லாது தாழப்புதைப்பதே சாலச் சிறந்ததாகும். இம்மதங்களிற்கு சுய நலப் புலியின் சூழ்ச்சி யெனும் பட்டம் படைத்தல் பொருந்து மல்லாது சன்மார்க்க மென்று சாற்றுதற்கு குருணிக் கூட யோக்கிய மில்லை என்பதும் நுண்ணறிவாளர்க்கு மறைந்ததல்ல:—

சுய நலப்புலிகளால் மக்களை வஞ்சித்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மதங்கள் அது எத்துணை சோடோபசார அலங்கிர்தத்தோடு உலகெல்லாம் வியாபித்து உச்சஸ்தானத்தில் வீற்றிருந்தாலும் ஈற்றில் பங்கமுற்று மக்களால் ஒதுக்கித்தள்ளப்படு மென்பதர்க்கையமில்லை. சத்தியத்திற்கு ஜெயமும் அசத்தியத்திற்கு அபஜெயமும் ஏற்படுவது சகஜமே. சுயமரியாதை இயக்கமே இதர்க்குத்தக்க சாக்ஷியமாகும்!

சோதரீர்! நுங்கள் இந்துமத ஆராய்ச்சியில் முதலில் தாங்களீடுபட்டு சிலவற்றை விளக்கியது போல் மற்ற மதங்களிலும் பாரபக்ஷமற்று பரிசீலனை செய்து பார்த்தால் சன்மார்க்க சத்திய உண்மை மதம் ஒன்று இல்லாமற் போகாது. மதமில்லா விட்டால், மக்கள் உய்வதெங்கனம்?

கடவுளால் அருளப்பட்ட இயற்கை சுத்த சத்திய மதத்தை இம்மண்ணுலகோர் தானென்னே விண்ணுலகத்தோரையும் உதவிக் கொண்டாலுங்கூட ஒழிக்கவோ புதைக்கவோ முடியவே முடியாது. அஃது பகல் கனவாகத்தான் முடியும். நுங்களின் மதத்தலைவர்கள் தாங்களும், தன்பின் சந்ததியார்களும் க்ஷேமமுற்று வாழ்குவான் வேண்டி நுங்களிடம் பல துறைகளிலும் பணம் பறிக்க சூழ்ச்சிகள் செய்திருப்பதோடு நில்லாது அன்னவர்களின் பாதத்தில் சிறந்தோய ஷாஷ்டாங்கம்செய்யவும் அடிமைப் படுத்தி வைத்திருக்கின்றார்கள். என்னேவிபரீதம்? இதுவா மதத்திற்கழகு? அதை நீங்களும் உணராமலில்லை. யாருக்கோவந்த விருந்தென்று வாளாவிருந்து விட்டீர்கள்; இது பொழுது நுங்களின் ஆராய்ச்சியின் பயனுய் மக்கள் புத்துணர்ச்சி பெற்று மூடக்கொள்கையை வெறுத்தொதுக்குவது குறிப்பிடற்பாலதே.

அன்பார்ந்த சோதரீர்! பாரபக்ஷ மற்ற மனதுடன் சற்று தயவுசெய்து பரிசீலனை செய்து பாருங்கள்; (கடவுள்) அல்லாஹுத்தஆலாவால் அனுப்பித்தந்த உண்மைத் தூதரும் சத்தியசீலரும் இஸ்லாம் மதஸ்தாபகருமாகிய எம்பெருமான், ஈகை குணம் படைத்த பூமான், முஹம்மது நபீ (ஸல்.) (ஆண்டவன் அவர்கட்கு சாந்திபுரிவானுக.) அவர்கள் ஓர் தினம் தாங்கள் வீற்றிருக்கும் திருசபையின் கண் தருமம் (ஸதக்கா) செய்வதற்காக வந்திருந்த பேரீத்தங்கனியில் நின்றும் ஒன்றை தங்கள் பவுத்திரர்களில் இழம் வயதை

உடைய வொருவர் வாயினுள் வைத்து சுவைப்பதைக் கண்டதும் தீவிரமாயவர் முன்னடுத்து தங்களின் திருவிரலை வாயினுள் விட்டுக் கனியை வெளிப்படுத்தி தூர யெரிந்துவிட்டு ஜனங்களை நோக்கி எச்சரிக்கை செய்ததாவது:—ஏழை சோதரர்களுக்காக தருமம் செய்குவான் வேண்டி வந்திருப்பதில் கனியானாலும் துணிமணியானாலும் சரியே எனக்கும் என் சந்ததிகளுக்கும் விலக்கப் பட்டதாக யிருக்குமென்று விடை பகர்ந்த தோடு, வருஷா வருஷமும் நுங்கள் முதலில் நூற்றுக்கு இரண்டரைரூபாய் விகிதம் ஜகாத் ஈயும்படியாய் இறைவனால் ஏவப்பட்டிருக் கின்றதல்லவா அவைகளில் நின்றும் எங் களுக்குக் கொடுக்கவும் என் சந்ததிகள் வாங் கவும் கூடாதென்றும் கண்டித்திருக்கின்றார் கள். வலிய இனமாக வந்துள்ள (ஹிபா) வஸ்துக்களைத் தாங்கள் ஒப்புக்கொண்டிருப்ப துடன் சந்ததியார்களையும் வாங்கிக்கொள்ள வும் அனுமதி யளித்திருக்கின்றார்கள். ஆ, என்னே? இப்பெரியாரவர்களின் தூய்மைக் குணமும் நடைமுறையும்

இன்னமும் இறைவனால் தங்களுக்கனுக்கிர கஞ் செய்யப்பட்ட பரிசுத்த சத்திய முத்தி மதத்திற்கு எள்ளத்துணையும் வின்னப் படாது தூய்மைப்படுத்தி வந்ததற்கு அடியில் தரும் விஷயமே தக்க ஆதாரமாகும். அதா வது திருமறையில் அந்தாக்கிய்யா நகர வாசிகளிடம் மாபெருந் தீர்க்கதரிசிகள் இரு வர் பசிப்பிணிக்கு பொசிப்பளிக்கும்படியாய் வினவ, அவர்களுக்கு திருப்திகரஞ் செய் யாது விலகிகொண்டனர்கள் என்று கூறப் பட்டிருப்பதைக் கண்ணுற்ற பின்னோர்களா கிய நகரவாசிகள் முன்னோர்களின் தவறை நிவர்த்திப்பான்வேண்டி அஞ்ஞானமகற்றி மெஞ்ஞானம் புகட்டும் பெருமானிடம் விஞ் ஞாபித்துக் கொண்டதாவது:—தேவரீர் தங் களுக்கு அருளப்பட்ட திருமறையின்கண் எங்கள் மூதாதைகள் விஷயத்தில் கூறப் படும் வாக்கிய அக்ஷரத்தின்கீழ் அமைந்தி ருக்கும் சிறிய வொத்தைப் புள்ளியையகற்றி அதற்குப்பகரமாய் மேல் இரண்டு புள்ளியை அமைத்துத்தரல்வேண்டும்; அவ்விதம் செய் விப்பீர்களே யானால் வேண்டியப் பொருளும் சன்மானமும் சமர்ப்பிக்கின்றோமென்பதே.

(கீழ்புள்ளியையகற்றி மேல் இரண்டுபுள்ளியை வரைந்தால் விருந்தினர்க்கு பொசிப்பளித் ததாகப் பொருள்படும்) (அபவ் - அதவ்)

அதற்கு உத்தமக்குணம் படைத்த சத்திய சீலர் விடை எவ்விதம் பகர்ந்துள்ளார்க ளென்று நினைக்கிறீர்கள்? புன்முறுவல் பூத்த அமுத வாய்திறந்து சோதரீர்! இது ஆண்டவ னால் அருளப்பட்ட வேதம்; அதிலுள்ள ஒரு அக்ஷரத்தையோ சிறியதொரு புள்ளியையோ மாத்தவும் கூட்டவும் குறைக்கவும் எனக்கு அதிகாரமில்லை; நான் ஏவப்பட்ட அடிமையா யிருக்கின்றேன் என்பதே.

என்னே? இறைவன்பால் இவர்களுக்குள்ள அச்சமும் பக்தியும்? சோதரீர் மேல்காட்டிய அம்சங்களால் மதத்தலைவர்களின் யோக்கி யாதி கைங்கரியங்களைத் தெரிந்து தீர்ப்புச் சொல்லும்படியாய் நுங்களிடமே விட்டுவிடு கின்றேன்.

நண்பீர்! இதர மதங்களைப்போல் காலத் திற்கேற்ப கூட்டியுங் குறைத்து பின்னப் படாது அன்று ஆண்டவனா லளிக்கப்பட்ட தே போன்று இன்று பதிமூண்டரை நூறாண் டளவும் பரிசுத்தமாகவே திகழ்வதைக் காண லாம். உலக இறுதி வரையிலும் இவ்விதமே இருந்துவருமென்பதற் கையமில்லை.

சேற்றில் பாரியக்கல்லைச் சுழட்டி அடித்தற் கொப்ப எல்லா மதங்களையும் பொதுப்படத் தாக்கி இழைங்கர்கட்கு அறிவுறுத்துவது அறிவாளிக்கழகன்று.

சோதரீர்! துவேஷம் வேண்டாம். பார பக்ஷமற்று நடுநிலைவகித்து ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து ஆபாசம் நிறைந்த பொய் மதங்களை மக்களுக்கு விளக்கிக் காட்டி தாக்கி யொழிப்பதே சாலச் சிறந்ததாகும். அவ்வா றின்றி பொதுப்படையாக யாவற்று மதங் களையும் தாக்குவது தகைமை உடையதன்று —விரிவஞ்சி நிறுத்திக்கொள்கின்றேன்—வந் தனம்.

முந்துங்கள்

நம் அரும் மாசிகையின் இரண்டாம் வால்யூமத்தில் சில பிரதிகளே எஞ்சியுள்ளன ஆதலில் உடனே பெற்றுக்கொள்ள முயற்சியுங்கள்.

காலிகோ பைண்டு ரூ. 3—10—0

மௌலானா அவர்களின் நிருபம்

மீரட்வாசியாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஹாபிஜ் காரீ, அல்லாமா, ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் சித்தீகீ அவர்களது பிரைவேட் செக்ரிடரி, கிள்ளான் பிரபல வர்த்தகரும் பொதுநலப் பிரியருமாகிய ஆலீஜனப் K. A. பகீர் முஹம்மது சாஹிப் அவர்கட்கு எழுதிய கடிதம்.

அன்பார்ந்த தங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும். ஹஸ்ரத் மௌலானா அவர்கள் அநேக முக்கிய அலுவல்களை கவனிக்கவேண்டிய திருப்பதினாலும் சுரம், குளிர், ஆஸ்தமா, இவற்றால் அடிக்கடி பீடிக்கப்படுவதின் காரணமாகவும், தங்களுக்கு நேரில் நிருபம் வரைவதற்கு முடியாமல் போனமைக்கு மிக்கவாறும் வருத்தமுற்று, அவர்கள் சார்பாக என்னை தங்களுக்குக் கடிதம் வரைந்து அனுப்ப அனுமதி அளித்தார்கள்.

அறிஞரும், பரிசுத்தத் தன்மை யுடையோருமாகிய நம் ஹஸ்ரத் அவர்கள் ஜாவாவிலிருந்து பிரயாணமாகி இங்கு (போர்ட்லூயீஸ், தென் ஆப்ரிக்கா) சென்ற செப்டம்பர் 25-ந்தேதி வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இங்கு விஜயஞ் செய்வதை முன்னிட்டு ஏராளமான முஸ்லிம்கள் ஒன்றுகூடி அவர்களை நல்வரவேற்றனர். அவர்களை நேரில் தெரிசிக்க வந்தவர்களில் மிஸ்டர் E. தியடோர் என்பாரும் ஒருவர். அவர் ஒரு தாராள நோக்கமுள்ளவர். கிறிஸ்டியன் மிஷ்னரீஸ், ஆரிய சமாஜம், காதியானீ மிஷ்னரீஸ் முதலிய பல்வேறு மதத் தலைவர்களை அவர் பற்பல நாள் சந்தித்து மார்க்க விஷயமாக வினவியமைக்கு, ஒருவரும் அவருக்கு சரியான பதில் கொடுக்க முடியாது போய்விட்டது. ஆனால் நம் ஹஸ்ரத் அவர்கள் இரண்டு நாட்கள் தர்க்கவாதஞ்செய்து அன்னாரை மிகவும் திருப்தியுறச் செய்தார்கள். அதற்கிணங்க அவர் பகிரங்கமாக இஸ்லாத்தை உள்ளன்புடன் தழுவி முஹம்மது யூசுப் என்னும் பெயரையும் ஏற்றுக்கொண்டார்.

சனிக்கிழமை இரவிலும் ஞாயிற்றுக்கிழமை பகலிலும் ஜும்ஆ மஸ்ஜிதில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அது முதல் இத்தீவிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் உபந்நியாசங்கள் நடைபெற்றவண்ணமாகவேயிருந்தது. இங்கு நடந்தேறிய சில வேலைகளைக் குறித்து அடியில் சுருக்கமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்:—

I. 10-10-31-ல் எங்மென்ஸ் முஸ்லிம் அசோஷியேஷன் மெம்பர்களால் கூட்டப்பெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இங்லீஷிலும் உருதுவிலும் "நாகரீகம்" என்னும் விஷயமாக சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அவ்வமயம் பல்வேறு மதஸ்தர்களும் பல்வேறு வகுப்பினர்களும் குழுமி இருந்தனர். உதாரணமாக ஷியாக்கள், காதியானிகள், ஆரிய ஸமாஜிகள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், வர்த்தகர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், பத்திராதிபர்கள் முதலிய சகல வகைப் பிரிவினர்களும் விஜயஞ்செய்திருந்தனர். அங்கு குழுமிய ஜனங்களின் எண்ணிக்கை சுமார் 4 ஆயிரம் வரை இருக்கும்.

II. 17-10-31-ல், இத்தீவிலுள்ள முஸ்லிம்களால் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பெற்றது. நம் மௌலானா அவர்கள் அக்கூட்டத்திலுள்ள முஸ்லிம் தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு மத்திய போர்டு ஸ்தாபனம் செய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே கனம் டி. அப்துற் றஹ்மான் (ஜும்ஆ மஸ்ஜித் தலைவர்) அவர்களை பிரஸிடெண்டாகவும், கனம் A. R. முஹம்மத் (Y. M. M. A. தலைவர்) அவர்களை காரிய தரிசியாகவும் கொண்ட மத்திய முஸ்லிம் போர்டு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

III. 26-10-31-ல், முஸ்லிம் பிரதிநிதிகளடங்கிய தூதுவக்கோஷ்டிக்கு நம் மௌலானா அவர்கள் தலைமை வகித்து, ரூயல் கமிஷன் முன் அழைத்துச் சென்று முஸ்லிம்களின் குறைகளை விவரித்தார்கள்.

காதியானீ இயக்கம்

அபுல்ஹஸன் மத்ராஸீ வரைவது.

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நாம் இதனை ஆரம்பிக்கின்றோம்)

நீர்வளம் நிலவளம் முதலியன ஒருங்கே அமையப்பெற்றுள்ள நந் தென்னாட்டு முஸ்லிம்களில் கல்விக்குறைவு ஏற்பட்டிருப்பினும் மார்க்க பக்தி, மதவைராக்கியம், பரிசுத்த நிர்ணயம் முதலியவைகள் சிறந்து விளங்கிக்கொண்டிருப்பது காணலாம். பல தேயங்களில் காணப்படுவதேபோன்று ஷீஆ, ராப்ஜீ, கார்ஜீ முதலிய வகுப்பினர்களுங்கூட நந்தமிழ்நாட்டில் கிடையா. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாய் சிறிதுகாலமாக காதியானீ—அஹ்மதீ முதலிய தீய வழிகெட்டப் பிரசாரம் நடைபெற்றுவருவதால் இக்கெட்ட கொள்கைகள் மெள்ளமெள்ள நம் மக்களிடையே பரவிவருகின்றது.

காலஞ்சென்ற குலாம் அஹ்மத் காதியானீயை நபீ என்றும், ரசூலென்றும், மஹ்தியென்றும், மஸீஹென்றும் ஒருசிலர் கூறத் துணிந்திருக்கின்றனர். மற்றுஞ் சிலரோ தாங்கள் அஹ்மதீ வகுப்பென்னும் ஒரு வர்க்கத்தை ஏற்படுத்தி அதற்கென்று ஒரு தனி மஸ்ஜிதை கட்டிவைத்துத் தங்களை ஓர் தனி சமூகமாக ஆக்கிக்கொண்டு மிர்ஸா சாஹிபை நபீ என்றும், வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ், மஹ்தீ என்றும், ஆண்டவனால் அனுப்பப்பட்ட இமாமென்றும் அவரைப் பின்பற்றி நடப்பது கடமைஎன்றும், அவரை ஒப்புக்கொள்ளாதவர்கள் காபிர்களென்றும் கூறுநிற்கின்றனர். இவர்களின் அறியாமை தானென்னோ ? இந்நிலமையில் கொளும்பு *அஹ்மதிய சங்கத்தார் இச்சந்தர்ப்பத்தைத் தக்க சமயமெனக் கருதி தங்கள் ஆசாமிகளை இப்பகுதிகளுக்கு அனுப்பித் தங்கள் தீயப் பிரசாரத்தைப் பரத்தி பாமர ஜனங்களை ஏமாற்றிவருகின்றார்கள். தாங்கள் குர்ஆனையும் ஹதீதுகளையும் முக்கிய ஆதாரமாகக் கொண்டிருப்பதாகவும், திருக் குர்ஆனின் அத்தாட்சிகளைக்கொண்டே மிர்ஸா ஸாஹிப் நபீ என்று நிரூபிக்கப்படுகிறாரென்றும், மக்கா முஅல்லமாவிலுங்கூட அஹ்மதியர்கட்கு தனி ஜமாஅத்து ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்றும், அஹ்மதிய இமாமே அவர்களுக்குத் தொழுகை நடத்தி வருகிறாரென்றும் இதுபோலொற்ற அநேக பசப்பு வார்த்தைகளைக்கொண்டு பாமர மக்களை ஏமாற்றித் தங்கள் வலைக்குள் சிக்கவைக்க முயற்சித்து வருகின்றனர். பாவம் மார்க்கக்கல்வி, உலக ஞானமில்லாத ஒரு சில மக்கள் இப்பசப்பு வார்த்தைகளை நம்பி வழிகெட்ட கொள்கைகளை ஒப்புக்கொள்ளத் துணிகின்றனர். இக்கெட்ட இயக்கம் நாளடவில் நந் தென்னாட்டின் பல பாகங்களையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுமோவென்றஞ்சவேண்டியிருக்கின்றது. ஆதலின் இதுசமயம் அன்னோர்க்கு மிர்ஸா எவ்வண்ணமானவர், அவரது ஜீவிய விபரமென்ன, அவர்செய்த தாவாக்களென்ன, அவர் அறிவித்த தீர்க்கதரிசனங்களென்ன, அவர் உளரிக்கொட்டிய வியாசங்களென்ன, அவரது கூற்றுக்கள் எவ்வாறு நம் பரிசுத்த மார்க்கத்திற்கு முரண்படுகிறது, அதுசம்பந்தமாக உலமாக்கள் செய்திருக்கும் தீர்மானங்களை அனுசரித்து எழுந்த தாவாக்கள், அதன்மீது கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் இவைகளை விபரமாய் எடுத்தெழுதி பொது ஜனங்களுக்கு அறிவுறுத்த வேண்டியது மிகமிக முக்கிய விஷயமாயிருக்கின்றது. ஆதலின் இச்சிறிய நூலை ஐந்து

* இவர்கள் மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானீயின் மகனான பஷீர் அஹ்மதின் காதியானீ வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மிர்ஜாசாஹிபை நபீ என்றும் ரசூலென்றும், அவர் உளரிக்கொட்டிய யாவையும் வஹீ என்றும் நிர்ணயங் கொள்ளக்கூடியவர்கள்.

அதிகாரம் ஒரு முடிவுரையில் எழுதி முடிக்கக் கருதியுளேன்.

1-வது அதிகாரத்தில் மிர்ஸாவின் சரித்திரத்தையும் II-வது அதிகாரத்தில் அவருடைய தாவாக்களையும், பதற்கூற்றுக்களையும் III-வது அதிகாரத்தில் அவரது கூற்றுக்கள் குர்ஆன் ஹதீதுகளுக்கு முரண்பட்டிருக்கும் விபரங்களையும், உலமாக்களின் தீர்மானங்களேயும் IV-வது அதிகாரத்தில் அவர் அறிவித்த தீர்க்கதரிசனத்தையும், அது பொய்யாய்ப் போன விபரத்தையும் V-வது அதிகாரத்தில் சில கோர்ட்டுகளின் தீர்ப்புகளையும் விபரிக்கப்படும். நேயர்கள் இதனை ஊன்றிப்படித்து பயன்பெருவதோடு மற்றவர்களுக்கும் வாசித்துக்காட்டி யாவரும் பயன்பெருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இச்சிறிய நூலால் முஸ்லிம்களுக்கு தக்க பயன் ஏற்படுமாயின் அதுவே எமக்கு பெரும் கைம்மாருகுமென் பதிலய்யமில்லே. ஏ ஆண்டவா! மானிடர் யாவரும் உண்மையை உணர்ந்து நேரான பாதையில் சீராகச்செல்ல கிருபைபாலிப்பாயாக.

1-வது அதிகாரம்

மிர்ஸாவின் சரித்திரச் சுருக்கம்

மிர்ஸா சாஹிபின் சரித்திர விபரங்களில் பல நம்நேயர்கள் தெரிந்திருக்கின்றன ராயினும் இவண் அவருடைய தாவாக்கள், தீர்க்கதரிசனங்கள் முதலியவற்றை விபரித்தெழுதப் போவதால் அவருடைய சரித்திரத்தையும் சுருக்கமாக ஞாபகத்திற்குக் கொணர்வது உசிதமென நினைக்கின்றனம்.

இவர் பாஞ்சால நாட்டில் குருதாஸ்பூர் ஜில்லாவில் காதியான் என்னும் கிராமத்தில் உயர்ந்ததோர் குடும்பத்திலுதித்தவர். இவர் தந்தையின் பெயர் மிர்ஸா குலாம் முர்தஸா வாகும். மிர்ஸாசாஹிப் ஆங்கிலம், உர்து, பார்ஸீ பாஷைகளில் ஓர் அளவு கல்வி பயின்றிருந்தமையால் ஏதேனுமொருதொழிலிலமர வேண்டுமென முயற்சித்து சியால்கோட்டில் ஜூனியர் கிளர்க் வேலையிலமர்ந்தார். இதில் அவருக்குப் போதிய வருமானம் கிடைக்காமையால் இதை விடசற்று உயர் பதவியில மரவேண்டுமெனப் பிரயத்தனப்பட்டு "முக்தார்" வேலைக்கு முயற்சித்தார். ஆனல் அதற்குவேண்டிய பரீக்ஷையில் அவர் தேர்ச்சி பெருததால் அவ்வேலை கிடைக்காமற் போயிற்று. உடனே அவர் தனதூருக்குச் சென்று மார்க்க விஷயங்களைப் படிப்பதிலும், வைதீக நூற்களை ஆராய்ச்சி செய்வதிலும், தர்க்க வாதங்களுக்குள்ள முறைகளைத் தெரிந்து கொள்வதிலும் ஈடுபட்டிருந்தார். இதன் இறுதியில் அரபிப் பாஷையையுங் கொஞ்சம் கற்றுக்கொண்டார். அவர் இயற்கையிலேயே தீக்ஷ்ணியமும், கூர்மையும், மனன சக்தியும் அமையப் பெற்றிருந்தார். அத்துடன் அகப்பெருமை, உயர் பதவியின் அவா முதலியன அவரது ஹிருதய கமலத்தில் நிறைந்திருந்தது. அவ்வமயம் வட இந்தியாவின்கண் கிறிஸ்தவர்கள், ஆரியர்கள் முதலானேரின் விஷமப்பிரசாரம் தலை விரித்தாடிக் கொண்டிருந்தது. இவருக்கு ஆங்கிலம் உர்து பார்ஸீ முதலிய கலைகளில் ஒருவாறு அனுபோக மேற்பட்டிருந்தமையால் அவர்களுடன் மல்லாடத்தொடங்கினர். இதனல் அப்பகுதிகளில் இவருடைய பிரஸ்தாபம் ஓங்கத் தலைப்பட்டது. அவ்வாறு மல்லாடுங்கால் சன்மார்க்கத்திலொன்றிருக்க இவர் ஒன்று சொல்லி அவர்களோடு தர்க்கம் புரிவார். அது விஷயமாய் உலமாக்களும் அறிஞர்களும் வினவின், தர்க்கம் புரிவான் வேண்டி கிறிஸ்தவர்களிடம் அவ்வாறு கூறினேன்; எனது கொள்கை அதுவல்ல என பதிலளிப்பார். அது சமயம் கிறிஸ்தவர்களுடன் மல்லாடவேண்டிய அவசிய மிருந்ததால் உண்மையிலேயே தர்க்கத்திற்காக வேண்டியே கூடுதல் குறைவாய்ப் பேசுகின்ருர் போலும் என எண்ணியிருந்துவிட்டனர். கடாசியாக தப்புந்தவறுமாய் சன்மார்கத்திற்கு முரணுக அவர் கூறும் கூற்றுக்கள்தான் தன் கொள்கை எனக்கூற முற்பட்டார். கிறிஸ்தவர்களோடு மல்லாடும் போது இஸ்லாம் உண்மை மதமென்பதை ஸ்திரப்படுத்து வதற்குகாகவுள்ள அத்தாட்சிகளை வெளியிடுவான்வேண்டி "பராஹின அஹ்மதிய்யா" என்னும் நூலை எழுதத் தொடங்கினர். அவருடைய தற்சுபாவத்திலேயே தீக்ஷ்ணியம், கூர்மை முதலியன அமைந்திருந்ததின் காரணமாய் அவர் ஆரம்பத்தில் எழுதிய பிரகடனம் சற்று போற்றத் தக்கனவாகயிருந்தது. இதிலிருந்து அவருக்கு அகப்பெருமை ஏற்பட ஆரம்பித்தது. அதனல் அவர் தன்னை நிகரற்ற தீக்ஷ்தரென மதிக்க

முற்பட்டு இதைப் போன்று 300 அத்தாட்சிகளைத் தம்மால் வெளியிட முடியுமென்று கொட்டை எழுத்துகளில் விளம்பரஞ் செய்ய முற்பட்டார். * "பராஹீன அஹ்மதிய்யா" வில் அவர் எழுதியிருந்த வியாசங்களும், கருத்துக்களும் சமயோசிதமான தாகவும், கிறிஸ்தவர்களின் பிதற்றலுக்குத்தக்க வாயாப்புக் கொடுக்கக்கூடிய தாகவுமிருந்ததால் அது வெளியிடப்பட்டவுடன் நாலுபக்கங்களிலிருந்தும் பாராட்டுரைகள் எழுந்ததுடன் மனிதர்களின் கவர்ச்சியும் ஏற்பட்டதினுல் அவருக்கு சன்மானமளிக்க முற்பட்டனர்; அதிகக்கிரயங்கொடுத்து அப்புத்தகத்தை வாங்கிப்படிக்கவும் ஆரம்பித்தனர்; அதனுல் அவருடைய பணவருவாய் பெருகிற்று; இதிலிருந்து அவருடைய சோதனை காலம் ஆரம்பிக்கின்றது. இனி நாம் உலகத்தின் கண் எவ்வாருன வலையை வீசியபோதிலும் கோரிய பலன் கிட்டுமெனக்கருதினுர். இவ்வாறு பணப்பெருக்கும், கெர்வச்செருக்கும் ஏற்பட்டவுடன் ஆண்டவனும் தம்மீது கருணை கூர்ந்து விட்டான்; இனி தமக்கு எவ்வித குறையுமில்லை எனக் கருதத்துணிவு கொண்டார். இலௌகீக விஷயங்களில் தமக்கு பற்பல சௌகிரியங்கள் ஏற்பட்டிருப்பதை யுண்ணி வைதீக விஷயங்களிலும், பலவாருன தாவாக்களைச் செய்யக் கருதி ஆரம்பத்தில் தன்னை ஒரு சீர்திருத்தக்காரரெனவும், உலகின்கண் ஏற்பட்டிருக்கும் அதர்மங்களை நீக்குவான் வேண்டி எழும்பினதாகவும் கூறினுர். இவருடைய பதற்கூற்றுக்களை உலமாக்களும் அறிஞர்களும் உதாசினஞ் செய்து இவரை ஒரு பித்தரெனக் கருதினுர்களேயன்றி அதை ஒரு பொருட்டாக மதித்தார்களில்லை. இக்காரணத்தினுல் யாவரையும் மடயரெனக்கருதி அகப்பெருமை, தற்பெருமை கொள்ளலானுர். உலகத்தின் கண்ணுள்ள முஸ்லிம்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் யாவரும் தன்னை ஒப்புக்கொண்டு தலைவராகக் கொண்டாடுவதற்குள்ள மார்க்கமொன்றை கண்டுபிடிக்க சிந்தனைபுரிய முன்வந்தார். தாம் முஸ்லிம்களுக்கு மஹ்தீ என்றும், கிறிஸ்தவர்களுக்கு ஈஸாவென்றும், ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனென்றும் தாவாச்செய்தார். முஸ்லிம்களென்று நடித்துக்கொண்டிருக்கும் ஒரு சில நவீன கிறிஸ்தவர்களைத் தவிர வேறு யாரும் இவரைப் பின்பற்றினுர்களில்லை. அதனுல் தன்னைப் பின்பற்ருத 40 கோடி முஸ்லிம்களையும் காபிரென்று பத்வா அளிக்க முற்பட்டார். என்னே! சீர்திருத்தக்காரரென்று நடித்தவரின் மௌட்டீகம்? பின்பு இங்கிலைமையினுஞ் சற்று முன்னேறிதாம் இந்த உம்மத்துகளுக்காக அனுப்பப்பட்ட நபீ என்றும், வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹூம் மஹ்தியும் தாமே என்றும் தாவாச் செய்தார். சில சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைவிட தாம் மேலானவரெனவும், ஈஸா(அலை.)அவர்கள் யூதர்களால் சிலுவையிலறைபட்டு பின்னர் அதிலிருந்து தப்புவிக்கப்பட்டுப் பிரிந்துபோன இஸ்ரவேலர்களைக் காண காஷ்மீருக்குச்சென்று ஆங்கு மரணமாய் விட்டார்களெனவுங் கூறினுர். *இம்மாதிரி குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் மாற்றமாய் பற்பல அபவாதங்களைக் கிளப்பினுர். இவருடைய சிஷ்யர்களும் இக்கெட்ட கொள்கைகளை ஒப்புக்கொள்ளவும், அதனைப் பரத்தவும் முற்பட்டார்கள். இதனுல் அவரைப் பின்பற்றியோரின் எண்ணிக்கை ஒருவாறு அதிகப்பட்டது. தவிர இவருடைய மார்க்கமானது குர்ஆன் ஹதீதிலிருந்து எடுக்கப்பட்டதென சில சமயமும், பைபிளிலிருந்து பொறுக்கப்பட்டதென மற்ருெரு சமயமும், தன்னுடைய அபவாதங்களையே மார்க்கமென பிரிதொரு சமயமும் கூற முற்பட்டதாக விருந்தது. ஆதலின் பல கொள்கைகளைக்கொண்டு இணைக்கப்பெற்றுள்ள ஓர் நவீன மார்க்கத்தை ஸ்தாபிக்க பிரயத்தினப்படுகிருரென்பது செவ்வனே யாவருக்கும் விளக்கமாயிற்று. உலமாக்களும் அறிஞர்களும் இவரது கூற்றுக்களை கவனித்து ஆதாரமற்ற இவருடைய தாவாக்களையும், இவர் "வஹீ" என்று கூறிவந்த பொய்யுரைகளையும் தக்க ஆதாரங்களோடு மறுக்க முற்பட்டார்கள். இவர் நபீ என்றும், ஈஸாவென்றும் தாவாச்செய்து விட்டதால்,

* இஃது அவருடைய மனோரதமாகயிருந்தமையால் அவரால் அவ்வாறு கொண்டுவர முடியாது போயிற்று.

*இவரைப்பின்பற்றித்தான் பா. தா. வும் தமது ஜவாஹிருல்புர்கானில், ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலறைபட்டார்களென்றும், இயேசுவின் இரகசியத்தில் அவர்கள் மரணமடைந்து காஷ்மீரத்தில் அடக்கப்பட்டிருக் கின்ருர்களென்றும் குர்ஆனுக்கு மாற்றயாய் எழுதியிருக்கின்ருர்.

பொதுவாக நபிமார்களாலும் குறிப்பாய் ஈஸா (அலை) அவர்களாலும் அற்புதங்கள் நிகழ்வுற்றதுபோல் இவரிடத்தும் மக்கள் அற்புதங்களைக் கேட்பரென நினைத்து திருக் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் கூறப்பெற்றிருக்கும் அற்புதங்களையும், ஈஸா (அலை.) அவர்களின் இலக்ஷணங்களையும் இழித்துரைக்கத் துணிந்தார். ஆனால் அற்புதங்கள் இயற்கைக்கு முரண்கொண்டதெனக் கூறிய ஸர் சையத் அஹ்மதோடு இவரே அற்புதங்களின் உண்மைக்கும், பெருமைக்கும் பரிந்து சொற் போரிடலானர். ஒரு சமயம் அற்புதங்களைப் பொய்யென்பதும், மற்றோர் சமயம் அற்புதங்களின் அருமைபெருமைகளைப் பாராட்டுவதும் இவர் செயலாக இருந்திருக்கின்றது. இவர் இருபதிற்கு மேற்பட்ட பல நூல்களையும் விளம்பரங்களையும் வெளியிட்டிருக்கின்றார்.

உலமாக்கள் இவருடைய கூற்றுக்களை பல ஆதாரங்களோடு மறுத்துவிட்டார்கள்; இவருடைய தீர்க்கதரிசனங்கள் பலவும் பொய்யாகவே முடிந்தது. இவருடைய பொய்ப்பிரசாரங்கள் பஹிரங்கமாய்விடவே, இவருடைய சிஷ்யகோடிகளில் பலரும் இவருடைய கொள்கையை விட்டுப்பிரிந்து தவ்பாச்செய்து பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவினர். தன் சிஷ்ய கோடிகளும் தன்னை விட்டுப்பிரிந்து போவதை யுண்ணி 5-11-1907-ல் தப்ஸிரா என்னும் நிருபத்தை விடுத்தார். அதில் தம்முடைய விரோதிகளான உலமாக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கடினமான எச்சரிக்கை ஒன்றைப் பிரசுரித்திருந்தார். தாம் ஜீவித்திருக்கும்போதே தமது விரோதிகள் மரணித்து விடுவார்களென்றும், அவர்களெல்லோரும் இறந்தபின்தான் தாம் மரணிக்கப்போவதாகவும், இப்பத்திரத்தைத் தம் சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அலங்கார மண்டபத்திற்குள் பந்தோபஸ்த்தாய் வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் எழுதியிருந்தார். இவ்வாறு தீர்க்கதரிசனங்கூறிய (பொய்) தீர்க்கதரிசியே அடுத்த வருஷத்தில் அதாவது 1908-ல் கீர்த்திபெற்ற வைத்தியர்களுடைய மருந்துகளுக்கும் குணமடையாது மரணமாய்விட்டார். அவருடைய விரோதிகள் நாளதுவரை ஹயாத்தாகவே இருக்கின்ருர்கள். அந்த தப்ஸிராவில் அவர் சொன்ன விஷயம் ஆண்டவனல் தமக்கு அறிவிக்கப்பட்டதென்று வரைந்திருந்தார். இது உண்மையாயிருப்பின் தப்ஸிராவில் கூறப்பெற்றுள்ள விஷயம் அவ்வண்ணமே முடிந்திருக்கும். அஃதன்றி மாற்றமாய் முடிந்ததால் அஃது ஆண்டவனு லருளப்பட்டதல்லவென்று நிச்சயமாய்விட்டது. ஆதலின் மிர்ஸாசாஹிப் ஆண்டவன்மீது படுதூராகஇட்டுக் கட்டிவிட்டாரென்பது வெள்ளிடை. “அல்லாஹ் தஆலாவின்மீது இட்டுக் கட்டுபவனை விட அனியாயக்காரனுள்ளனே? (அல்குர்ஆன்) தவிர தன்னைப் பின்பற்ருதவர்கள் பிளேக்கென்னும் கொள்ளை நோயால் பீடிக்கப்படுவர்களென முன்னறிக்கை செய்தார். அதற்கு நேர் மாற்றமாய் அவரே அந்நோயால் பீடிக்கப்பட்டு லாகூரில் மரித்தார்; அங்கிருந்து அவருடைய பிரேதம் காதியானுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் உள்ளபடி தீர்க்கதரிசனம் அறிவிக்கப்படக்கூடியவராக இருப்பாராயின் அவர் இறந்துபோகுமிடந் தெரிந்து அவ்விடத்திலேயே இறக்குந் தருவாயில் தங்கியிருக்கவேண்டும். அவரது மரணத்திற்குபின் புகழ் சிறந்து விளங்கிய மருத்துவராய ஹகீம் நூருத்தீன் என்பார் இவர் பதவியில் பட்டமேற்றுத் தலைமை வகித்து காதியானிகளின் கொள்கைகளைப் பரப்ப பெரும் முயற்சிசெய்து வரலானர்.

அவர் காலஞ்சென்றபின் மிர்ஸாவின் சிஷ்யர்கள் இருதரத்தாராய்ப் பிரிந்து, ஒரு சாரார் அவரை நபீ என்றும், வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹ் மஹ்தீ என்றும், இதனை ஏற்காதவர்கள் காபிர்களென்றும் உறுதிகொள்ளுகின்றனர். இக்கோஷ்டியினருக்கு மிர்ஸாவின் மகனை மிர்ஸா பஷீர் அஹ்மத் தலைமை வகித்துள்ளார். இவர் தன்னை “கலீபத்துல் மஸீஹ்” எனப் பிரகனடப்படுத்தி வருகின்ருர். இவரைப் பின் தொடர்பவர்களுக்கு காதியானிகளெனப் பெயர். மற்ருெரு சாரார் (அவர்களுக்கு லாகூர் பார்ட்டியெனப் பெயர்) இவர்களது கொள்கை மிர்ஸா நபியல்ல, வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹுˉம் மஹ்தியும் இவர்தானென்று நிர்ணயங் கொள்கின்றனர். இவர்களுக்கு முஹம்மத் அலீ, M. A., L. L. B. யும், காஜா கமாலுத்தீன் B. A. L. L. B. யும் தலைமை வகித்திருக்கின்றனர். * இவ்விரு கோஷ்டியின

* நம் பா. தா. இக் கோஷ்டியைத்தான் பின்

ரும் ஹகீம் நூருத்தீன் காலம்வரை ஒன்ருகவே இருந்தனர். ஹகீம் சாஹிப் மரணமடைந்தபின் முஹம்மத் அலீ சகல கலைகளிலும் தேர்ச்சிபெற்றிருந்ததால் அவரையே கலீபத்துல் மஸீஹாகத் தெரிந்தெடுப்பார்களென்று ஆதரவு வைத்திருந்தார். கடாசியாக மிர்ஸா பஷீருத்தீனை தெரிந்தெடுக்கப்பட்டது; அதனுல் அவர் கோபமுற்று அவர்களை விட்டுப் பிரிந்து லாகூர் பார்ட்டியென ஒரு கோஷ்டியை அமைத்து அதற்கவர் தலைவராக இருக்கின்ருர். லாகூரில் இஷா அத்துல் இஸ்லாம் என்னுமொரு அஞ்சுமனையும் நியமித்துக்கொண்டனர். *இவ் விரு கோஷ்டியினரும் ஒருவரை யொருவர் காபிரென்றும், வழிகெட்டவரென்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர்; என்ருலும் இரு கோஷ்டியினர்களின் மூலக்கொள்கைகளும் ஏகதேசத்தில் ஒற்றுத்தானிருக்கின்றது. மேலும் லாகூர் பார்ட்டியார்கள் மிர்ஸாவை நபீ அல்லவென்று பேச்சளவில் சொல்லி விட்டாலும் நபிமார்கள்மீது உபயோகிக்கும் வார்த்தைகளையே மிர்ஸாவின்மீதும் உபயோகிக்கின்றனர். உதாஹரணமாக காஜா கமாலுத்தீன் "சஹீபயே ஆசிபிய்யா" என்னும் கிரந்தத்தில் அடியில் வருமாறு எழுதியுள்ளார்:— மிர்ஸா சாஹிபை ஜனங்களுக்கு (பஷீர்வநதீர்) நல்மாராயம் சொல்பவராயும், அச்சம்பூட்டி அறிவிப்பவராயும் இறைவனுல் அனுப்பப்பட்டது என்பதே. இதிலிருந்து அவரை ரசூல், பஷீர், நதீர் என்று கூறுகிருர்களென்பது நிக்ஷயமாய் விளங்குகிறது.

காஜா கமாலுத்தீன், காதியானீ முஹம்மத் அலீ இவர்கள் மிர்ஸாவின் முக்கிய சிஷ்யராவர்; இவர்கள் அவரை நபீ அல்லவென்றே கூறுகின்றனரென்று வைத்துக் கொள்வோம் மிர்ஸா சாஹிபோ தமது பராஹீன அஹ்மதிய்யாவில் தன்னை நபீ என்று தாவாச் செய்திருக்கின்ருர். ஆதலின் அவரது அந்தியந்த சிஷ்யர்களினுலேயே அவர் செய்த தாவாதப்புந் தவறும் பொய்யுமான தென நிக்ஷயமாய்த் தெரியவருகிறது. இவருடைய சிஷ்யர்களில் மற்றுஞ்சிலர் வேறு தனி வகுப்புகளாகப் பிரிந்திருக்கின்றனர். மிர்ஸாவைப் பின்பற்றியோர்க்கு அவர்கள் எவ்வகுப்பினரா யிருப்பினும் அஹ்மதிகளென்றும், மிர்ஸாயிகளென்றும் புதுப்பெயர் வழங்கி வருகிறது. இவர்கள் யாவரும் சுன்னத்து வல் ஜமாஅத்தார்களுடன் தொழுவது கிடையாது. இவ்வாருள்ள ஆகாயப் புழுகரைத்தான் மிர்ஜாயிகள் நபீ என்றும் ரசூலென்றும் கூறு நிற்கின்றனர். என்னே இவர்கள் புத்திபோனவாரு?

பற்றியிருக்கின்ருர். ஜவாஹிருல் புர்கான், இயேசுவின் இரகசியம், ஈமான், இஸ்லாம் முதலிய நூற்கள் இம் முஹம்மத் அலியால் எழுதப்பட்டவைகளின் மொழிபெயர்ப்பே யாகும்.

*இக்கெட்ட கொள்கையை நம் தென்னுட்டில் பிரசாரஞ்செய்வதற்காகவே பா. தா. அச் சங்கத்தாரிடமிருந்து மாதம் இருநூறு ரூபாய் ஊதியம் பெற்று வந்தார்.

2-வது அதிகாரம்

மிர்ஸாவின் தாவாக்கள்

மிர்ஸா சாஹிப் பற்பலவாருன தாவாக்கள் செய்திருக்கின்ருரென்பதை ஒருவாறு சுறுக்கமாக முந்திய அதிகாரத்தில் எடுத்துக் கூறியுளேன். ஈண்டு பிரதானமாகவுள்ள சிலதை விபரிக்க முற்பட்டுளேன். அவர் செய்த தாவாக்களில் தன்னை நபீ என்று கூறியது ஆரம்பமாக கவனிக்கவேண்டிய ஓர் முக்கிய விஷயமாகும். அவ்வாறு தாவாச் செய்ததில் இவர்மட்டுந்தானெனக் கூறுவதற்கில்லை. இவருக்கு முன் பற்பல தேசத்திலும் அநேகர் தாவாச் செய்திருக்கின்றனர். ஆனுல் ஹிந்துஸ்தானத்தில் நபீ என தாவாச் செய்தவர்களைமட்டும் குறிப்பிடுகின்றேன். 9-வது நூற்ருண்டில் செய்யித் முஹம்மத் ஜோன்பூரீ தம்மை மஹ்தி என்றும், எல்லா நபிமார்களைவிட வரிசைபெற்றவரென்றும் தாவாச் செய்தார்; அவருடைய பிரசங்க வன்மையால் லக்ஷக்கணக்கானவர்கள் அவரை ஒப்புக்கொண்டனர்; அவர் மரணித்துப்போய் இன்றைக்கு 400 வருஷங்களுக்கதிகம் கடந்துவிட்டபோதிலும் அவரை ஒப்புக்கொள்ளக்கூடியவர்கள் ஹைதராபாதத்தில் இன்றைக்கும் ஒருசிலரிருக்கின்றனர். 13-ம் நூற்ருண்டில் அலீ முஹம்மத் பாபீ என்பார் பாரசீகத்தில் தம்மை நபீ என தாவாச்செய்தார்; அத்தேசத்தின் அதிபதி அவருக்கு விரோதமாக யிருந்துங்கூட அநேகர் அவரைப் பின்பற்றினர்; இவரது பிரதான சிஷ்யர்களில் மிகு

தம்பேர் இந்தியர்களேயாகும். இதே நூற்றாண்டில் கதாசிரியரான மிர்ஜா குலாம் அஹ்மத் என்பார் ஒன்றோடு நில்லாது தன்னை ஈஸா, மஹ்தி என்றும், எல்லா நபிமார்களை விட மேலானவரென்றுங்கூறி கடைசியாகத் தன்னை ஆண்டவனென்றுங்கூட தாவாச் செய்தார். இங்கு மற்றொரு விஷயத்தைகுறிப்பிடாமலிருக்க முடியவில்லை. நம் தமிழ்நாட்டிலுங்கூட ஒருவர் தன்னை மஹ்தி என்றும், மஸீஹென்றும் தாவாச்செய்ய முற்பட்டார்; அதற்குஒருசிலர் பக்கபலமாகவு மிருந்தனர்; என்றாலும் உலகமாக்களினது முயற்சியாலும், பொதுஜனங்களின் கிளர்ச்சியாலும் அந்த தஃவா சொற்பகாலத்தில் அடக்கப்பட்டுப்போயிற்று. எம்பிரான் (ஸல்) அவர்களின் தீர்க்கதரிசனம் உண்மையாகவே முடிந்தது. அவர்கள் கூறியதாவது:—எனக்குப்பின் என்னுடைய உம்மத்துக்களில் அநேக பொய்யர்கள் — தஜ்ஜாலென்னும் ஏமாற்றக்காரர்கள் வெளியாவார்கள்; அவர்களிலொவ்வொருவரும் தம்மை நபி என தாவாச்செய்வார்கள் என்பதே. மிர்ஸாஸாஹிப் தாவாச் செய்ததில் தமக்கு நபிப்பட்டம் உண்டென்றும், தாம் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவரென்றும், தாம் உலுல் அஜ்மான நபிமார்களிலுள்ளவரென்றும் அவர் தாவாச்செய்ததுதான் படுமோசமானதாகும். தவ்ளீஹுல்மராமின் 18-ம் பக்கத்தில் அவர் எழுதியிருப்பதாவது:—நான் நபியாகயிருக்கின்றேன்; இதை ஒப்பாதவர்கள் தெண்டனைக்குப் பாத்தியஸ்தர்களாய் விடுகின்றனர். தாபிஉல் பலாவின் 11-ம் பக்கத்தில் காதியான் என்னு மூரில் தன்னுடைய தூதரை அனுப்பிவைத்த நாயன் உண்மையானவன் என்றும்; அதேபுத்தகத்தில் 13-ம் பக்கத்தில் அல்லாஹ்த ஆலாவாகிறவன் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹை இந்த உம்மத்தில் அனுப்பினான்; அவர் ஏற்கனவே வந்த மஸீஹைவிட, சகலவிஷயத்திலும் மேம்பட்டவர்; அந்த நாயன் இந்த இரண்டாவது மஸீஹுக்கு குலாம் அஹ்மதென்று பெயர் நாமஞ்சூட்டினான். மேலும் தம்முடைய அற்புதமென்று வெளியிட்ட அரபிக்கவிகளின் * அநேக இடத்தில் தன்னை ஆண்டவனுடைய தூதரென்று தாவாச்செய்திருக்கின்றார். இந்த அவருடைய கூற்றைக்கொண்டு அவர் தன்னை நபி என நினைக்கின்றாரென்பது நன்கு புலனாகின்றது. தன் நபிப் பட்டத்தை நிரூபிப்பதற்காக உபயோகமற்ற பற்பல விஷயங்களையும் வெளியிட்டதோடு "இஃஜாஸ மஸீஹ்" என்றும், "இஃஜாஸ அஹ்மதி" என்றும் இருபுத்தகங்களை வெளியிட்டார். தன்னுடைய நுபுவ்வத்திற்கு அவ்விருகிரந்தங்களும் முஅஜிஸாவாகும்; அதைப் போன்று வேறு எவராலும் எழுத முடியாது என வரைந்தார். மேலும் "கஸீதயே இஃஜாஸிய்யா" வென்று ஒரு நூல் இயற்றியிருந்தார்; அதில் தப்புந்தவறுமான பல கவிகள் சொல்லப்பட்டிருந்தன. இக்கவிகளை தமது முஃஜிஸாவென்றும், இவ்வாறு எவராலுஞ் சொல்லமுடியாதெனவும் கூற முன்வந்தார். அக்கவிகளோ இலக்கண இலக்கியம், பஸாஹத்தென்னும் நாகரீகம் முதலியவைகளுக்கு ஒரு சிறிதேனும் ஒவ்வாதிருந்தது. அதிலுள்ள தவறுகளை எல்லாம் ஒவ்வொன்றாக உலமாக்களால் எடுத்துக் காட்டி பல நூல்கள் வரையப்பட்டிருக்கின்றன. மேலும் மௌலானா கனீமத் ஹுசைன் சாஹிப் அவர்கள், மிர்ஸாவின் கவிகளுக்கு எதிராக அவருடைய சரித்திரங்களையும் பொய்க் கூற்றுகளையும் விவரித்து 618 கவிகளை கூறியிருக்கின்றார்கள். * அக்கவிகளோ இலக்கண இலக்கிய வழுவின்றி அழகிய முறையில் இலங்காநிற்கின்றது. இதைக்கொண்டும் அவருடைய நுபுவ்வத் பொய்யென நிரூபிக்கப்பட்டுப் போயிருக்கின்றது. மிஸ்ர் தேசத்திலுள்ள "அல்மினார்" என்னும் பத்திரிகை மிர்ஸாவின் முஃஜிஸாக்களை எளனஞ்செய்து பல கட்டுரைகளை வெளியிட்டிருக்கின்றது. ஆதலின் அவர் செய்த தாவாக்களை எழுதப்புகின் ஏடும் அடங்காது எண்ணியும் முடியாது. அதினின்று சிலவற்றை அவருடைய நூற்களின் அத்தாக்ஷியுடன் ஈண்டு குறிப்பிடுகின்றனம்.

1. நாம் ரசூலாயும் நபியாகவு மிருக்கின்றோம். இதுவே எம் தாவா (பதிர் 5-மார்ச்சு 1908.)

* அவருக்கு அரபியில் கவி சொல்லுந் திறமை ஒரு சிறிதேனு மில்லாதிருந்தும் வல்லோரைக் கொண்டு கவி இயற்றும்படிசெய்து தாம் இயற்றியதாக வெளியிட்டிருந்தார்.

* இதனை மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடப் படுமாயின் மிர்ஸாவின் சகல இரகசியங்களும் நன்கு வெளியாய் விடும்.

2. நான் ஷரீஅத்துடைய நபியாகயிருக்கின்றேன். (அர்பயீன் 4. ப. 7.)

3. நாயகம் அவர்களின் அற்புதம் 3000, எனது அற்புதங்களோ 30,000 மாகும். (மக்தூபாத்த அஹ்மதிய்யா நீ 4. வா 3. ப 49)

5. நாயகத்திற்குச் சந்திரன் கிரஹண மானது எனக்குச் சந்திரன் சூரியன் இரண்டும் கிரஹணமாயின. (கஸீதா இஃஜாஸிய்யா 71. ப)

5. நாயகம் அவர்களின் வஹீகளில் அர்த்தம் விளங்காது (நாயகம் அவர்கட்கு) வஹீகளில் தவறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. (இஜாலா 1182. ப)

6. நான் ஈஸாவைக்காண மகாச்சிறந்தவன். (தாபிஉல்பலா 13-ப.)

7. ஹஸ்ரத் ஈஸாவின் மாதா - ஹஸ்ரத் மர்யம் விவாகத்திற்குமுன் ஈசுப் நஜ்ஜாருடன் கலந்துறவாடியிருந்ததில் கெர்ப்பமாய் விட்டார் (நஊதுபில்லாஹ்) (கிஷ்த்திய நூஹ் 16, அய்யா முஸ்ஸுல்ஹ 66. ப)

8. ஹஸ்ரத் ஈஸா விபசாரப் புத்திரர்; சாராயம் குடிப்பார்; கெட்ட ஸ்திரிகளின் சாவகாசத்திலிருந்தார்; அவரின் அற்புதங்களனைத்தும் ஏமாற்றமாயிருந்தன; அவர் பொய் சொல்லுகிறவராகயிருந்தார் (அஞ்சாம ஆத்ஹம் அனு 7, தாபிஉல்பலா கடைசி பக்கம்)

9. ஈஸாவுடைய தாய் தகப்பன் வழியிலுள்ள முறையே மூன்று பாட்டிமார்களும் விபசாரிகளாக யிருந்தார்கள். (அஞ்சாம ஆத்ஹம் அனு 7. ப)

10. என்னை மறுத்தவர்கள் காபிர்கள்; அவர்களுக்குப்பின் தொழக்கூடாது. (ஹகீகத்துல்வஹீ 163)

11. ஆண்டவன் எனக்கு ஹவ்லுல்கவ்தரைக் கொடுத்திருக்கின்ருன். (ஆஞ்சாம ஆத்ஹம் அனு 58)

12. நான் வஹிபின்றி பேசமாட்டேன். (அர்பயீன் 3-ம் நீ. ப. 44)

13. உன்னைப் படைக்காவிட்டால் வானலோகத்தைப் படைக்க மாட்டேன் என மிர்ஸாவைப் பார்த்து ஆண்டவன் கூறுகின்ருன். (ஹகீகத்துல்வஹீ 99)

14. குர்ஆனில் கூறப்பட்டிருக்கிற அஹ்மத் நானே. (இஸாலா முதற்பதிப்பு 676-ம்ப)

15. நானூறு நபிமார்கள் ஒரு ராஜாவின் ஜெயத்தைப்பற்றி முன்னறிக்கை செய்தார்கள் அஃதெல்லாம் ஷைத்தானுடைய கனவாகயிருந்தமையால் அவை யாவும் பொய்யாய்விட்டன. (ஷஹாதத்துல் குர்ஆன் 45. 90,91,ம்-ப)

16. எனக்கு ஒருவரையும் சமமாக்காதீர்கள். (குத்பா இல்ஹாமிய்யா 19-ம். ப)

17. நான் முஸ்லிம்கட்கு வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹாகவும், இந்துக்களுக்கு கிருஷ்ணனுகவு மிருக்கின்றேன். (லெக்ஸர் ஸியால் கோட் 33-ம். ப)

18. நான் நேர்வழிபெற்ற மஹ்தியாகவும், பல நபிமார்களைவிட சிறந்தவனுகவுமிருக்கின்றேன். (மிஃயாருல் அக்யார் 11-ம். ப)

19. ஈஸாவின் அற்புதங்கள் மெஸ்மரிஸமாகயிருந்தன; அவரிடத்தில் ஏமாற்றத்தைத்தவிர வேருென்றுமில்லை. (அஞ்சாம ஆத்ஹம் அனு 7 முதல்)

20. ஒருவருக்கும் கொடுக்காத சிறப்பை ஆண்டவன் எனக்குக் கொடுத்திருக்கின்ருன் (குத்பா இல்ஹாமிய்யா 18 முதல்)

21. குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; நான் குர்ஆனை வானத்திலிருந்து கொண்டுவந்திருக்கின்றேன் (இஸாலா 721-ம். ப)

22. குர்ஆன் ஷரீப் அல்லாஹ் தஆலாவின் வேதமாயும்; எனது வாயிலிருந்து வந்த வார்த்தைகளுமாகவுமிருக்கின்றன. (ஹகீகத்துல் வஹீ 84-ம். ப.)

23. நான் கனுவில் என்னை நிச்சயமாக ஆண்டவனென்று கண்டேன். நான் அவனே என்று நிச்சயமாய்க் கூறுகின்றேன். நான் வானத்தையும் பூமியையும் படைத்தேன். (ஆயினுகமாலாத்தே இஸ்லாம் 564-ம். ப)

24. ஏ! மிர்ஸாவே, நீர் என் குமாரனைப் போலிருக்கின்ருய் என ஆண்டவன் மிர்ஸாவைப்பார்த்துச் சொல்கின்ருன். (ஹகீகத்துல்வஹீ 86-ம். ப)

25. நாம் அவைகளை (ஹதீதுகளை) இறைவனிடமிருந்து எடுத்தோம், நீங்கள் பிரேதங்களிடமிருந்து ரிவாயத்துச் செய்கின்றீர்கள். (இஃஜாஸே அஹ்மதீ 57.)

26. நான் எப்பேர்பட்ட மஹ்தீ என்ருல் ஹஸ்ரத் அபூபகர்தானென்ன, பல நபிமார்

களை விடச்சிறந்தவன்; அபூஹுரைரா மந்த புத்தியுடையவர்; இப்னுமஸ்ஊத் சாதாரண மனிதன்; நான் இமாம் ஹுஸைனை விடமகாச் சிறப்புப் பெற்றவன் (தாபிவுல் பலா 16 இஃஜாஸே அஹ்மதீ 52, 81 முதலிய பக்கம் இஸாலா 596-ம் பக்கம் அல்கௌலுஸ் ஸஹீஹ்)

27. தவ்ருத் இன்ஜீல் குர்ஆன் இவைகள் மீதுள்ள (ஈமான்) நம்பிக்கை போலவே எந்தன் வஹியின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன் (அர்பயீன் 4-19)

28. எனக்கு முன் சென்றுள்ளவர்கள் மீது இறக்கப்பட்ட வஹியின் மீது நான் எவ்வித நம்பிக்கை வைத்திருக்கின்றேனே அதேபோல் என் மீது இறங்கும் பரிசுத்த வஹியின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். (ஹகீகத்துல் வஹீ 150-ப) இதே போன்று இன்னுமனேக பதற்கூற்றுக்களை உளரிக்கொட்டியிருக்கின்றார்; இதனைப் படிக்கும் சாமான்யர்களுங் கூட இஃது சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருப்பதை எளிதில் தெரிந்து கொள்வர். அடுத்த அதிகாரத்தில் இப்பொய்க் கூற்றுகளுக்கு தக்கவாயாப்புக் கொடுக்கின்றேம்.

---

3 - அதிகாரம்.

அவரது கூற்றுக்கள் குர்ஆன் ஹதீதுகளுக்கு முரண்பட்டிருக்கும் விதம்.

சென்ற அதிகாரத்தில் மிர்ஸாவின் தாவாக்களிற் பல எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன; அவைகளில் முக்கியமானவை, அவர் தம்மை நபீ என்று தாவாச் செய்ததாகும். இதுவன்றி அவரது இதரக் கூற்றுகள் யாவும் இந்தத் தாவாவிலிருந்து தான் எழுந்திருக்கின்றது ஆகவே முதன் முதலாக அவருடைய நபிப் பட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கின்றது.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கட்குப்பின் எவ்வாறான நபியுங் கிடையாதென்பது திருக்குர்ஆனின் அத்தாட்சிகளைக் கொண்டும், ஹதீதுகளின் கருத்தைக்கொண்டும் ஸ்தாபிக்கப்பெற்றதோர் விஷயமாகும். முஸ்லிம்கள் யாவரும் இதன்மீதே (இஜ்மாஃ) ஒற்றுமித்திருக்கின்றனர். இதில் எவ்வகையிலும் சந்தேகங்கொள்ள இடமே கிடையாது. சன்மார்க்கத்தை நன்குணராதவரும், பொய் கூறுவதையும், புரட்டுகள் செய்வதையுமே தன் தொழிலாகக் கொண்டிருந்தவருமான ஒருவர் இம்மஹத்தான மஸ்அலாவில் அனுவிஷமான, குதர்க்கமான சந்தேகங்களைக் கிளப்பி முஸ்லிம்களுக்கிடையில் பித்னா பஸாதுகளைப் பரப்பிவருவது வருந்தற்குறியதாக யிருக்கின்றது. ஆதலின் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக்கொண்டே (நுபுவ்வத்) நபிப்பட்டம் முடிந்துபோய் விட்டதென்பதை இங்கு தக்க அத்தாட்சியுடன் விபரிக்கவேண்டியது மிக மிக அவசியமானதாகுமெனக் கருதுகின்றனம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் யாரேனும் நபியாக வரமுடியுமென்று நம்புவார்களாயின் அவர்கள் நிக்ஷயமாய் இஸ்லாத்தை விட்டு நீங்கி விடுவரென பிக்ஹுனுடையவும், ஹதீதுனுடையவும் இமாம்களும், சங்கை பொருந்திய சூபியாக்களும் ஒற்றுமித்துக் கூறியிருக்கின்றார்கள். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் நபிப்பட்டத்தைக்கொண்டுதாவாச் செய்பவன் மகாப் புழுகனும் தஜ்ஜாலுமாகுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

திருக்குர்ஆன் அத்தாட்சி.

முஹம்மதானவர் (ஸல்.) உங்களுடைய ஆண்களினின்றும் யாருக்கும் தகப்பனாகயிருக்கவில்லை; என்கிலும் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களின் கடாசியானவராயும், முத்திராங்கமானவராயு மிருக்கின்றார். அல்லாஹ் சகல வஸ்துக்களையும் அறிந்தவனாக யிருக்கின்றான். (ஸூரயே அஹ்ஸாப்)

இத்திருவசனம்இறங்கியகாரணமாவது:— ஜைத்பின் ஹாரித் (ரலி.) அவர்கள் சிறையாக்கப்பட்டு கதீஜா (ரலி.) அவர்களால் கிரயத்திற்கு வாங்கி எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு உருத்தாக்கினார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்கட்கு அடிமைகளை வைத்துக் கொள்ளும் வழக்கமில்லாததால் அவர்களை உரிமைவிட்டு விட்டார்கள். அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய பணிவிடையிலேயே காலங் கழித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களது தந்தை

யார், இவர்கள் சிறையாக்கப்பட்டிருந்த விஷயந் தெரிந்து மீட்டிக்கொண்டு போவதற்காகப் பணத்துடன் நாயகம் (ஸல்.) அவர்களது தர்பார் வந்து சேர்ந்து உரிமையாக்கி அழைத்துப்போகும் விஷயமாய்க் கேட்டதற்கு, ஜைத் (ரலி.) கூறியதாவது:— என்னை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் உரிமையாக்கி விட்டார்கள்; நான் எங்கு வேண்டுமானாலுஞ் செல்வதற்கு சுயேச்சையுடையவனாகவே தானிருக்கின்றேன் என்றாலும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சன்னிதானத்தை விட்டு சற்றேனும் பிரிந்திருக்க மனமில்லாதவனாகவும், விற்க வாங்க முடியாத அடிமையாகவு மிருக்கின்றேன் என விடையிறுத்தார்கள். தம் புத்திரர் இருக்கும் சௌகரியத்தையும், அவர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள்மீது பூண்டிருக்கும் அன்பையும் பார்த்துவிட்டு தந்தையானவர் தன் குமாரரை எம்பெருமானார் (ஸல்.) அவர்களது பணிவிடையிலேயே இருக்கும்படி செய்துவிட்டு ஊருக்குச்சென்று விட்டார். ஜைத் (ரலி.) அவர்கள் வாலிபராகவும் நாயகம் (ஸல்.) அவர்கட்கு பணிவிடை செய்து வருபவராகவு மிருந்ததால் அவர்களை தங்கள் புத்திரரே போன்று மதித்து வந்தார்கள். அவர்கட்கு ஜைனப் (ரலி.) அவர்களை விவாகஞ் செய்து வைக்கப்பட்டிருந்தது. புருஷன் பெண்சாதிக்கிடையில் சதா ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தமையால் கடாசியாக ஜைனப் (ரலி) அவர்களை விவாகரத்து செய்து விட்டார்கள். இத்தா செல்படியான தன் பின் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ் தஆலாவின் உத்திரவுகொண்டு ஜைனப் (ரலி) அவர்களை மணமுடித்துக் கொண்டார்கள். அதனால் அன்னோர்க்கு எம்பிராட்டிமார்களி லொருவராக யிருக்கும் பாக்கியம் கிடைத்து விட்டது. இஸ்லாத்தின் விரோதிகள் தன் (சுவிகார) மகனுடைய பெண் சாதியை நபீ அவர்கள் மணமுடித்துக் கொண்டதானது, குர்ஆனின் கட்டளைக்கு முற்றும் மாற்றமாகும் என குறை கூறமுற்பட்டார்கள். இதற்கு அல்லாஹ் தஆலா விடையிறுப்பான் வேண்டி "முஹம்மதாகிறவர் உங்கள் ஆண்பிள்ளைகளின்று யாருக்கும் தந்தையாக யிருக்கவில்லை" எனக்கூறினான். ஜைத்(ரலி) அவர்கள் நாயகத்திற்கு புத்திரராக மதிக்கப்பட்டாரேயன்றி உண்மையில் ஜைத்(ரலி) அவர்கள் புத்திரருமல்லர்; நாயகம் (ஸல்.) அவர்கள் ஜைத்(ரலி)க்கு தந்தையுமல்ல. ஜைத்(ரலி) அவர்கள் பெண்சாதி எவ்விதத்தும் நாயகம் (ஸல்.) அவர்கட்கு ஹராமாகாது. இதனை நன்குணராது இச்சம்பவத்தைக் குறித்து விரோதிகள் குறை கூறமுற்பட்டிருக்கின்றனர் என்பதை அல்லாஹ் தஆலா மேலேகூறப்பெற்ற திருவசனம் மூலம் விளக்கிக் காட்டுகின்றான். இவ்விடத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எவருக்கும் தந்தையல்லவென்று கூறப்பட்டிருப்பதால் அவர்களில், தந்தைகளில் காணப்படும் ஈகை, இரக்கம், தயவு, அன்பு முதலிய சற்குணங்கள் இருக்காவோ என்னும் சந்தேகம் எழுகின்றது. இச்சந்தேகத்தை நீக்குவான் வேண்டி "என்கிலும் அவர் அல்லாஹ்வின் தூதராகயிருக்கு மென்று" கூறுகின்றான். நபிமார்கட்கு தங்கள் உம்மத்கள் மீது தந்தைக்கு புத்திரர்கள் மீதிருக்கக்கூடிய அன்பு, ஈவு, இரக்கம் முதலியவைகளைவிட அதிகமாகவே யிருந்ததென்பது வெளிப்படை. நபிமார்கள் தங்கள் உம்மத்துகளின் விருப்பத்திற்காகவே அளவு கடந்த கஷ்டசங்கடங்களை அனுபவத்திருக்கின்றார்கள். எந்த அளவுக்கு நபிமார்கள் தங்கள் உம்மத்தோர்களுக்காகக் கஷ்ட சங்கடத்தை அடைந்திருக்கின்றார்களோ அந்த அளவுக்கு ஒரு மனிதன் தன் பிள்ளைகளுக்காக அடைந்திருக்க முடியாது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அல்லாஹ்வின் திருத்தூதராயிருக்கு மென்று சொல்வதிலிருந்தே மேலெழுந்த சந்தேகம் நிவர்த்தியாய் விட்டது. என்றாலும் நாயகம் (ஸல்.) அவர்களுடைய ஈகை, இரக்கம் முதலியன மற்ற நபிமார்களிலிருந்ததைவிட அதிகமாகவும், பூர்ணமாகவு மிருந்த தென்பதை முந்திய வசனத்தில் குறிப்பிடப்படவில்லை. அதற்காக அல்லாஹ் தஆலா "அவர் நபிமார்களில் கடாசியானவராகவும், முத்திராங்கமானவராகவுமிருக்கின்றார் எனக் கூறுகின்றான்.

இத்திருவஸனம் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கடாசி நபீ என்றும், அவர்களைக் கொண்டே நபிப்பட்டம் முத்திரை வைக்கப்பட்டுப் போயிற்றென்றும் அறிவிக்கின்றது. நாயகம் (ஸல்.) அவர்கள் கடாசி நபியாக வந்திருப்பதால் சகல நபிமார்களிடத்தும் நிறைந்திருந்த சற்குணங்கள் யாவும்

ஒருங்கே திரண்டு கடாசி நபீ அவர்களிடத்தி லிருக்கவேண்டியது அவசியமென ஏற்படு கின்றது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஜீவிய சரித்திரமும் நடைமுறை விபரங்களும் இதனை நிரூபிக்கின்றது. நற்குணம், சற்குண மென்று எதைச்சொல்லப்படுமோ அவைகள் யாவும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடத்து சம்பூர்ண நிலைமையை அடைந்திருந்தது.

இத்திருவசனத்தில் நபிமார்களில் கடாசி யானவர்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதன் அரபி வஸனமானது "காத்திமந் நபிய் யீன்" என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடமிருந்து திருக் குர்ஆனின் கிர அத்துக்களைக்கேட்டு அறிவித்தவர்களில் ஏழு பெயர்கள் பிரபல்யமானவர்கள் அவர்களில் அறுவர் காத்திமிலுள்ள "தே" என்னும் அச் சரத்திற்கு "ஜேர்" வைத்து காத்தி மன் னபிய்யீன்என்று ஓதியிருக்கின்றார்கள். இது தான் பிரபல்யமான கிரஅத்தாகும். ஆசி மென்னு மொரு "காரீ" மட்டும் "தே"க்கு ஜபர் வைத்து "காத்தமன்னபிய்யீன்" என்று ஓதியிருக்கின்றார்கள். இதை ஒரு "காரீ" மட்டும் அறிவித்ததால் இது பிரபல்யமான தல்ல வென்பது வெளிப்படை. என்றாலும் இந்தியாவில் "ஜபர்" வைத்து ஓதுவதுதான் வழக்கத்திலிருந்து வருகிறது. "ஜேர்" வைத்து "காத்திம்" என்று ஓதப்படின் அதற்கு முடிவுசெய்யக் கூடியவர், கடாசியானவரென் பது கருத்தாகும். இதன்படி நபிகள் திலகம் (ஸல்.) அவர்களோடு "நுபுவ்வத்"—நபிப்பட் டம் முடிவடைந்து போய் விட்டதென்பது நன்கு புலனாகின்றது. சொற்ப புத்தியுடைய வர்களுங்கூட இதனை நன்கு அறிந்து கொள் வரென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

"ஜபர்" வைத்து "காத்தம்" என்று ஓதப் படுமாயின் அதற்கு மூன்று அர்த்தங்களி லிருக்கின்றன. 1. மோதிரம். 2. முத்திரை. 3. கடாசி. இவைகளில் மோதிரமென்னும் அர்த்தம் வாங்குவது இவ்விடத்திற் பொருந் தாது. கிதாம், காத்திம், காத்தம் என் னும் சொற்களானது விசாலமான ஒரு கருத்தைக் கொடுக்கக்கூடிய சொற்களுடன் இணைக்கப்படுமாயின் இம்மூன்று சொற்றொ டருக்கும் கடாசி என்னும் அருத்தம் அரபி அகராதியில் கொடுக்கப்படுகிறது. காமூஸ், லிஸானுல் அரப் போலொத்த மாபெரும் அகராதிகளில் வரையப்பெற்றிருப்பதாவது: கித்தாமுல்வாதீ என்பதானது ஓடையின் கடாசி பாகமென்றும், கித்தாமுல் கவ்மீ வ காத்தமஹும், வ காத்தி மஹும் என் னும் சொற்றொடர்களுக்கு அவ்வர்க்கத்தா ரின் கடாசியானவரெனச் சொல்லப்படும் என்பதாகும். காத்திமந்நபிய்யயீன் என் னும் சொற்றொடருக்கு "ஜபர்" வைத்துப் படிக்கப்பட்டாலும் அவர்களில் கடாசியான வர் என்பதுதான் கருத்தென ஹதீதுகளின் கருத்துக்களை விளக்கிக்கூறும் அகராதியா கிய "மஜ்மஉல் பிஹார்" என்னும் கிரந்தத்தில் வரையப்பெற்றிருக்கின்றது. இதுகாதியானிக ளிடத்திலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற கிரந்த மாகும். ஆகவே "ஜேர்" வைத்து "காத்தி மந்நபிய்யீன்" என்று ஓதப்படினும், "ஜபர்" வைத்து காத்தமந்நபிய்யீன் என்று ஓதப்படி னும் நபிமார்களில் கடாசியானவர்கள்; அவர் கட்குப்பின் எவ்வித நபியும் கிடையாதென் பது தான் கருத்தென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்கிறோம். தவிர காத்தம் என்று "ஜபர்" கொண்டு ஓதப்படும் சொல்லுக்கு முத்திராங்கம் என்று கருத்தமைக்கப்படி னும் அதுவும் நம் நோக்கத்திற்கு முரண் கொண்டதாக யிருக்கவில்லை. ஏனெனின் ஏதாகிலுமொரு வஸ்துவின்மீது முத்திரை யிடப்படுமாயின் அஃது அத்துடன் முடிந்து போய்விட்டதென்பதுதான் கருத்து. ஆத லின் நபிகள் திலகம் (ஸல்.) நபிமார்களின் முத்திரை-முத்திராங்கமானவர்கள் என்னும் சொற்றொடருக்கு நுபுவ்வத் தென்னும் வாயல் நாயகம் (ஸல்) அவர்களுடனே முத் திரை வைக்கப்பட்டுப்போயிற்று; அவர்களுக் குப்பின் எவ்வித நபியும் வரமாட்டார்க ளென்பதுதான் கருத்தென்பதை நிச்சய மாய்த் தெரிந்துகொள்கிறோம்.

அன்பர்காள்! இதுவரை "காத்திமந் நபிய்யீன்" என்னும் சொற்றொடருக்கு நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கடைசி நபி யாக யிருக்கும், அவர்கள்மீது "நுபுவ்வத்" முடிபு செய்யப்பட்டுப் போய்விட்டதென் பதை அரபீ அகராதிகளின்படி நிரூபித்துள் ளோம். எனவே மேலே கூறப்பட்டுள்ள திரு வஸனங்கள் இது விஷயத்தில் சந்தேகமற்ற அத்தாட்சியாகும். இதில் வேறு எவ்வித கருத்தமைப்பதற்கும் இடமில்லை என்பது நிச்சயம்.

இனி இத் திரு அத்தியாயம் எந்த பரிசுத்த ஆத்மாவின்மீது இறக்கி வைக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் இத்திரு அத்தியாயத்திற்கு என்ன கருத்தைத் தம் உம்மத்தோர்கட்குக் கூறி யிருக்கின்றார்களென்பதை விவரிக்க ஆரம்பிக்கின்றேன்.

1. நான் நபிமார்களில் கடைசியானவன்; நீங்கள் உம்மத்துகளில் கடைசியானவர்கள். என உம்மத்தோர்களாகிய நம்மனைவரை நோக்கி நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதாக இப்னு மாஜாவில் தஜ்ஜாலுடைய பாடத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது எனக்குப் பிறகு வேறு நபியுமில்லை; உங்களுக்குப்பிறகு வேறு உம்மத்துமில்லை என்பதாகும். நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தங்களை "ஆகிருல் அன்பியா" நபிமார்களில் கடைசியானவர்களென்று கூறிவிட்டார்களோ, "காத்திமந்நபிய்யீன்" என்னும் சொற்றொடருக்கு "ஆகிருந்நபிய்யீன்" அதாவது நபிமார்களில் கடைசியானவர்கள் என்னும் கருத்தைத் தவிர வேறு எதையும் வைக்கமுடியாது. மேலும் மிர்ஸாஸாஹிபின் முதல் கலீபாவான நூருத்தீன் என்பாரும் வஹீ, இல்ஹாமுக்கு அவ்வஹியையுடையவர் என்ன கருத்தை அமைத்திருக்கின்றாரோ அதுதான் சரியானதாகும், மற்றதெல்லாம் தவறானதாகுமெனக் கூறியிருக்கின்றார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே தங்களை கடைசி நபீ என்று கூறிவிட்டதால் "கத்தமந்நபிய்யீன்" என்னும் சொற்றொடருக்கு மிர்ஸாயிகளுங்கூட கடைசி நபீ என்றுதான்கூறியாகவேண்டுமென்பது நிச்சயமாய் விட்டது.

2. எனக்கு பற்பல நாமங்களிருக்கின்றன; நான் முஹம்மதாகும். நான் அஹ்மதுமாகும். அல்லாஹ் தஆலா என்னைக் கொண்டு குபிரை அழித்து விடுவானே அப்பேற்பட்ட மாஹியாகிய அழிப்பவருமாகும். எனக்குப்பின் கப்ருகளிலிருந்து ஜனங்கள் எழுப்பப்படுவார்களே அப்பேர்பட்ட ஹாஷிருமாகும். நான் ஆக்கிபுமாகும். ஆக்கிப் என்பது அவருக்குபின் எந்தவிதமான நபியுங் கிடையாதே அவராகயிருக்கும் என நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஜுபைர்பின்முத்யிம் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (புகாரிவ முஸ்லிம்) இந்த ஹதீதில் "லைஸ பஅதஹூநபிய்யுன்" என்னும் சொற்றொடர் கூறப்பெற்றிருக்கின்றது. இதற்கு அரபி அகராதியின் பிரகாரம் அவர்களுக்குப் பின் எந்தவிதமான நபியுங் கிடையாதென்பதே கருத்தாகும். ஈதிங்கனமிருக்க அஹ்மதிகள் மிர்ஸா சாஹிபை புதிய ஷரீஅத்துக் கொடுக்கப்படாத நபீ என்றும், லில்லி என்றும் உவமை நபீ என்றும் கூறுகின்றனர். மேலே கூறப்பெற்றுள்ள ஹதீதில் எவ்வித நபியுமில்லை என்று கூறப்பட்டிருப்பதால் அஹ்மதிகளும் இக்கூற்று தவறானதென்பதை நன்குணர்வார்களாக. மேலும் "ஆகிப்" என்னும் வார்த்தை ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு அகராதியில் அதற்குப்பின் எவருமில்லாது கடாசியாக வருபவருக்குச் சொல்லப்படுகிறது. இதன் படியும் நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் கடாசியானவர்களென ருஜுவாய் விட்டது.

3. நான் மற்ற நபிமார்களைவிட ஆறு விஷயங்களினால் மேலாகயிருக்கின்றேன். (1) நான் சொற் சுருக்கம் பொருள் விளக்கமென்னும் "ஜவாமி உல்கலிம்" கொடுக்கப்பட்டிருக்கின்றேன் (2) எனக்களிக்கப்பட்டிருக்கும் கம்பீரத் தோற்றத்தினால் எக்காரியத்திலும் ஜெயசீலனாகவே விளங்குகின்றேன். (3) யுத்தத்தில் சிறையாக்கப்படும்பொருள், சாமான்கள் எனக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. (4) பூமண்டல மடங்கலும் தொழுகவும் தயம்மம்செய்து கொள்ளவும் எனக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. (5) நான் சர்வத்ராளுக்கும் ரசூலாக அனுப்பப் பட்டிருக்கின்றேன். (6)நபிகள் வருவதின் துடர்புஎன்னோடு முடிவாக்கப்பட்டுப் போயிற்று என நபிகள் திலகம் (ஸல்.) அறிவித்ததாக அபூஹுரைரா (ரலி.) கூறியதாக முஸ்லிம்என்னும் கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது இந்த ஹதீதில் பகிரங்கமாய் நாயகம் (ஸல்.) அவர்களுடனே நபிப்பட்டம் முடிவுசெய்யப்பட்டுப் போய்விட்டதென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

4. பனூ இஸ்ராயீல் பேரில் நபிமார்கள் அதிகாரஞ் செலுத்திக் கொண்டிருந்தார்கள்; அவர்களில் யாராகிலுமொரு நபீ மரணமாய் விடுவாராயின் அவரது ஸ்தானத்தில் வேறு நபீ எற்பட்டு விடுவார்கள். எனக்குப்பின் எந்தவிதமான நபியுங் கிடையாது; ஆனால் கலீபாக்கள் ஏற்படுவார்களென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக அபூ

ஹாரைரு (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (புகாரீ). இந்த ஹதீதில் பனூ இஸ்ராயீல்களில் ஒருவர்பின் ஒருவராய் நபிமார்கள் வந்து கொண்டிருந்தார்களென்பதும், நபிப்பட்டம் நாயகம் (ஸல்.) அவர்களோடு முடிவு செய்யப்பட்டுப் போய்விட்டதால் அவர்களுக்குப்பின் எந்த விதமான நபியுங் கிடையாதென்பதும், அவர்களது ஸ்தானத்திலிருந்து அதிகாரஞ்செய்பவர்களுக்குக் கலீபாக்களெனச் சொல்லப்படுமென்பதும் நன்கு புலனுகின்றது. மிர்ஸாயிகள் பனூ இஸ்ராயில்களில் நபிமார்கள் வந்து கொண்டிருந்ததேபோல் நாயகம்(ஸல்.) அவர்கள் காலத்திற்குப்பின்னும் நபிமார்கள் வந்து கொண்டிருக்கவேண்டுமென்று கூறுகின்றார்கள். அவர்களது கூற்று இந்த ஹதீதைக்கொண்டு மறுக்கப்பட்டுப்போகின்றது. மேலும் குலபாயெ ராஷிதீன்களில் நபிப் பட்டம் பெருவதற்கு அருகதையுள்ளோர் இருந்தார்கள் என்றாலும் நாயகம் (ஸல்) அவர்கள்மீது நபிப்பட்டம் முடிவடைந்து விட்டதால், குலபாக்கள் நபியாக வருவதற்கு முடியாதுபோயிற்று. இவ்விஷயத்தை கீழ் குறிப்பிடும் ஹதீதுமூலம் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கி யிருக்கின்றார்கள்.

5. எனக்குப்பின் நபி உண்டாவதாயிருப்பின் உமர்பின் கத்தாப் (நபியாக) ஆயிருப்பார்கள் என நபிகள் திலகம் (ஸல்) திருவாய் மலர்ந்தருளியதாக “உக்பதிப்னு ஆமிர் (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (திருமதீ). நுபுவ்வத்திற்கு வேண்டிய சகல அம்சங்களும் உமர் (ரலி) அவர்கள்பால் பொருந்தி யிருந்தும் நுபுவ்வத்தின் வாயல் அடைக்கப்பட்டுப் போய்விட்டதால் உமர்பின் கத்தாப் (ரலி) அவர்கள் நபியாக ஆகவில்லை என்று விபரமாய்க் கூறிவிட்டார்கள்.

6. நாயகம் (ஸல்) அவர்கள் “ தபூக் ” யுத்தத்திற்குச் செல்லுங்கால் அலீ (ரலி) அவர்களை நோக்கி மூஸா (அலை) இல்லாத சமயத்தில் ஹாரூன் (அலை) எவ்வாறு அவர்களுடைய ஸ்தானத்தை வகித்திருந்தார்களோ அதேபோன்று தாங்கள் (நானில்லாத சமயத்தில்) என்னுடைய ஸ்தானத்தை வகிக்கக் கூடியவர்களாக யிருக்கின்றீர்கள்; என்கிலும் எனக்குப்பின் யாதொரு நபியுங் கிடையாது என நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஸஅத்பின்வக்காஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச்செய்யப்பட்டிருக்கிறது. (புகாரீ வ முஸ்லிம்). இந்த ஹதீதில் அலீ (ரலி) அவர்கள் ஹாரூன் (அலை) அவர்களுடைய ஸ்தானத்திலிருக்கின்றார்களென்று கூறப்பட்டிருப்பினும் அவர்களுக்கிருந்ததுபோல அலீ (ரலி) அவர்கட்கு நபிப்பட்டம் கிடையாதென்று நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்துவிட்டார்கள். ஹாரூன் (அலை) அவர்களுடைய நபிப் பட்டமாகிறது புதிய ஷரீஅத்தை யுடையதல்ல; அவர்கள் மூஸா (அலை) அவர்களுடைய ஷரீஅத்தைக் கொண்டே ஏவல் விலக்கல் செய்துகொண்டிருந்தார்கள். ஹாரூன் (அலை) அவர்கள் புதிய ஷரீஅத்துடையவர்களல்ல வென்பதை மிர்ஸாயிகளுங்கூட ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். ஆதலின் அவ்வாறுள்ள நபியுங்கூட நாயகம் (ஸல்) அவர்கட்குப் பின் வரமுடியாதென்று இந்த ஹதீதின்மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. எனவே அஹ்மதிகள் மிர்ஸாவை புதிய ஷரீஅத்தைக் கொண்டுவராத நபீ என்று கூறுவது இந்த ஹதீதைக் கொண்டு மறுக்கப்பட்டுப் போகிறது.

சோதரீர்! இதுவரை நுபுவ்வத் முடிவு பெற்றுவிட்டதென்பதை சரியான ஹதீதுகள்மூலம் நிரூபித்துளேன். இதைத் தவிர்த்து கீழே குறிப்பிடும் ஹதீதில் எவன் நபிகள் திலகம் (ஸல்) அவர்கட்குப்பின் நபீ என்றோ ரசூலென்றோ தாவாச்செய்வானுயின் அவன் மகாப் புழுகனென்றும், தஜ்ஜாலென்றும் எம் பெருமானர் (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

7. என் உம்மத்தில் சச்சரவு நிகழ ஆரம்பமாய் விடுமாயின் கியாமத் (இறுதித் தீர்ப்பு நாள்) வரை அவை ஒய்வடைந்துவிட மாட்டாது; என் உம்மத்தோரினின்று சில வகுப்பார் முஷ்ரிகீன்களுடன் சேர்ந்தும் விக்கிரஹ வணக்கஞ்செய்ய ஆரம்பித்து விடும்வரை கியாமத் உண்டாகாது. என் உம்மத்தில் முப்பது பொய்யர்கள் தோன்றுவர்; அவர்களடங்கலும் தாம் அல்லாஹ்வின் நபீ என்பதாக தாவாச் செய்வார்கள்; நான் கடைசி நபியாக யிருக்கும்; எனக்குப்பின் நபீ கிடையாது; என்னுடைய உம்மத்தோர்களினின்றும் ஒரு கூட்டம் சதா சத்தியத்தின்மீதே யிருக்கும்; அவர்களுக்கு யார் விரோதஞ்

செய்தபோதிலும் எவ்வகையான கெடுதிகளும் அவர்களுக்கேற்பட மாட்டாது; கியாமத் வரும் வரை இந்நிலைமையே ஏற்பட்டிருக்கும் என நாயகம் (ஸல்) திருவுளப்பற்றியதாக தவ்பான் (ரலி) கூறி யிருக்கின்றார்கள். (அபூதாவூத் திர்மதீ). புகாரியுடைய ரிவாயத்தில் முப்பது பொய்யர்களான தஜ்ஜால்களென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஹதீதில் இரு வாக்கியங்களை கவனிக்க வேண்டியிருக்கின்றது. (1) கத்தாப் (மகாப் புழுகன்) (2) தஜ்ஜால் (மிகுதமாக ஏமாற்றுபவன்) இந்த இரு அடையாளங்களும் போலி நபிக்குள்ளவைகளென எம்பெருமானார் (ஸல்) அருளியிருக்கின்றார்கள். அறிஞர்கள் குர்ஆன், ஹதீதுகளின் அத்தாட்சிகளைக் கொண்டு இவ்வடையாளமுள்ளவர்களை இலகுவாய் பொய்யர்களென அறிந்து, அவர்களது ஏமாற்றத்தைவிட்டுத் தவிழ்ந்து கொள்ளவியலும். குர்ஆன் ஹதீதுகளைக் கற்றுணராதவர்கள் அதைவிட்டுத் தப்பித்துக்கொள்வது மாபெரும் கஷ்ட சாத்தியமேயாகும். இதற்காகவே நபிகள் திலகம் (ஸல்) அப்புழுகர்களின் அடயாளங்களை யாவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு அடியிற்கண்டவாறு கூறி யிருக்கின்றார்கள். "அப்பொய்யர்களிலொவ்வருவரும் தன்னை அல்லாஹ்வுடைய நபி என்று கருதுவார்கள்" என்பதே. எவனொருவன் நபிகள் திலம் (ஸல்) அவர்கட்குப் பின்தான் நபீ என்று தாவாச் செய்வானாகில் அந்த தாவாவைக்கொண்டே அவன் பொய்யன் என்பதை அறிந்துகொள்ளும்படி எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே இந்த ஹதீதில் 30 தஜ்ஜாலான பொய்யர்கள் தங்கள் உம்மத்தில் வெளியாவார்களென்று நாயகம் (ஸல்) அவர்கள் தீர்க்க தரிசனம் கூறினார்கள். அதன்படியே 30 பொய்யர்களும் வெளியாய் விட்டார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்கள், அன்னோர்கட்குள்ள மூன்று அடையாளங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். (1) அவர்கள் உம்மத்திலுதித்த நபீ என்று தாவாச்செய்வது (2) அதிகமாகப் பொய் சொல்வது (3) பெரும் ஏமாற்றக் காரணாக ஏற்படுவது. இம்மூன்று அடையாளங்களைக்கொண்டு நம் மிர்ஸாவை சோதித்துப் பார்த்தோமானால் இம்மூன்று அடையாளங்களையும் ஒருங்கே அவரிடம் கண்டுகொள்ளலாம். அவர் தன்னை நபீ என்று தாவாச் செய்த செய்தி முந்திய அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர் எழுதிய அண்டப் புழுகுகளும், ஜனங்களை ஏமாற்றுவதற்காக அவர் செய்த தந்திரோபாயங்களும் நான்காம் அதிகாரத்தில் விவரித்துக் கூறப்படும் ஆகவே அவர் கடாசி காலத்து தஜ்ஜாலென்பதை நிச்சயமாய்த் தெரிந்து கொள்கின்றோம்.

"ஷிபா" என்னும் கிரந்தத்தில் காலீ இயாள் அவர்கள் எழுதியிருப்பதாவது :—எவன் தன்னை நபீ என்று தாவாச்செய்கின்றானோ, அல்லது நபிப்பட்டம் தன் சுயப்பிரயாசையால் பெற்றுக்கொள்ளமுடியுமென்று சொல்கின்றானோ * அல்லது கல்பினுடைய தெளிவினால் நுபுவ்வத்தின் பதவியை எத்திக்கொள்ளக் கூடுமென்று கூறுகின்றானோ, இன்னும் எவன் நுபுவ்வத்தை தாவாச்செய்யாமல் தமக்கு வஹீ வருகிறதென்று கூறுகின்றானோ, மேலும் அவன் வானலோகத்திற்கேகுவதாகவும், சுவர்க்கத்தில் புகுந்து அதன் பழங்களை சாப்பிடுகிறதாகவும், ஹூருல் யீன்களுடன் ஆலிங்கனம் செய்கிறதாகவும் கூறுகின்றானோ இவர்களடங்கலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பொய்யாக்கி வைக்கும் காபிர்களாயிருக்கும். ஏனெனில் நாயகம் (ஸல்.) அவர்கள் தாங்கள் கடாசி நபியாகயிருப்பதோடு தங்களுக்குப்பின் யாதொரு நபியுமில்லை எனக்கூறியிருக்கின்றார்கள் என்பதே.

மேலே நாம் வரைந்துள்ள சஹீஹான ஏழு ஹதீதுகளைக்கொண்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கடாசி நபியாகயிருக்கும், அவர்களுக்குப்பின் எவ்வித நபியுமில்லை என்பதை நிச்சயமாய்த்தெரிந்து கொள்கின்றோம். இந்தஹதீதுகளைக்கொண்டு திருக்குர்ஆனில் அருளப்பெற்றுள்ள "காத்தமந் நபிய்யீன்" என்ற சொற்றொடருக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் கடாசி

---

*நபீமார்கட்கு ஆண்டவனாளருளப்பெற்ற அனுக்கிரஹங்களுள் வேத இரகசியத்தைத்தெரிந்து கொள்ளக்கூடிய "வஹீ" என்னும் ஞானவெளிப்பாடும் ஒன்றாதலின் அதை நேர் வழியில் செல்லக் கூடிய ஒவ்வொரு உண்மை முஸ்லிமும் அடைதல் கூடும். ஆனால் "வஹீ"யைப் பெறுவதனால் மட்டும் ஒருவரும் "நபீ"யாய் விடமாட்டார் என பா.தா. தம் ஜவாஹிருல்புர்கானில் கூறியிருப்பது முற்றுந்தவறாகும்.

நபியாகும்; அவர்கட்குப்பின் எவ்வித நபி யுங்கிடையாது என்ற கருத்துத்தான் அமைக்கவேண்டு மென்று நிஷ்யமாய் விட்டது.நாயகம் (ஸல்.) அவர்கட்குப்பின் தன்னை நபி என்று தாவாச்செய்பவன் வழிகேடனும் காபிரும் தஜ்ஜாலுமாக யிருக்கின்ருன் என்பதை நிஷ்யமாய்த் தெரிந்து கொள்கின்ருேம்.

மிர்ஸா சாஹிப் நுபுவ்வத்தைப் பற்றி தாவாச்செய்ததைத்தவிர வேறு அநேக தாவாக்கள் செய்திருக்கின்ருரென்பதை முந்திய அத்தியாய மூலம் நேயர்கள் தெரிந்திருக்கலாம். அதில் பொதுவாய் சகல நபிமார்களை விடவும் குறிப்பாய் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களை விடவும் தம்மை மேலாகக் காண்கின்ருர். இவ்வாறு தாவாச் செய்வதைப் பார்க்கும் சாமான்யர்களுங்கூட நகைப்பார்களே யன்றி அதை ஒரு பொருட்டாக மதியாரென்பது திண்ணம்

மேலும் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களை விபசாரி என்றும், ஈஸா (அலை) அவர்களை விபசாரப் புத்திரரென்றும் கைகூசாது வரைந்திருக்கின்ருர். (நஊது பில்லாஹிமின் ஹா) திருக்குர்ஆன் இவர்களது பரிசுத்தத்தை நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மிர்ஸா குர்ஆனை இன்கார் செய்த காபிரென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஈஸா (அலை) அவர்களின் அற்புதங்கள் மிஸ்மரிஸமாக யிருந்ததென்று வரைகின்ருர். அவர்களது அற்புதங்கள் திருக் குர்ஆனில் விளக்கப் பட்டிருக்கின்றன. இது வகையிலும் அவர் குர்ஆனை மறுத்துவிட்டாரென்பதிலெய்யமில்லை. ஈதெல்லாம் போதாதென்று தாம் ஆண்டவனுகயிருப்பதாகவும் தாவாச் செய்து முடித்து விட்டார். ஆதலின் தாவாக்களில் ஒன்றையும் விடாது செய்து விடவேண்டுமென்பது அவருடைய நோக்கம் போலும். அவருடைய தாவாக்கள், கூற்றுக்களைக் கொண்டே சன்மார்க்கத்தை விட்டு அப்புறம் பாய் விட்டாரென்பதை நிஷ்யமாய்த் தெரிந்து கொள்கிருேம்.

நாயகம் (ஸல்.) அவர்களை கடைசி நபி என்று சொல்லுங்கள்; அவர்கட்குப்பின் நபி யில்லை என்று கூருதீர்கள் என ஆயிஷா நாயகி (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாக "மஜ்மஉல்பிஹாரி"ல் வரையப்பெற்றிருக்கிறதென காதியானிகள்கூறி, தாங்கள்மிர்ஸாவை நபீ என்றுகூறிக் கொள்வதற்கு அத்தாட்சியாக வரைந்திருக்கின்றனர். "மஜ்மஉல்பிஹாரில்" எழுதப்பட்டிருக்கும் நீண்ட வியாசத்தின் ஒரு துண்டின் வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தங்கள் கூற்றுக்கு அத்தாட்சி காட்டுகின்றனர். மஜ்மஉல் பிஹாருடைய இது சம்மந்தமான முழு வியாசத்தையும் கீழே தருகின்றேன்; நேயர்கள் கவனித்து இஃது அவர்களுடைய கூற்றிற்கு ஆதாரமாகுமாவென்பதைத் தெரிந்து கொள்வார்களாக.

"ஈஸா (அலை) அவர்கள் சம்மந்தமான ஹதீதில் அவர்கள் பன்றியை வெட்டுவார்கள்; சிலுவையை உடைப்பார்கள்; ஹலாலில் அதிகமாக்கிக் கொள்வார்கள்" என கூறப் பெற்றிருக்கிறது. அதாவது விவாகம்முடித்து பிள்ளையைப்பெருவது கொண்டு தங்களுக்கு ஆகுமாக்கப்பட்டதில் ஜாஸ்தியாக்கிக்கொள்வார்கள் என்பதாகும். அவர்கள் வானத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன் விவாகஞ் செய்து கொள்ளாதவர்களாகயிருந்தார்கள். எனவே பூமியிலிறங்கிய பின் ஹலாலில் அதிகப்படுத்துவார்கள்; அதுபொழுது அவர்கள் மனிதரென்று நிஷ்யமாய் விட்டதால் வேதக்காரர்கள் ஒவ்வொருவரும் (அவர்களைக்கொண்டு) ஈமான் கொள்வார்கள். மேலும் ஆயிஷா நாயகி (ரலி) அவர்களைத்தொட்டும் ரிவாயத்து செய்யப் பட்டிருப்பதாவது:—அவர்களை "காத்திமல் அன்பியா" என்று சொல்லுங்கள்; அவர்களுக்குப்பின் நபீ இல்லை என்று சொல்ல வேண்டாம் என்பதாகும். இதுவானது ஈஸா (அலை) அவர்கள் இறங்குவதின் மீது சமிக்கை செய்கின்றது. மேலும் ஆயிஷா நாயகி (ரலி) அவர்களின் இக்கூற்று நபிகள் திலகம் (ஸல்) தங்களுக்குப்பின் நபீ இல்லை என்று கூறிய ஹதீதுக்கு முரண்பட்டதல்ல ஏனெனின் அவர்களின் நாட்டமானது தங்களுடைய ஷரீஅத்தை மாற்றும்படியான நபி இல்லை என்பதாகும். (தக்மிலா மஜ்மஉல்பிஹார் 85-ம் ப.)

ஆயிஷா நாயகி (ரலி) அவர்களைத் தொட்டும் கூறப்பெற்ற இக்கூற்று ஹதீதினுடைய சஹீதான ஆறு கிரந்தங்களிலும் கூறப்படவில்லை. மேலும் அதனை சரி என ஒப்புக் கொள்ளப்படினும், அது ஈஸா (அலை) அவர்கள் விஷயத்தில் கூறப்பட்டதாக மஜ்மஉல்பிஹாரில் வரையப்பெற்றிருக்கின்றது. மேலும் அதிலேயே எனக்குப் பிறகு நபீ இல்லை

என்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதையும் வரைந்து அதற்கும் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்களின்கூற்றுக்கும்கருத்து இன்னதென விபரிக்கப்பட்டு மிருக்கின்றது. ஆகையால்அவர்கொள்கைக்குஆயிஷா நாயகி (ரலி.) அவர்களின் கூற்றை அத்தாட்சியாக எடுத்துக் கொள்வது கிஞ்சிற்றும் பொருத்தமானதன்று. மேலும் மஜ்மஉல்பிஹாரினுடைய சகல கூற்றுக்களையும் கவனிக்கின் மிர்ஜாய்களுடைய கொள்கைகள் யாவும் மிக மிக தவறானதென்பது நன்கு புலனாகும்.

நான் மேலே வரைந்துள்ள ஹதீதுகளின் அத்தாட்சிகளைக்கொண்டும், திருக்குர்ஆனின் ஆக்கினைகளைக்கொண்டும் மிர்ஜா சாஹிப் தமது கூற்றுக்களைக்கொண்டே காபிர், முர்த்தத்தாய் விட்டாரென்றும், அவரைப் பின்பற்றுவோர்களும் அவருடைய கொள்கைகளைப் பரத்துபவர்களும் நிஃசயமாய்க் காபிராய் விடுவார்கள்; அவர்களுடன் முஸ்லிம்கள் விவாக சம்மந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், விவாகஞ்செய்துகொண்டவர்கள் இக்கொள்கையில் சேர்ந்துவிடுவார்களாயின் அவர்களுடைய விவாகம் ரத்தாய் விடுமென்றும், முஸ்லிம்கள் அவர்களுடன் எவ்வித இஸ்லாமிய சம்மந்தங்களும் வைத்துக்கொள்ளக் கூடாதெனவும், அவர்களுக்கு முஸ்லிம்களின் கப்ரிஸ்தானில் இடமளிக்கக் கூடாதென்றும் தேவ்பந்த், போபால், ராம்பூர், தானபவன், ஷஹரன்பூர், ராய்பூர், கல்கத்தா, பனாரஸ், ஆரா, பதாயூன், ஆக்ரா, முராதாபாத், தெஹ்லீ, ஹூஷ்யார்பூர், லூதியானா, லாகூர், ராவல்பிண்டி, பிஷாவர், முல்த்தான், சஹ்லம், சியால்கோட், குருதாஸ்பூர், அம்ரத்ஸர், சென்னை, சிலோன் முதலிய ஊர்களிலுள்ள பிரபல உலமாக்கள் மார்க்கத் தீர்ப்பளித்திருக்கின்றார்கள். ஆதலின் முஸ்லிம் சோதரர்கள் இக்கெட்ட கொள்கையிற் சேராமல் தங்களையும், தங்கள் இனத்தவர்களையும் காப்பாற்றிக்கொள்வார்களாக.

4-ம் அதிகாரம்

தீர்க்கதரிசனமும் அது பொய்யான விதமும்

மிர்ஸா சாஹிப் அநேக முன்னறிக்கைகள் செய்திருக்கின்றார் (அதாவது வருங்காலத்தில் நடைபெறும் பல விஷயங்கள் முன்னறிக்கையாக ஆண்டவனால் தமக்கறிவிக்கப்பட்டிருக்கிறதென கூறியிருக்கின்றார்.) அதற்குத் தீர்க்கதரிசன மென்றும் சொல்லப்படும். அவைகளைக் குறித்து மிர்ஸா சாஹிப் எழுதுவதாவது:—நம்முடைய உண்மையையும் பொய்யையும் அறிந்து கொள்வதற்கு நம்முடைய முன்னறிக்கையைக் காண மேலான சோதனை வேறு என்னயிருக்கின்றது. (ஆயினயேகமாலாத்த இஸ்லாம் 288-ப.) மிர்ஸா சாஹிப் தம்முடைய முன்னறிக்கையை தமக்கு உறைகல்லாக ஆக்கிக்கொண்டிருக்கின்றார். அதாவது அவரால் வருங்கால விஷயங்களைக் குறித்து அறிவிக்கப்பட்ட செய்திகள் அவ்வாறே முடிவுபெறின் அவரை உண்மையான வரென்றும், இல்லாவிடின் அவரைப் பொய்ய ரென்றும் கொள்ள வேண்டு மென்பதுதான் இதன் கருத்தாகு மென்பது வெள்ளிடை. எனவே அவரால் அறிவிக்கப்பட்ட தீர்க்க தரிசனங்கள் யாவும் பொய்யாகவே முடிந்தது. இதைக் கொண்டு அவருடைய தஃவாவில் அவர் பொய்யரென்பதை அவரின் கூற்றுக்களைக் கொண்டே தெரிந்து கொள்கின்றோம். அவ்வாறு கூறியுள்ள தீர்க்க தரிசனங்கள் அநேக முள. அவைகளில் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்படுகின்றனம். மிர்ஸாயிகளுங் கூட இதனை நிதான புத்தியைக்கொண்டு கவனிப்பார்களாயின் உண்மை எளிதில் புலனாகி மிர்ஸா ஆகாயப் புளுகரென்பதை நன்கு தெரிந்துகொள்வர்.

நபிமார்கள் வருங்கால விஷயங்களைப் பற்றி இறைவனால் அறிவிக்கப்பட்டு மக்களுக்கு முன் அறிக்கை செய்வது வழக்கம். அது அவர்கள் கூறிய வாங்கே நிகழ்வுறும். திருக் குர்ஆனும் அம்மாதரி அநேக விஷயங்களைத் தீர்க்க தரிசனமாகக் கூறியிருக்கின்றது அஃது அருளப்பெற்ற வண்ணமே காரியங்களும்நடைபெற்றிருக்கின்றன. அதைப்போலவே மிர்ஸா சாஹிபும் "கைபான" விஷயங்கள் ஆண்டவனால் தமக்கு அறிவிக்கப்படுகிறதென்று தாவாச்செய்தார்; அவைகள் யாவும் பொய்யாகவே முடிந்தது. அஃது ஆண்டவனால் அறிவிக்கப்பட்டிருப்பின் ஒருபொழுதும் அவை பொய்யாகமாட்டா. ஆதலின் மிர்ஸா சாஹிபே ஆண்டவன் சொன்னதாக இட்டுக் கட்டி ஆண்டவன் மீது படுதூராகச் சொல்லி

விட்டாரென்பது நிக்ஷயமாகின்றது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அறிவித்த தீர்க்கதரிசனங்கள் அநேகமுள. அதிலொன்றை இங்கு வாசகர்களின் ஞாபகத்திற்குக்கொண்டு வருகின்றேன். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின் பலதேய அரசர்களையும் இஸ்லாத்தின் பக்கல்அழைத்து நிருபங்கள் விடுத்திருந்தார்கள் அதில் பாரசீக தேய அரசரான "குஸ்ரு" வுக்கும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் "கிருபையும் இறக்கமுமுள்ள ஆண்டவனின் திருநாமத்தை முன்னிட்டு நாயனுடைய தூதராகிய முஹம்மத் (ஸல்.) அவர்கள், பாரசீக தேயத்து சக்ரவர்த்தியாகிய குஸ்ருவுக்கு எழுதும் கடிதமாவது" என வறைந்திருந்தார்கள். பாரசீக அரசர்கள் மிகுந்த ஆடம்பரப் பிரியர்கள். ஆதலின் அத்தேச வழக்கப்படி அரசர்களுக்குக் கடிதம் எழுதுவதானல் அரசர் பெயரையே தலப்பிலெழுதுவது வழக்கம். ஆனல் இக்கடிதத்தில் முதலாவதாக ஆண்டவனுடைய திருநாமமும் அதன்பின் நபீபெருமானர் (ஸல்.) அவர்களது திருநாமமும் வரையப்பட்டிருந்தது. இதைக் கண்டதும் தன்னைக் கேவலப் படுத்தியிருப்பதாக எண்ணி" என்னுடைய அடிமையா எனக்கு இவ்விதம் எழுதவேண்டும். எனச்சொல்லிக் கொண்டே அவ்வரசன் கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்து விட்டான். நபிபெருமான் அவர்கட்கு இவ்விஷயம் தெரிந்ததும் அவனுடைய அரசாங்கமும் இவ்விதமே சின்னபின்ன மாக்கப்படுமென்று சொன்னர்கள். அதன்படியே சொற்பகாலத்திற்குள் அவனுடைய ராஜ்யமும் சின்னபின்ன மாக்கப்பட்டுப் போயிற்று. அரசன் கடிதத்தைக் கிழித்ததோடு நில்லாது பெருமான் அவர்களைப் பிடித்துச் சிறையாக்கித் தன் சமுகத்திற்கு அனுப்பும்படி எமன் தேய கவர்னருக்கு உத்திரவு அனுப்பினன். அக்கவர்னர் அதை நிறைவேற்றுவதற்காக இருவரை மதிதானவுக்கு அனுப்பி வைத்தார். அத்தூதரிருவரும் பெருமானவர்களது சமுகம் வந்து உலக சக்ரவர்த்தி உங்களை அழைத்திருக்கின்ருர்; அவருடைய கட்டளைக்குக் கீழ்படியவில்லையானல் உங்களுக்கும் உங்கள் தேசத்தாருக்கும் நாசத்தை உண்டு பண்ணுவார் என்று சொன்னர்கள். அவர்கள் வந்தநோக்கந்தெரிந்துளம்பெருமானர் (ஸல்.) அவர்கள் அவ்விருவரையும் ஒரு நாள் அங்கு தாமதிக்கும்படியும், மறுநாள் முடிவுசொல்வதாகவும் கூறினர்கள். அன்றிரவு பெருமானவர்கள் (ஸல்.) இவ்வபாயத்திலிருந்து காப்பாற்றும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். பார்ஸ் தேசத்து அரசனை அதே இரவில் அவனுடைய குமாரனை ஷிவேரியா என்பவன் கொன்றுவிட்டான் என்ற செய்தி அதுபொழுதே பெருமானர் (ஸல்.) அவர்கட்கு ஆண்டவனு லறிவிக்கப்பட்டது. பெருமானர் (ஸல்.) அவர்கள் காலையில் அத்தூதரிருவரையும் அழைத்து உங்கள் சக்ரவர்த்தி இன்றிரவு கொல்லப்பட்டு போனரென்று கூறினர்கள். அப்போது அவ்விருவரும் பெருமானவர்களை நோக்கி தாங்கள் சொல்வதை நன்கு கவனித்துச் சொல்லுங்கள்; இவ்விஷயத்தைத் தங்களுடைய பொறுப்பின்மீதே நாங்கள் அரசனுக்கு எழுதுகின்ருேம். அதனல் வரும் பயனைத் தாங்கள் அநுபவிக்கவேண்டியிருக்கும் என்று சொன்னர்கள். அதுபொழுது பெருமானர் (ஸல்.) அவர்கள் என்னுடைய பொறுப்பிலேயே இவ்விஷயத்தை எழுதி அனுப்புங்கள். அதனுடன் இஸ்லாத்தின் அரசாட்சியானது குஸ்ருவின் சிம்மாசனத்தின் அஸ்திவாரம் வரை வந்து சேருமென்று எழுதி அனுப்பும்படியும் கூறினர்கள். அவ்விரு தூதர்களும் எமனுக்கு வந்து பாதான் என்னும் கவர்னரிடம் பெருமானர் (ஸல்.) அவர்கள் கூறிய விஷயங்களைத் தெரிவித்தார்கள். அக் கவர்னர் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு இச் செய்தி வாஸ்தவமாயிருக்குமாயின் அவர்கள் நபீ என்பதில்யாதொரு சந்தேகமுமில்லை. ஏனெனில் இச்சமாசாரத்தை வெகு தூரத்திலிருந்து அறிந்து அவர்கள் கூறியிருக்கின்ருர்கள் என்று சொன்னர். சில நாளைக்கெல்லாம் பெருமானவர்கள் கூறியது உண்மையாகவே முடிந்தது. குஸ்ரு பர்வேஜ் கொல்லப்பட்டுப் போனரென்றும், அவருடைய குமாரரான ஷிவேரியா அரசபாரத்தை ஏற்றிருக்கிருரென்றும் வரையப்பெற்ற அறிக்கை எமன் கவர்னருக்குக் கிடைத்தது. அதிலிருந்து பெருமானவர்கள் ஆண்டவனின் உண்மையான தூதரென்பது அக் கவர்னரின் மனதில் நன்கு பதிந்து உடனே அவர் பரிசுத்த இஸ்லாத்தைத்

தழுவினர். அவருடன் எமனிலிருந்த பார்ஸ் தேசத்தோரனைவருமே இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

சோதரீர்! இங்கு கவனிக்கவேண்டிய விஷயமென்னவெனில் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் இச் சம்பவத்தில் மூன்று விஷயங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் புரிகின்றார்கள். (1) பெருமானவர்களின் நிருபம் கிழிக்கப்பட்டபொழுது அவருடைய அரசாங்கமும் சின்னபின்னமாக்கப்படுமென்பது. (2) குஸ்ரு பார்ஸ் தேசத்தில் கொல்லப்பட்ட விஷயத்தை அன்றைய தினமே பன்னூறு மைலுக்கப்பாலுள்ள மதீனாவில் அறிவித்தது. (3) அவருடைய சிம்மாசனம்வரை இஸ்லாத்தின் அரசாட்சி வந்து சேருமென்று அறிவித்தது. இவ்வறிவிப்புகள் ஆண்டவனால் தெரிவிக்கப்பட்டதென்று கூறினார்கள். இவ்விஷயங்களை நபிகள் நாயகம் (ஸல்.) எவ்வாறு அறிவித்தார்களோ அவ்வாறே முடிந்தது. எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அறிவித்தபடி அவ்வரசாங்கம் சின்னபின்னமாக்கப்பட்டதும்; வெகு தூரத்தில் நடந்த கொலை விபரத்தை தெரிவித்ததும் மேற்கூறிய சரிதையிலிருந்து விளங்காநிற்கின்றது. அவருடைய சிம்மாசனம் முஸ்லிம்கள் கைவசமாகுமென்று அறிவித்தபடி கலீபாக்கள் காலத்தில் இஸ்லாத்தின் கைவசமாயிற்று. இதுதான் நபிமார்களின் தீர்க்கதரிசனம். அவர்கள் (கைபான) மறைவான விஷயங்களை அல்லாஹ்வின் அறிவிப்பைக் கொண்டுதான் தெரிந்துகொள்வார்கள்; அவ்வாறு அறிவிக்கப்படும் விஷயம் ஒருக்காலும் பொய்யாகாது. ஏனெனின் இறைவன் முக்காலத்து சகல விஷயங்களையும் நன்கறிவான்; அவனுடைய அறிவிப்பு நடந்தே தீரும். இதற்குத்தான் தீர்க்கதரிசனமென்று கூறப்படும். இதிலிருந்து மிர்ஸா சாஹிப் அறிவித்த தீர்க்கதரிசனங்களை உற்றுநோக்குவோமின் அவைகள் பொய்யானதென்பதைத் தெரிந்துகொள்வோம். அவைகளில் முப்பது முன்னறிக்கைகள் பத்திரிகைகளிலும் அவரால் இயற்றப்பெற்றுள்ள கிரந்தங்களிலும், பிரசுரங்களிலும் வெளி வந்திருக்கின்றன. அதில் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றனம்.

மிர்ஸாவுடைய எதிரிகளும், மௌலானா தனாவுல்லா சாஹிப் அவர்களும் மிர்ஸாவின் காலத்திலேயே மரணித்துவிடுவார்களென்று தீர்க்கதரிசனங் கூறினார். அது நேர் மாற்றமாகவே முடிந்தது. மௌலானா தனாவுல்லா சாஹிபும் இதர எதிரிகளும் இன்றுவரை ஜீவித்திருக்கின்றனர். மௌலானா அவர்கள் எவ்வகையிலும் காதியானுக்கு வரமுடியாதென்று இறைவனால் தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக இஃஜாஸே அஹ்மதியில் வரைந்திருந்தார். மௌலானா தனாவுல்லா சாஹிப் அவர்கள் இம் முன்னறிவிப்பின் பொய்யை நிரூபிப்பதற்காகவே 1903 ஜனவரி 10௳ காதியானுக்குச் சென்றார்கள். மிர்ஸா சாஹிப் வீட்டிலிருந்து கொண்டே தமது தீர்க்கதரிசனம் பொய்யாகப் போனதை யுண்ணி யுண்ணி கவலை கொண்டு வீட்டை விட்டு வெளிக் கிளம்பாது பதுங்கி உட்கார்ந்துகொண்டார்.

ஈதன்றி இங்கு மிகமிக முக்கியமான தீர்க்கதரிசனமொன்றைக் குறிப்பிட ஆரம்பிக்கின்றேன் அதனை மிர்ஸா சாஹிபுங் கூட தமது மாபெரும் மகத்தான தீர்க்கதரிசனமென்று கூறியிருக்கின்றார். அதன் நிலைமையினை 17 வருடம்வரை எதிர்பார்க்கப்பட்டிருந்தது; அதனை அனுசரித்து அநேக முன்னறிவிப்புகளெழுந்தன; அவைகள் யாவும் பொய்யாக ஆகி மிர்ஸா பெரும் அவமானத்திற்காளாகும்படி நேர்ந்தது. இச்சம்பவத்தைக் கொண்டு மிர்ஸாவின் அநேக சிஷ்யர்களுங் கூட உணர்ச்சி பெற்றனர்; அநேகர் அவருடைய கொள்கையைவிட்டு வெளியேறினர்; அவருடைய பொய்யும் புரட்டும் பொது மக்களிடையே நடுப்பகல் சூரியனேபோல் வெளியாயிற்று; நல்லுணர்ச்சியும், நியாய புத்தியுமுடையவர்கள் அவருடைய கொள்கையை விட்டு நீங்கிவிட்டனர்; குரும்பர்களும் சுய நலம் படைத்த ஒரு சிலரும் இத்தகைய பகிரங்கமான பொய்ப் புரட்டுகள் வெளியாயியும் அவருடைய கொள்கையில் சிக்குண்டுழன்று வருகின்றனர். அல்லாஹ் (ஜல்) தான் அவர்களுக்கு நேர்வழி காட்டவேண்டும்.

மிர்ஸா சாஹிபின் சொந்தக்காரர்களிலுள்ள அஹ்மத்பேக் என்பவருக்கு ஒரு புத்திரி இருந்தனள்; அவளுடைய அழகு சௌந்தரியங்களை விவரிக்கின் இச்சிற்றேடிடந்தரா. கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த அப்பெண் சிரோன்மணி, சிறுபிராயத்

தில் மிர்ஸாவின் இல்லம் வந்துபோய்க் கொண்டிருந்தனள்; இக் கண்ணிகையின் அழகு சௌந்தரியத்தைக் கண்டு மிர்ஸா அவள் மீது காதலுற்ருர்; மதிமயங்கினர் அவர் வயோதியஸ்தராகயிருந்தமையால் அக் கண்ணிகையைத் தமக்கு எவ்வாறு மண முடித்துவைக்கப்போகின்றனரென்றெண்ணி கவலையுற்ருர். பணத்தைச் செலவிட்டோ, தனக்கு வஹீ, இல்ஹாம் மூலம் அறிவிக்கப் பட்டதென்று பொய் கூறியோ அல்லது வேறு எவ்விதத்தாலோ தன் காதலியைக் கைகொண்டு விடவேண்டுமென்னும் விருப் பங் கொண்டார். * அப்பெண்ணின் நாமம் முஹம்மதீ பேகமாகும். இக்கண்ணிகையின் சொந்தக்காரர்கள் மிர்ஸாவின் தாவாக்களே யும், அவருடைய கொள்கைகளையும் மிகவே வெறுக்கக் கூடியவர்களாக யிருந்தார்கள். அத்துடன் மிர்ஸா சாஹிப் விர்த்தாபிய ராகவும், சந்ததியுள்ளவராகவுமிருந்தமையால் அழகு சௌந்திரியமுள்ள இளம்பிராயமு டைய கண்ணிகையை எவ்வாறு விவாகம்முடி த்துக்கொடுக்கப் போகின்றனரென்ரெண்ணி அதே கவலையில் சில காலத்தைக் கழித்தார். இன்னிலைமையில் அக்கண்ணிகையின் தகப்ப ஞன மிர்ஸா அஹ்மத்பேக் என்பவருக்கு மிர்ஸாவினிடம் திடும்பிரவேசமாய் ஒரு சொத்து விஷயத்தில் அவசியமேற்பட்டது. அதாவது மிர்ஸா அஹ்மத்பேக்கின் தங் கையை, மிர்ஸா சாஹிபின் தமயனருக்கு விவாகஞ் செய்துகொடுக்கப்பட்டிருந்தது; அவர் வெகுநாளாய் எங்கோ சென்றுவிட்ட தனல் அவருடைய சமாசாரங்கள் ஒன்றுமே தெரியாதிருந்தது. அவருக்கு சில சொத் துக்களிருந்தன, அதற்கு அஹ்மத் பேக்கின் தங்கையும், மிர்ஸாசாஹிபும் வாரீஸ்களாக ஏற்பட்டனர். அஹ்மத் பேக்கின் தங்கை ஷை சொத்தைத் தம் தமையன் மகளுக்கு (முஹம்மதீ பேகம் - மிர்ஸாவின் காதலி) எழுதிவைத்துவிட வேண்டுமென்று ஆவல் கொண்டார். இவ்விஷயத்தில் மிர்ஸாவின் சம்மதமன்றி யாதொன்றும் முடியாதாகை யால் இவ்விஷயத்தை அஹ்மத் பேக்கும் அவரைச்சேர்ந்தோரும் மிர்ஸா சாஹபிடம் சொன்னர்கள். அதனல் அவருக்கு மித மிஞ்சிய சந்தோஷமேற்பட்டு, தம் காதலிக் கும் தமக்கும் இதன்மூலம் ஒரு சம்பந்தம் ஏற்பட ஹேது உண்டாய் விட்டதென உண்ணி உண்ணி ஆனந்த சாகரத்தில் ஆழ் ந்து "நான் எந்த விஷயத்தையும் இஸ்த்திகா ராச்செய்யாது * சொல்வதில்லை. ஆதலின் இவ்விஷயத்திலும் அவ்வாறு செய்து பதில் சொல்கின்றேன்" என மிர்ஸா கூறினர். அவ்வாறே இஸ்த்திகாராச்செய்து "ஏகத்து வமும், சர்வாதிகாரமும் பொருந்திய ஆண்ட வன் முஹம்மதீ பேகமை விவாகஞ் செய்து கொண்டு அச்சொத்து முழுதையுமே அப் பெண்ணுக்குக் கொடுத்துவிடும்படி தெரிவித் திருக்கின்ருன்" எனக்கூறினர். இதுகேட்டு அவர்கள் வெறுப்புற்று விவாகஞ் செய்து கொடுக்க மனமில்லாதவர்களாயிருப்பதைப் பார்த்து, 1888-ஷூ பிப்ரவரி மீ 26உ-யில் ஓர் விளம்பரம் வெளியிட்டார். அதில் அக் கண்ணிகையை தமக்கு விவாகம் முடித்து வைப்பதினல் அஹ்மத்பேக்கின் குடும்பத் தினர்க்கு இகபர சகல சாதனங்களும் ஏற் படுமென நல்மாராயங்கள் கூறப்பட்டிருந் தது. அதைப் பார்த்தும் அவர்கள் மனம் துணியவில்லை என்பதைக் கண்ட மிர்ஸா, அப் பெண்ணைத் தமக்குவிவாகஞ் செய்துகொடுக் காவிட்டால் அப்பெண்ணிற்குப் பற்பல கெடு திகள் சம்பவிக்குமென்றும், வேறு எவரும் அவளை மணந்துகொண்டால் அம்மணவா ளன் கல்யாணத் தேதிமுதல் இரண்டரை வருஷத்திற்குள்ளும், அவளது தகப்பன் மூன்று வருஷத்திற்குள்ளும் மரணித்துப் போய்விடுவர்; அவர்கள் குடும்பத்தில் விகர்ப் பமும் கஷ்ட சங்கடமும் சம்பவிக்கும் என்று வரைந்தார். மிர்ஸா சாஹிபின் நன்மாராயத் தையும் பயமுறுத்தலையும் பொருட்படுத்

* இதை கதை என்றோ நாவலென்றோ நினை த்துவிட வேண்டாம். இஃது நடைபெற்ற உண் ண்மைச் சம்பவங்களேயன்றி வேறில்லை. இதன் உண்மையை மிர்ஸாவின் கிரந்தங்களிலிருந்தே நிரூபிக்கத் தயாராக யிருக்கின்றேன். ஆனல் இச்சம்பவத்தைப் பார்ப்பவர்களுக்கு இஃதொரு ஆச்சரியமாகத் தோணலாம். அவருடைய சகல நடப்புகளையும் நன்குணர்ந்தவர்கள் இதில் எவ் வாறும் சந்தேகங் கொள்வதற்கிடமில்லாது,

* இஸ்திகாராவென்பது, நபில்தொழுது நான் இன்ன காரியத்தைச் செய்யக் கருதுகின்றேன்; அதில் எனக்கு நலவிருப்பின் அவ்வேலையைச் செய்ய உதவிசெய்; இல்லாவிட்டால் அதில் பிர வேசிக் காமலிருக்கும்படி செய்வாயாக என ஆண்டவன் சமூகத்தில் கேட்பதாகும்.

தாது கிழவருக்கு விவாகஞ் செய்து கொடுக்க சற்றும் சம்மதியாது, மிர்ஸா வின் கூற்றுகள் உண்மையா யிருப்பின், கன்னிகை எவ்வகையிலும் அவருடைய விவாகத்தில் வந்துவிடுவள்; பொய்யாக யிருப்பின் இம்மாதிரியான ஆகாயப் புழுக னுக்கு நம் கன்னிகையை விவாகஞ்செய்து கொடுப்பது கூடாதென்று தைரியமாகவும் உறுதியாகவு மிருந்தனர். இவர்களது மனோ உறுதியை பார்க்கும்போது அப்பெண்ணை தமக்கு எவ்வகையிலும் நிகாஹ்செய்து கொடுக்கமாட்டார்கள் என்பதை நிக்ஷய மாய்த் தெரிந்துகொண்டு அதற்குப் பற்பல வாறான தந்திர உபாயங்களைத் தேடி தமக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் தபால்கள் எழுதி இப்பெண் தவறி விடுமாயின் எனது வஹீ இல்ஹாமெல்லாம் பொய்யாய்விடும்; எவ் விதத்தும் முயற்சித்து அதைத் தாம் நிகாஹ் செய்து கொள்ளவேண்டுமென்று பிரயாசை எடுத்தார். அது விஷயமாய் தம் சம்மந் திக்கு எழுதிய கடிதத்தில் "தாங்கள் முயற் சித்து அப்பெண்ணை எனக்கு விவாகம் முடி த்து வைக்காவிட்டால் என் மகனைக்கொண்டு தங்கள் மகளை தலாக் செய்துவிடும்படிசெய்ய நேரிடும்" எனவும் குறிப்பிட்டிருந்தார். யாரு டைய பிரயாசையிலும் அவர் கோரிய காரி யம் நிறைவேறவில்லை. கடைசியாக அஹ்மத் பேக்கின் சொந்தக்காரர்களில் சுல்தான் முஹம்மத் பேக் என்னுமொரு வாலிபவிருந் தார்; அவருக்கு முஹம்மதீ பேகத்தை வெகு சிறப்பாக விவாகஞ்செய்து வைத்தார் கள். மிர்ஸா சாஹிபோ, தன் வஹீ இல் ஹாம்கள் யாவும் பொய்யும் புழுகுமாக ஆய் விட்டதென்று ஒரு பக்கல் கவலையும், தன் காதலியிடம் சுகமனுபவிக்க ஹேதுவில்லாது போய்விட்டதே என்று மற்றொருபக்கல் கவ லையும் கொள்ளலானர்.

மானிடர்களுக்கு யாதொரு வஸ்து வின் மீது அளவுகடந்த பிரீதி (இஷ்க்)ஏற்பட்டுவிடு மாயின் அவ்வஸ்து கிட்டாது போய்விடினும் வேறு எவ்விதத்திலேனும் அது கிடைத்து விடுமென்னும் ஆதரவு இல்லாது போய் விடு வதில்லை. இதேபோல் முஹம்மதீ பேகத்தை வேறு ஒருவருக்கு விவாகஞ் செய்து கொடுத்த பிறகுங்கூட அவள் பேரிலுள்ள ஆதரவு அவருடைய மனதைவிட்டு நீங்கின பாடில்லை. அவர் தன் மனோ ரதங்களை எல் லாம் வஹீ இல்ஹாம் என்று நினைத்துக் கொண்டிருந்தமையால், அப்பெண்ணுக்கும் தமக்கும் வானத்தில் விவாகம் நடைபெற் றதாகக் கூறியிருந்தும் *அதற்கு மாற்றமாய் இவர்கள் செய்துவிட்டதால், எவ்வகையிலும் அவளது புருஷன் இரண்டரை வருஷத்தில் மரணித்து அவள் விதவையாகி தம் நிகா ஹில் வந்து விடுவாளென்று ஆண்டவன் வஹீயின் மூலம் தமக்கறிவித்திருக்கிறதாகக் கூறினர். இரண்டரை வருஷமுஞ் சென்றுங் கூட சுல்தான் முஹம்மத் பேக் சௌகரிய மாகவும், சிரஞ்சீவியாகவும் விளங்கிக்கொண் டிருந்த படியால் தன் தாவா பொய்த்துவிட் டதே எனக்கவலைப்பட்டு எவ்வகையிலும் தம் முன்னிலையிலேயே சுல்தான் முஹம்மத்பேக் மரணமாய்விடுவார்; அப்பெண் தம்முடைய நிகாஹில் வந்துவிடுவள் இது எனது கடைசி தீர்க்க தரிசனமாகும்; இதுவும் பொய்யாய் விடுமாயின் என்னைப் பொய்யனென்றே எண் ணிக்கொள்ளுங்கள் என்று கூற முற்பட்டார். இவருடைய தாவாக்களும் இல்ஹாம் வஹீ என்று கூறிக்கொண்டிருந்த பொய்க்கூற்று களும் இவர் சிருஷ்டித்த மனோ ரதங்களும் பொய்யாகவே முடிந்தது. முஹம்மதீ பேக மும் அவளின் பக்தரான சுல்த்தான் முஹம் மத் பேக்கும் இன்றுவரை சுகமாகவும், சிரஞ் சீவியாகவுமிருந்து அருளாளனை ஆண்டகை யின் கிருபையால் பத்துக்கதிகமான பிள்ளை களையும் பெற்றிருக்கின்றனர். நிற்க, மிர்ஸா சாஹிப், தன் தீர்க்க தரிசனங்கள் எதுவும் நிறைவேறாது தன் காதலியின் கவலையிலேயே பிளேக் நோயால் மரண மடைந்து விட்டார். அம்மாது விஷயமாய் மிர்ஸா சாஹிப் கூறிய தாவாக்கள், தீர்க்க தரிசனங்கள் யாவும் அவ ரால் இயற்றப்பெற்ற அஞ்சாமெ ஆத்ஹம் முதலிய நூற்களில் வரைந்திருப்பதைக் காணலாம். ஆண்டவனல் அறிவிக்கப்பட்ட தென்று இவர்கூறிய தீர்க்க தரிசனங்கள் உண்மையாக இருக்குமாயின் அஃது ஒருக் காலும் நடைபெறாம லிருக்கமுடியாது. ஏனெனில் ஆண்டவன் சகல காரியங்களையும் நன்கறிவானதால் அவனுடைய கூற்றில் எவ் வித மாறுதலு மேற்பட முடியாது. ஆதலின்

* இதற்காகத்தான் இப்பெண்ணுக்கு மன் கூஹ ஆஸ்மானீ " வானத்தில் விவாகமாக்ப் பெற்றப்பெண் என்றொரு காரணப்பெயரும் வழங்குகின்றது.

ஆண்டவன்மீது பொய்யுரைகளை இட்டுக் கட்டி மிர்ஸா கூறிவிட்டாரென இதனுல் நிச்சயமாகத் தெரிகிறது. 17 வருஷ காலம் வரை முஹம்மதீ பேகம் விஷயமாய் ஏற்பட்ட தாவாக்கள் தீர்க்க தரிசனங்கள் யாவற்றும் எதிர்பார்க்கப் பட்டது. அது யாவற்றும் பொய்யாகவே முடிவுபெற்றதால் அநேகர் உணர்ச்சி பெற்றனர்; மிர்ஸாவைப் பின்பற்றியோரி லனேகர் விழிப்புற்றி அவருடைய கெட்ட கொள்கையை விட்டு தௌபாச் செய்து வெளியேறினர்.

தென்னாட்டில் தீயப்பிரசாரம் புரிய முற்பட்டிருக்கும் மிர்ஸாயிகாள்! ஹே அஹ்மதீகாள்!! இப்பெயர் பெற்ற புழுகரைத்தானு நபீ என்றும் மஸீஹ் மஹ்தீம் என்று நினைக்கின்றீர்கள் மேற்கூறிய கூற்றுக்களிலிருந்து இஸ்லாத்தில் எவ்வித சம்மந்தமும் ஈமான் மீது எவ்விதப் பற்றும் அவருக்கிருந்திருக்கவில்லை என்பதை உணர்வீர்களாக.

5-வது அதிகாரம்

கோர்ட்டுத் தீர்ப்பு

மிர்ஸாயீ வகுப்பார்கள் பரிசுத்த இஸ்லாத்தைச் சேர்ந்தவர்களல்லர்; அவர்களின் நிர்ணங்களைக் கொண்டே அவர்கள் இஸ்லாத்தை விட்டுப் புரம்பானவர்கள் என்பதை நீதி மன்றங்களிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில் ரஸமானதும், உபயவாதிகளால் விபரமாய் தர்க்கிக்கப்பட்டதுமாகிய சில தீர்ப்புகளை ஈங்கெடுத்து எழுத துணிவு கொண்டுளேன்.

அதாவது, வட இந்தியாவில் மௌங்கீர் என்றொரு ஊருமுண்டு. சற்றேறக்குறைய அதில் நாலாயிரம் சுன்னிகளைச் சேர்ந்த ஹனபீ முஸ்லிம்கள் வசித்து வருகின்றுர்கள். சொற்ப காலமாக, சுமார் ஆறுபேர் வரை காதியான் மதத்தில் சேர்ந்துகொண்டு பள்ளியில் சுன்னத்து வல்ஜமாஅத்து இமாமிற்குப் பின்னல் தொழுதால் தங்கள் தொழுகை கூடாதென்றும், தங்களுக்குள் தாங்களே ஓர் இமாமை ஏற்படுத்தி ஜமாஅத்தை நடத்திக் கொள்வோ மென்றும் வாதிக்கலாயினர். இதைக் கண்ணுற்ற மற்ற முஸ்லிம்கள் இவர்களைப் பள்ளியில் வரவிடாமல் துரத்திவிட்டனர். இதன்பேரில் இந்த ஆறு பேர்களும் நாங்களும் பள்ளியில் தனி இமாமத்து ஏற்படுத்தித் தொழுகை நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வாதியாக நின்று கேஸ் நடத்த ஆரம்பித்தனர்; இதுதான் இந்தக் கேஸின் சாரம்.

பின்னர் ஜட்ஜ் இரு கக்ஷியாரையும் விசாரணை செய்து கடைசியாக தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுத் தீர்ப்புச் செய்திருக்கின்றுர். அதன் சுருக்கம் பின்வருமாறு:

வாதி :—காதியானிகள்.

பிரதிவாதி :—சுன்னத்து வல்ஜமாஅத்து ஹனபீ முஸ்லிம்கள்.

ஜட்ஜியின் தீர்ப்பு

விவாதப்பட்ட இம் மஸ்ஜிதை சற்றேறக்குறைய 200 வருஷ காலத்திற்குமுன் அப்துன் நபீயென்பவர் கட்டினுரென்பதை இரு கக்ஷியாரும் ஏற்றுக் கொள்ளுகின்றுர்கள். ஆயினும் அவருடைய நெருங்கிய வாரீஸ் யாரென்பதைப்பற்றி இரு கக்ஷியாரிலும் பலத்த அபிப்பிராய பேதமிருக்கிறது. அப்துன்நபீயுடைய வாரீஸ் இன்னுர்தானென்று நிச்சயிப்பது இக்கேஸின் அம்ஸமா யில்லாத்ததினுல் அது அவசியமில்லை யென்பது எனது அபிப்பிராயம். ஆயினும், அவர் சுன்னத்துவல்ஜமாஅத்தைச் சேர்ந்த ஹனபீ முஸ்லிமா யிருந்தாரென்பதும், இந்தப் பள்ளி கட்டும்போது இந்தப் புதிய பிரிவாகிய காதியானிக் கூட்டம் தோன்றவில்லை யென்பதும் நன்கு துலங்குகின்றது. மேற்படி அப்துன் நபீ ஹனபியா யிருந்ததும், இந்தப் பள்ளி ஹனபிகளுக்காகவே கட்டப்பட்ட தென்பதும், 1905-ம் வருஷம் வரை எல்லா வாதிகளும் மிர்ஸா குலாம் அஹ்மதிடத்தில் பைஅத்துச்செய்து கொள்ளாமல் ஸுன்னீ, ஹனபீ, முஸ்லிம்களா யிருந்தார்களென்பதும் வக்பு நாமாவைக் கொண்டு வெளியாகின்றது.

இப்போது, பள்ளியை வக்பு செய்த ஒருவன் சுன்னீ அல்லது மற்றெந்த மத்ஹபுடையவனுகயிருந்தாலும், அவன் பிரதானமான விஷயத்தில் விசுவாச அம்சங்களில் தன்னேடு ஒற்றுமையும், பிரிவுகளில் தன்னை விட்டும் வேற்றுமையான ஒருவனைப் பள்ளியில் தன்னுடனுவது, அல்லது வேறு கிரமமான ஜமாஅத்துடனுவது தொழுகிறதைத் தடுக்க முடி

யுமா? அல்லவா? இதுதான் வாதிக்க வேண்டிய விஷயம்.

எனது அபிப்பிராயத்தில் தடுக்கமுடியாது. ஏனெனில் பள்ளியை ஒருதரம் இறைவன் பாதையில் வக்பு செய்துவிட்டால் பின்னர் அது ஒருவனுடைய சொந்த உடமையாக மாட்டாது. ஒரு முஸ்லிமானவன் மற்றொரு முஸ்லிம் பிறரோடு தொழுகிறதைக் கலக முண்டாகுமென்ற எண்ணமுண்டாகும் வரை தடுக்கமுடியாது. ஆதலால், ஒரு ஹனபீ முஸ்லிம் அல்லது அஹ்லஹதீஸ் அல்லது ஷாபியீ, மாலிக்கீ ஹன்பலீ முதலிய எந்த முஸ்லிமிற்கும் ஹனபிப் பள்ளியில் ஹனபீ இமாமிற்குப் பின்னால் தொழக்கூடிய பாத்தியதையுண்டு. எனினும், வாதியின் தாவாப் படி அவர்களுக்குத் தனியாய் ஜமாஅத்து ஏற்படுத்துகிற அதிகாரங் கிடையாது. வாதிகள், அஹ்மதியராய் விட்டதுமுதல் மிர்ஸா சாஹிபை நபியென்றும், வாக்களிக்கப்பட்ட மஹ்தியென்றும் விசுவாசியாத எந்த இமாமுடனும் தொழுகிறதை மறுக்கின்றார்கள். இப்போது வாதிக்க வேண்டிய விஷயமாவது :—

வாதிகள், வழக்காடப்பட்ட பள்ளியில் பிரதிவாதிகளை விட்டும் தனியாகவோ அல்லது முன் பின்னாகவோ ஜமாஅத்தை ஏற்படுத்த முடியுமா வென்பது தான் வாதிக்கவேண்டிய விஷயம். அதாவது, வாதிகள் தங்கள் மத்ஹபைத் துயராத பிரதிவாதிகளின் எந்த இமாமுடனும் சேர்ந்து தொழுகிறதைக் கண்டிப்பாய் மறுக்கின்றார்கள். மேற்படி பள்ளியை ஒரு ஹனபியானவர் ஹனபீ ஜஅமாத்திற்காகக் கட்டியிருந்தார். அச் சமயம் யாதொரு அஹ்மதியனும் உண்டாகவில்லை. அப்பள்ளியின்இமாமும் எப்போதும் ஹனபீயே. நிகழ்கால முத்தவல்லியும் (தர்மகர்த்தாவும்) ஹனபியே.

வாதிகளின் நோக்கமும், பள்ளியில் தனி ஜமாஅத்து ஏற்படுத்தக் கூடிய உத்தரவைக் கோர்ட்மூலமாகப் பெறவேண்டுமென்பதைத் தவிரவேறன்று. வாதிகளின் தாவா என்னவெனின்: பள்ளியில் நாங்கள் எங்கள் ஜமாஅத்தை பிரதிவாதியின் ஜமாஅத்திற்கு முந்தியாவது பிந்தியாவது ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் கோர்ட்டிலிருந்து கிடைக்க வேண்டுமென்பதேயாம். ஆயினும் இவ்வித ஆச்சரிய விண்ணப்பம் இதற்கு முன் எந்தக் கோர்ட்டிலாவது நடந்திருக்குமா வென்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. அஹ்லஹதீஸ், ஹனபிகளின் இரு வியாச்சியங்கள் கல்கத்தா ஹைக்கோர்ட்டு, அலஹபாத் கோர்ட்டுகளிலும் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. இன்னும், இவ்விரு வகுப்பாரின் விசுவாசங்களில் சில்லறைப் பிரிவுகளில் மட்டுமே சொற்ப வித்தியாசமுண்டு. அஹ்லஹதீஸ்கள், ஹனபிகளுக்குப் பின்னால் தொழுகிறதை நிராகரிக்கவில்லை. இங்ஙனமாக வாதிகளோ அஹ்மதியர்களைத் தவிர பிறருக்குப்பின்னால் தொழுகிறதைமறுக்கின்றார்கள். அஹ்லஹதீஸ்களுக்கும், ஹனபிகளுக்கும் நடந்த வியாச்சியத்தில் ஹனபிகளின் தொழுகைகளுக்கு யாதொரு பின்னமேற்படா விட்டால், அஹல ஹதீஸ்களுக்கு ஹனபிகளோடு சேர்ந்து தொழுகைபுரிய அதிகாரமுண்டென தீர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. இன்னும் எந்த வழக்குகளிலும் மார்க்க விசுவாசங்கள் தான் முக்கிய அளவுடையதென்று பிரிவு கவுன்ஸிலும் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. அஹ்லஹதீஸ்கள், தொழுகைகளில் ஆமீன் இரைந்தோதுகிறதும், தொழுகைக்கு இடையில் கையை உயர்த்துகிறதுமான சில்லரை விஷயங்களில் பிரிவுடையவர்களாயிருப்பதினால், இந்தக் காரணம் அவர்களை ஹனபிப் பள்ளிகளில் வரவிடாமற் றடுக்கிறதற்குத் தகுந்ததல்ல. தற்சமயம் நடக்கிற இந்த வியாச்சியத்தில் ஒரு ஹனபியே இந்தப் பள்ளியைக் கட்டியிருந்தாரென்றும், சொற்ப வருஷத்திற்கு முன் காதியானீகளை ஒருவரும் அறிந்திருக்கவில்லையென்றும், தற்சமயம் நடந்து வருவதுபோல் சுன்னிகளின் ஜமாஅத்தே நடந்துவந்ததென்றும், முஸ்லிம்களில் மூவாயிரம், நான்காயிரம் பேர்களில் மூன்று நான்கு மனிதர்களே காதியானீகளென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். வாதிகளுக்கு, சுன்னீ இமாமிற்குப் பின்னால் தொழ உத்தரவு கொடுக்கப்பட வேண்டுமென்றும், அல்லது மற்ற முஸ்லிம்களைப் போல் தொழுகை புரிவதற்கு உத்தரவு கொடுக்கப்படவேண்டுமென்றும்வாதிகள் தாவாச் செய்திருந்தால் எனது அபிப்பிராயத்தில் இந்த வியாச்சிய விஷயமாய் யாதொரு கஷ்டமில்லை. வாதிகளோ, தனியாக ஜமாஅத்து நடத்த உத்தரவு கேட்கின்றார்கள்.

பிரதிவாதிகள் சொல்லுகின்றார்கள் :—ஒரு பள்ளியில் இரு ஜமாஅத்து நடத்துகிறது கூடாது; அப்படி இரு ஜமாஅத்துநடத்துகிற தாயிருந்தால் முந்திய ஜமாஅத்து நடந்த பின்னர் சில விதிகளை அநுசரித்து நடத்தல் கூடும். அதாவது, முந்திய ஜமாஅத்துடன் சேர்ந்துகொள்ளச் சந்தர்ப்பமில்லாமல் தாமதமாய் வந்தவர்கள் தங்களுக்குள்ளொருவரை இமாமாய் நியமித்துத் தொழலாம். இதுவன்றி முந்தின ஜமாஅத்துடன் தொழக் கூடாது ; வேறே தனியாக ஜமாஅத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தாமதமாய் வருகிறார்களென்று இமாமுக்காவது தர்மகர்த்தாவுக்காவது தெரிந்துவிட்டால் அவர்களுக்கு வேறே ஜமாஅத்து நடத்த இடங்கொடுக்கப்படமாட்டாதென்பது பிரதிவாதிகளின் வாதம். ஜும்ஆவுடைய நாளில் இரண்டு ஜமாஅத்து, இரண்டு குத்பாவுடன் நடந்ததாக நான் எங்கும் கேள்விப்படவில்லை. வாதிகள், கஃபாவிலும் தினசரி ஒரு இடத்தில் நான்கு ஜமாஅத்து நடக்கிறதென்று கூறுகின்றார்கள். அங்கேயோ நான்கு மத்ஹபுக்காரர்களின் நான்கு முசல்லா தனித்தனியாக இருக்கின்றன. இந்த நான்கு முசல்லாக்களும் வெவ்வேறான நான்கு பள்ளிகளின் சட்டங்களிலிருக்கின்றன. தவிரவும், அந்த நான்கு முசல்லாக்களும் எங்கே இருந்தனவோ அங்கேயே இருக்கிறதன்றி ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாத்திக்கொண்டிருக்கவில்லை. ஒரு முசல்லா ஒரு பள்ளிக்குச்சமமாகவும் நாலு முசல்லாவையும், நான்கு பள்ளிக்குச் சமமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால், வாதிகள் ஒரேபள்ளியில் நான்கு ஜமாஅத்து நடக்கிறதென்று சொல்வது பொருந்தாது. மேலும், இந்த நான்கு பிரிவுகளில் நின்றும் எந்தப் பிரிவாராவது அடுத்த பிரிவுக்குப் பின் தொழுகிறதை மறுக்கவுமில்லை. வாதிகளோ, காதியானிகளைத் தவிர மற்றோர்களுக்குப்பின்னால் தொழுகிறதைமறுக்கின்றார்கள்.

இப்போது, எனது அபிப்பிராயத்தில் தீர்க்கவேண்டிய விஷயத்தைஆரம்பிக்கின்றேன். இந்தக் கேஸின் சம்பந்தமாக வாதிகள் காபிரா? அல்லவா! என்று தீர்ப்புச்செய்கிறது அவசியமென்பதை நான் உணரவில்லை. இது ஒருவனை மார்க்க வளையத்தைவிட்டுப் புறம்பாக்க அதிகாரமுடைய மார்க்கக் கச்சேரியல்ல. இந்த வியாச்சியத்திற்காக இவ்வளவே போதுமானது அதாவது, ஒவ்வொரு பிரிவாரும் அடுத்த பிரிவாரைக் காபிர் அல்லது பாவியென்று கூறுகிறார்கள்; வாதிக்கும் பிரதிவாதிக்கும் இருக்கப்பட்ட வித்தியாசங்களால் சேர்ந்து தொழுகிறதை மறுக்கின்றார்கள். வாதிகளும் அவர்களின் சாக்ஷிகளும் கூறுகிறதாவது:—

எவன் மிர்ஸா குலாம் அஹ்மதை நபீ யென்றும் மஸீஹென்றும் விசுவாசிக்கவில்லையோ, அப்பேர்ப்பட்ட எந்த முஸ்லிமிற்குப் பின்னாலும் தொழக்கூடாதென்று எங்கள் மத்ஹபின் தலைவர் (மிர்ஸா குலாம் அஹ்மது) இடமிருந்து விலக்கப்பட்டிருக்கிறது என்பதே.

வாதியின் சாக்ஷியான மௌலவீ அப்துல்மஜீது சொல்கிறார் :—நான் காதியான் மிர்ஸா சாஹிபை ஒப்புக்கொள்ளாத எந்த முஸ்லிம் இமாமாயிருந்தாலும்அவனுக்குப்பின் தொழமாட்டேன், இந்தத் தொழுகை மஸ்ஜிதநபவியிலா (மதீனாவிலுள்ள நாயகம் அவர்களின் பள்ளி) யிருந்தாலும், பைத்துல்லா ஷரீபி (மக்கத்து கஃபத்துல்லாவி) லாயிருந்தாலும் சரியே; நான் தொழமாட்டேனென்கின்றார்.

உபய கக்ஷிகளுக்கிடையில் எந்த முக்கியமான பேதங்களினால் வாதியைப் பிரதிவாதிகள் பள்ளியில் தொழுகை புரிய உத்தரவு கொடுக்கவில்லையோ அவைகளை நான் கீழே விவரிக்கின்றேன்.

(1) ஹனபீ உலமாக்களின் ஒற்றுமையான அபிப்பிராயப்படி வாதிகள் காபிராயிருக்கின்றார்கள். *

(2) வாதிகள் பிரதிவாதிகளைப் பாவியென்று பகருகின்றார்கள். †

(3) வாதிகள் குர்ஆன் ஹதீதிற்கு மாற்றமான சில விசுவாசமுடையவர்களா யிருக்கின்றார்கள்.

(4) ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடைசி நபியாயிருக்கவில்லை; இன்னும், மிர்ஸா குலாம் அஹ்மத் நபியாயிருந்தார் ; அவர்மீது அல்லாவின் புறத்திலிருந்து வஹீ இறங்கிக்கொண் டிருந்ததென்று வாதிகள் சொல்லுகின்றார்கள்.

---

* **தமது வாயினாலும், மிர்ஸா காபிராயிருக்கிறார்**

† **மிர்ஸா சாஹிப் பிரதிவாதிகள் காபிரென்று பத்துவாக் கொடுத்திருக்கின்றார்.**

(5) வாதிகள், ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் அற்புதங்களை விசுவாசிக்க வில்லை.

(6) ஹஸ்ரத் ஈஸா (அலை) நான்காம் வானத்தில் உயிரோடிருக்கவில்லையென்றும், மேலும் காஷ்மீரில் அடக்கப்பட்டிருக்கிறார்களென்றும் வாதிகள் சொல்லுகிறார்கள்.

(7) மிர்ஸா குலாம் அஹ்மத் ஹஜரத் ஈஸா நபியவர்களைக் காண சிறந்தவரென்று வாதிகள் சொல்லுகிறார்கள்.

(8) மிர்ஸா குலாம் அஹ்மத் ஹஸ்ரத் இமாம் ஹசன், இமாம் ஹுசைன் அலைஹிமுஸ்ஸலாம் இவர்களைப் பார்க்கிலும் சிறந்தவரென்றும் சொல்லுகிறார்கள்.

மிர்ஸா குலாம் அஹ்மத் தமது இஃஜாசே அஹ்மதீயென்ற கிரந்தத்தில் இவ்விரு இமாம்களைப்பற்றியும், மிகவும் கேவலமான நிந்தனை வார்த்தைகளை உபயோகித்திருக்கின்றார்.

(9) மிர்ஸா குலாம் அஹ்மத், ஹஸ்ரத் ஈஸா, ஹஸ்ரத் மர்யம் அலைஹிமுஸ்ஸலாம் இவர்களின் விஷயத்தில் அநாகரீகமான தூஷண வார்த்தைகளை வழங்கியிருக்கிறார்.

(10) மிர்ஸா குலாம் அஹ்மத்; ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் நீங்கலாக மற்றெல்லா நபிமார்களைப் பார்க்கிலும் சிறந்தவரெனத் தாவாச் செய்திருக்கின்றார். இன்னும், அவர் தமது சில எழுத்துக்களிலும், வசியத்துகளிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகரானவரென்றும் தாவாச் செய்திருக்கின்றார்.

இந்த வியாச்சியத்தில் உபய கக்ஷியாரும் மிர்ஸா குலாம் அஹ்மதால் இயற்றப்பட்ட அநேக நூல்களிலிருந்து அவரின் மார்க்க விசுவாசங்களையும், தாவாக்களையும் எடுத்துக் காட்டினார்கள். ஆயினும் நான் மிர்ஸா சாஹிபின் நபிப்பட்டத்தின் தாவாவைப்பற்றியும் ஈஸாவென்னும் தாவாவைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்யு முன் குர்ஆனிற் சொல்லப்பட்ட ஹஸ்ரத் ஈஸா நபியவர்களின் முஃஜிஸாவின் சம்பந்தத்தைப்பற்றி விபரிப்பது அவசியமென நினைக்கின்றேன். வாதிகளின் எட்டாவது சாக்ஷியாகிய மௌலவீ சாஹிபு தமது சாக்ஷியத்திற் சொல்லுகிறார்: எவன் குர்ஆனின் ஒரு பாகத்தை விசுவாசிக்கவில்லையோ அவன் காபிராயிருக்கிறான் என்பதே. குர்ஆனின், மூன்றாவது ஜுஸுவில் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பற்றிய கீழ்க்கண்ட வாசகம் காணப்படுகிறது.

அந்நாளையில் ஆண்டவன் சொல்லுவான் ஓ! மர்யமுடைய மகனாகிய ஈஸாவே! நான் (உலகத்தில்)உம்மீதும்,உம் தாய்மீதும்செய்த நன்றியை நினைத்துப்பார்.நான் பரிசுத்த ஆவியைக்கொண்டு உமக்கு உதவி செய்திருந்தபோது, நீ மடியிலிருந்து கொண்டும், (சிசுவிலும்) வளர்ந்தும் (ஒன்றுபோல்) பேசினாய். இன்னும், நான் உனக்கு எழுத்தையும், ஹிக்மத்தையும் (புத்திசாலித் தனத்தையும்,) தௌராத், இஞ்சீலையும் கற்பித்தபொழுதும்; இன்னும், நீர் எனது உத்தரவின் பேரில் மண்ணைக்கொண்டு ஒரு குருவியின் ரூபம் உண்டுபண்ணி அதில் ஊதி, அது (வாஸ்தவமாகவே) எனது உத்தரவைக் கொண்டு குருவியாய் விட்டபொழுதும்; இன்னும், பிறவிக் குருடர், குஷ்டரோகிகளை எனது உத்திரவைக்கொண்டு சுகமாக்கிவிட்டபோதும்; இன்னும், நீர் எனது உத்தரவைக் கொண்டு செத்த பிரேதங்களை (கப்றிலிருந்து உயிரோடு)வெளிப்படுத்தும்பொழுதும்; இன்னும் நான் பனீஇஸ்ராயீல்களை உன்னை(வெட்டுகிறதை) விட்டும், தடுத்தபோதும்; நீர் அவர்களிடத்தில் அற்புதங்களைக் கொண்டு வந்தபோதும் அவர்களில் காபிராயிருந்தவர்கள் இதுவோ யாதொன்றுமல்ல; பகிரங்கமான ஜால வித்தையா யிருக்கிறதென்று சொல்ல ஆரம்பித்தார்கள் என்பதே.

ஆகவே, மேற்சொல்லப்பட்ட அற்புதங்களினின்றும், எதையாவது விசுவாசியாமலிருந்தால், குர்ஆனின் இந்த வாசகத்தை மறுக்கிறது மிகவும் பகிரங்கமானதே. அன்றியும், முஸ்லிமென்று வாதாடுகிற எவனும் இதைப் பொருந்தமாட்டான். உண்மையில் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களின் அற்புதங்கள் குர்ஆனிற் சொல்லப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்களுடைய பரிசுத்தமான வேதத்திலுள்ள இந்த எழுத்துக்கள்தானே சாக்ஷியாக இருக்கும்போது எனது அபிப்பிராயத்தை உரைக்கவேண்டிய தேவையில்லை.

ஆதலால், எவன் மேற் சொல்லப்பட்ட வாசகத்தை ஒப்புக்கொள்ள வில்லையோ, அவன் பகிரங்கமான தவறுதலின்பேரிலிருக்கிறதுந் தவிர, சுன்னத்து வல் ஜமா

அத்து மத்ஹபின் பிரகாரம் அவன் காபிரா யிருக்கிருனென்பதில் எதுவும் சந்தேகமுண்டோ?

பிரதிவாதியின் வக்கீல் சொல்லுகிருர்: குர்ஆன்ஷரீபில் ஒரு ஆயத்தின் அர்த்தம், மற்ருெரு ஆயத்தின் அர்த்தத்திற்கு மாருன தாக எந்த ஆயத்தும் கிடையாதென்கின்ருர். குர்ஆன்ஷரீபில் இறைவன் மட்டுமே உயிர்ப் பிக்கக்கூடிய சக்தியுள்ள ஒரு உண்மையா யிருக்கிருன் என்று வரையப்பட்டிருக்கிறது. எந்த ஆயத்தை நான் மேலே குறிப்பிட்டிருக் கிறேனே அதன் கருத்தாகிறது, ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் பிரேதங்களைத் தங்களின் சுய சக்தியைக் கொண்டு உயிர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள் என்பதல்ல. அன்றியும், குர்ஆனின் ஆயத்துகளில், பிஇத்னீ (எனது உத்திரவுப் பிரகாரம்) என்ற வார்த்தை வந்திருக்கிறது. ஆதலால், மையித்துகளை உயிர்ப்பிக்கிறது ஆண்டவனின் ஏவுதலைக் கொண்டாயிருந்தது. மேலே வரையப் பட்ட (குர்ஆனின்) வாசகத்தில் எப்போது நான் பனீஇஸ்ராயீல்கள் உம்மை வெட்டுகிற தைவிட்டும் விலக்கினேனே என்றதின் கருத் தாகிறது: ஹஸ்ரத் ஈஸா நபீ அவர்கள் உயிரோடிருக்கிருர்க ளென்பதே யாகும். அவர்கள் உயிரோடிருக்கிறதாக ஒப்பாம லிருப்பது குர்ஆனை ஒப்பாததுபோலாகிறது. காதியானீகளின் விசுவாசமாகிறது: ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் எப்போது சுகமாய் விட்டார்களோ, ஹிந்துஸ்தான் தேசத் திற்கு வந்து இங்கேயே மரணமடைந்தார் கள்; இன்னும் காஷ்மீரில் அடக்கப்பட்டிருக் கிருர்க ளென்பதேயாகும். ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமின் மரணத்தைப்பற்றி குர் ஆனில் வேறே ஆயத்துகளும் இருக்கின்றன. அதாவது:—

அவர்கள் (ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை) மறுத்ததுமன்றி, மர்யமின்பேரில் பிரமாண்டமான அவதூறும் சொன்னுர்கள். அன்றியும் நாம் அல்லாஹ்வுடைய ரசூலென்று சொல் லிக்கொண்டிருந்த மஸீஹிப்னு மரியமைக் கொன்றுபோட்டோ மென்றும் சொல்ல ஆரம்பித்தனர். உண்மையில், அவரைக் கொன்று போடவுமில்லை; சிலுவையில் அறையப்படவுமில்லை. எனினும், அவர்களுக்குச் சந்தேகமுண்டாய்விட்டது. எவர்கள் இதில் (ஈஸா நபீ அவர்கள் விஷயத்தில்) அபிப்பிராய பேதமா யிருந்தார்களோ அவர்கள் தாங் களே சந்தேகத்திலிருந்தார்கள்; அவர்களுக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. ஆயினும், மதிப்பான யோசனையின்பேரில் சென்று கொண்டிருந்தார்கள். (உண்மையாவது அந்த எகூதிகள் ஈசாவை வெட்டவில்லை; இது உறுதியாயிருக்கிறது. மேலும், ஆண்டவன் அவரை தன்னளவில் எடுத்துக்கொண்டான். இன்னும், ஆண்டவன் தத்துவமுள்ளவனும் பூரண அறிவுள்ளவனுமா யிருக்கிருன் என் பதே.

இந்த குர்ஆனின் ஆயத்துகளாகிறது:— 3-வது ஜுஸ்விற் சொல்லப்பட்ட ஆயத்துக ளுக்குப் பின்னுல் இறங்கியிருக்கிறது. ஆதலால், ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் வெட்டப் படவுமில்லை; சிலுவையில் அறையப்படவு மில்லை; மேலும், அவர்கள் வானத்தின்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களென்பது பகிரங்கமாயிருக்கிறது.

குர்ஆனில் இவ்வளவு தெளிவாக விளக்கப் பட்டிருந்தும், மிர்ஸா குலாம் அஹ்மதைத் துயர்ந்தவர்கள், ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் வானத்தின்பேரில் அழைக்கப்பட வில்லை யென்றும், அவர்கள் இந்துஸ்தானிற்குப் பிரயாணஞ் செய்து, காஷ்மீரில் மரணமாகி அங்கேயே அடக்கப்பட் டிருக்கிருர்களென்றும் சொல்லுகிருர்கள்.

இப்போது நான் வாதி, பிரதிவாதிகளின் மார்க்க விசுவாசப் பிரமாணங்களில் உண்டா யிருக்கிற முக்கிய பேதங்களை விபரிக்கின் றேன். மிர்ஸா சாஹிப் தமது பற்பல நூல் களிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று தாவாச்செய்திருக்கிருர். இந்தத் தாவாவை வாதியும் அவர்களின் மற்ற பிரிவினர்களும் பொதுவாக அங்கீகரிக்கிறதினுல் நாம் அதற்கு ஆதாரங்கொடுக்கத் தேவையில்லை. இதற்கு மாற்றமாகப் பிரதிவாதிகள் மிர்ஸா சாஹிப் வாக்களிக்கப்பட்ட மஸீஹில்லை. ஏனெனில் ஹதீதின்படி ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இரண்டாம் விடுத்தம் இவ்வுலகிற்குவரும்பொழுது திமிஷ்க் தேசத் தில் கீழ்புறத்திலிருக்கப்பட்ட வெள்ளை மனுருவின் பேரில் இறங்குவார்கள் என்று (ஹதீதில் வந்திருப்பதினுல் இவர் மஹீஹல்ல வென்று சொல்லுகிருர்கள்.

இன்னும் அவர்களின் (ஈஸா நபியின்) காலத்தில் உலகம் மிக்க செழிப்பாயும், அமைதியாயுமிருக்கும். பொருமை, கோபம், பூரணமாய் எடுபட்டுப் போய்விடும். வேங்கையும், ஒட்டகையும், கரடியும், ஆடும் ஒரிடத்தில் வசிக்கும். பிள்ளைகள் பாம்புடன் விளையாடுவார்கள். அவர்களுக்கு யாதொரு தீமையும் அணுகாது. (என்று சொல்லப்பட்டிருக்கிறது.) முஸ்லிமுடைய ஹதீதைப் பார்க்கவும். (சேல் துரையின் முகவுரை 63-ம் பக்கம் பார்க்க.)

இன்னும், ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 40 வருஷம் வரை உயிரோடிருப்பார்களென்றும், பின்னர் மரணமாகி ரசூல்சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மஹத்தான கப்ரின் பக்கத்தில் அடங்கப்பட்டுக் கியாம நாளில் கூட எழும்புவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (மிஷ்காத்துடைய ஹதீதைப் பார்க்க.)

இவ்விதக் காரணங்களால் பிரதிவாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மத் வாக்களிக்கப்பட்ட மஸீஹென்பதை நிராகரிக்கின்றூர்கள். மிர்ஸா சாஹிப் தமது நூல்களில் தாம் நபீயென்றும் ஆண்டவனின் ரசூலென்றும், தாவாச் செய்திருக்கின்றூர். அவர் தம்மைத் தனித்த நபியாகத் தாவாச் செய்யவில்லையென்றும், உம்மத்திலுள்ள நபியாகத் தாவாச் செய்திருக்கிறுரென்றும், வாதிகள் சொல்லுகிறுர்கள். இன்னும், அவர் ஹஸ்ரத் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ சல்லமவர்களைப் பின்பற்றினதாலும் அவர்களின் பிரதிநிதியாயிருந்ததனுலும் அவர் நபியாயிருக்கிறுரென்றும், வாதிகள் சொல்லுகிறுர்கள்.

ஒரு உம்மத்திலுள்ளவரும், பிரதிநிதியானவரும், நபியாவாரென்று குர்ஆனிலும், ஹதீதிலும், எங்கும் சொல்லப்படவுமில்லை. இஸ்லாம் மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்த நூலிலும் அவ்விதம் கூறப்படவுமில்லை. வாதிகளும் அதை ஸ்தாபிக்கிறதற்கு முடியாமலிருந்துவிட்டார்கள். இதற்கு நேர்மாருக முஹம்மத் நபியவர்களுக்குப் பின்பு யாதொரு நபியும் கிடையாது; நாயகமவர்கள் கடைசி நபியாயிருந்தார்களென்று குர்ஆன் ஹதீது மூலமாக வெளியாகிறது. (சேல் துரை 33-ம் அதி. 31-ம் ப. பார்க்க.)

குர்ஆனுடைய ஆயத்து கீழே வரையப்பட்டிருக்கின்றது

அதாவது:—(ஜனங்களே!) முஹம்மதாகிறவர் உங்களில் நின்றும் யாருக்கும் பிதாவல்ல; திட்டமாக அவர் அல்லாஹ்வின் ரசூலாயும் கடைசி நபியாயுமிருக்கின்றூர் என்பதே. காதம் என்ற எழுத்தின்பேரில் அபிப்பிராய பேதமுண்டாயிருக்கின்றது. வாதிகள் அதன் அர்த்தம் கடைசி என்பதை ஒப்புக்கொள்ளுகிறுர்களில்லை. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் கடைசி நபியாயிருந்தார்கள், அவர்களுக்குப் பின் வேறு நபி கிடையாதென்பது உலகத்திலுள்ள சர்வ முஸ்லிம்களின் விசுவாசப் பிரமாணம். (சேல்துரையின் முகவுரை 49, 57. ப.)

இந்த குர்ஆனின் ஆயத்திற்கு வியாக்கியானம் செய்கிறது ஹஸ்ரத் ரசூல் நாயகம் (ஸல்) அவர்களைவிட விசேஷமாக ஒருவராலும் முடியாதென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில், நாயகமவர்களின் மீதே குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது. (மிஷ்காத்தைப்பாருங்கள்.) ஹதீதின் அர்த்தத்தை எழுதப்படுகிறது.

திட்டமாக எனது உம்மத்தில் முப்பது பேருண்டாவார்கள்; அதில் நின்றும் ஒவ்வொருவனும் நபிப்பட்டத்தைப்பற்றி தாவாச்செய்வான், நான் கடைசி நபியாயிருக்கிறேன்; எனக்குப் பின் வேறு நபீ கிடையாது என்பதே. புகாரியிலும் இவ்வித ஹதீதுகளிருக்கின்றன. எனக்குப்பின் வேறு நபி உண்டாகக்கூடுமானல், அது (ஹஸ்ரத்) உமருயிருக்கலாம் என ஹதீது ஷரீபுகளில் கூறப்பட்டிருக்கின்றது.

காதியானீகள், மிர்ஸா குலாம் அஹ்மதை ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் காண பதவியில் சிறந்தவராக எண்ணுகிறுர்களென்றும், உம்மத்திலுள்ள நபீயைப்போலில்லாமல் நபியினுடைய ஸ்தானத்திலே நபீயென்றும், பைகம்பர் என்றும் விசுவாசிக்கிறுர்களென்றும் எவ்வித சந்தேகமுமின்றி எனது அபிப்பிராயத்தில் பூரணமாக ருஜுவாய் விட்டது. வாதிகளின் எட்டாவது சாக்ஷியும் அப்படியே விவரித்திருக்கின்றூர். வாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மத் தனது உள்ளமையைக் கொண்டே நபியாயிருந்தாரென்றும், ஹஸ்ரத் முஹம்மது நபீ

யவர்களின் மீது இறங்கிக்கொண்டிருந்த வஹீயைப்போல் இவர்மீதும் இறங்கிக்கொண்டிருந்ததாகவும் பிடிவாதம் பண்ணுகிறுர்கள். வாதிகளின் இந்த ஆச்சரியமான விசுவாசம் குர்ஆன் ஹதீதிற் சொல்லப்பட்டபடி அதாவது ரசூல் நாயகம் அவர்களுக்குப் பின் யாதொரு நபியும் உண்டாகமாட்டார்கள் என்ற இஸ்லாத்தின் அஸ்திவாரத்திற்கு மாற்றமாயிருக்கின்றது. இன்னும்அவர் தாம் நபியென்றும், ரசூலென்றும், தாவாச் செய்ததுமன்றி, ரசூல் நாயகமவர்கள் நீங்கலாக மற்றெல்லா நபிமார்களைப் பார்க்கிலும் சிறந்தவரென வாதாடி யிருப்பது அவரின் சில நூல்களிலிருந்தும் வெளியாகிறது. (ஹகீக்கத்துல் வஹியைப் பார்க்க.)

அன்றியும், ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்(ஸல்) அவர்களுடன் சரிசமானமானவரென கவிகளைக் கொண்டும் தாவாச் செய்கிறுர். உதாரணமாக பார்ஸீ பாஷையின் ஒரு கவியில் சொல்லுகிறுர்.

நானே காலத்தின் மஸீஹாயும், ஆண்டவனுடன் வசனித்த (மூசாவைப் போலும்) வனுகவுமிருக்கின்றேன். நானே முஹம்மதாயும், அஹ்மதாயும், முஸ்தபாவாயும் இருக்கின்றேன் என்பதே.

இவர் தமது துவக்கமான நூல்களில் தம்மை பின்பற்றினவரென்றும் சொல்லியிருக்கிறுர். ஆயினும், அவரின் வயது அதிகப்பட்டுக்கொண்டு போகப் போக அவர் ஹஸ்ரத் ரசூல்நாயகம்(ஸல்)அவர்கள்நீங்கலாக,இமாம் ஹஸன், ஹஸ்ரத் ஈஸா இன்னும் மற்ற எல்லா நபிகளைப் பார்க்கிலும் உயர்ந்துகொண்டே போகிறுர். அப்பால் ரசூல் நாயகம் அவர்களுடன் சரிசமானமென்றும், தாவாச் செய்ய ஆரம்பிக்கின்றுர். எதுவரை (உயர்கிறுர்) என்றுல் அவர் செல்லச்செல்ல சர்வ தத்துவமுடைய ஆண்டவனுகவுமாகி விடுகின்றுர். அப்போதுதான் அவர் பூமியைச் சிருஷ்டிக்க உத்தரவு கொடுத்தார்.

மிர்ஸா குலாம் அஹ்மத் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களின் விஷயத்தில் தாழ்ந்த இழிச் சொற்களைவழங்கியிருக்கின்றுர்.இமாம்ஹசன் ஹுசைன் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களைநிந்தனையாய்ப் பேசியிருக்கிறுர். இதற்குப்பின் அவர் சொல்லுகிறுர்:—கிறிஸ்தவர்கள் நமது நாயகமவர்களின் மஹத்துவத்திற்கு மாற்றமான சொற்களைச் சொல்லுகிறதனுல் அவர்களுக்கெதிராக ஹஸ்ரத் ஈஸா நபியவர்களைத் தூஷணித்திருக்கிறே னென்றும், இமாம் ஹசன் ஹுசைனை ஷிஆக்களுக்கு மறுப்பாகத் தூஷணித்திருக்கிறேனென்றும் சொல்லுகிறுர்.

நஸாராக்கள் பைபிளின் மூலமாக ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மதிக்கிறதற்குக் கட்டுப்பட்டவர்களல்ல. ஆதலால், அவர்களும், (மிர்ஸாவுக்கெதிராக) நாயகமவர்களின் விஷயத்தில் எதை நாடுவார்களோ சொல்லக் கூடும். ஆண்டவன் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை குர்ஆன் ஷரீபில் தானே புகழ்ந்தும், அவர்களின் நாமத்தைப் பற்பல இடங்களில் மதிப்பாகச் சொல்லும்போது அவர்களின் விஷயத்தில் மிர்ஸா குலாம் அஹ்மத் இவ்விதமான நிந்தனைச் சொற்களை உபயோகிக்காமலிருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. முஸ்லிம்களின் விசுவாசப்படி அசல் தௌராத்தும், இஞ்சீலும், உலகத்தை விட்டுத் தவறிப்போனதென்றும்; தற்காலமிருக்கப்பட்ட பைபிளை ஒப்புக்கொள்ளவில்லையென்றும் ஏற்பட்டிருக்கும்போது, மிர்ஸா சாஹிப் இழிச்சொற்கள் (நபியவர்களைப்பற்றி) பைபிளில் இருக்கின்றனவென்று சொல்ல வேண்டிய அவசியமென்ன? (நவூது பில்லாஹ். அல்லாஹ் காப்பாற்றவேண்டும்.) மிர்ஸா சாஹிப் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஜால வித்தைக்காரரென்றும், சாராயம் குடிக்கிறவரென்றும், பாவியென்றும், அநேக துர்நடப்புள்ள ஸ்திரீகளின் சாவகாசத்தில் இருந்தாரென்றும், அந்த ஸ்திரீகளைக் கொண்டு சிரசில் எண்ணெய் தேய்க்கச் செய்தாரென்றும் கூறுகிறுர். ஹஸ்ரத் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விஷயத்தில் மிகவும் கேவலமாக அவர்களின் மாதாவும், பாட்டியும் துர் நடப்புள்ளவரென்றும், கூறுகிறுர். (ஹகீக்கத்துல் வஹீயைப் பாருங்கள்.)

மேலே சொல்லப்பட்ட விஷயங்களைப் பார்க்கும்போது முஸ்லிம்களின் ஹிருதயங்களில், ஒரு பிரமாண்டமான வெறுப்பின் கிளர்ச்சி யுண்டாகிறது. குர்ஆன்ஷரீபில் ஹஸ்ரத் ஈஸாநபி அவர்களையும், அவர்களின் மாதாவையும் மிகவும் மதிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது: (அல்லாவுடன்) நெருங்கியவர்களின் சிநேகத்தைத் தவிர உங்

களில் நின்றும் அதன்பேரில் யாதொரு கூலியும் நாடவில்லையென்று சொல்லிவிடும் என்பதே.

ஹதீதில் நாயகமவர்கள் சொன்னதாக நாம் பார்க்கிறோம். அதாவது:

எனது குடும்பத்தில் ஹசன், ஹுஸைன் எனக்கு எல்லோரையும்விட அதிகப் பிரியமானவர்களாயிருக்கிறார்கள் என்பதே.

என் முன்னாலிருக்கப்பட்ட சகல எழுத்துக்கள், சாக்ஷியங்களைக் கொண்டு இந்த முடிவை எடுக்காமல் இருக்கமுடியாது. அதாவது, வாதி பிரதிவாதிகளின் மார்க்க விசுவாச மூலப்பிரமாணங்களில் எவ்விதமான ஒற்றுமையும் கிடையாது. இவ்வித பலத்த மாற்றங்கள் உண்டாயிருக்கும்போது வாதிகள் தங்களுக்குத் தனியாக ஒரு மஸ்ஜிதைக் கட்டிக்கொள்ளாமல் கோர்ட்டிற்கு எப்படி வந்தார்களென்பது எனக்கு வியப்பாக இருக்கின்றது. இவ்வாறான நூல்களை இயற்றினதின் காரணமாய் பிரதிவாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மதை ஹனபீ உலமாக்களிடத்தில் முஸ்லிமல்லவென்று புகல்கின்றார்கள். மிர்ஸா சாஹிபு எப்படியிருந்தார், அவர் யார், என்ற விஷயங்களைமத சம்பந்தமான கோர்ட்டுகளில் தீர்ப்புச் செய்யவேண்டியதைத் தவிர எனது அபிப்பிராயத்தை வெளியிடமுடியாது. வாதி, பிரதிவாதிகளில் இஸ்லாமுடைய சில முக்கிய அம்சங்களில் பலத்த பேதகமிருக்கிறது. மிர்ஸா குலாம்அஹ்மத் ஏற்படுத்திய மார்க்கத்தைத் துயர்ந்ததினால் வாதிகள் காபிரென்று சொல்லத் தகுந்தவர்களா யிருக்கிறார்கள். நான் அவர்களைக் காபிரென்று பகராவிட்டாலும், அவர்கள் ஹனபீ முஸ்லிம்களல்ல வென்பதைக் கண்டிப்பாய்க் கூறுவேன். அவர்களை ஹக்தாராகப் (பாத்தியஸ்தர்களாகப்) பள்ளியில் தொழுகை புரிய உத்தரவு கொடுக்கப்படமாட்டாது. வாதிகளின் விசுவாசப்படி கலகமுண்டாகும். திலாவர்பூர் என்ற தெருவில் கட்டப்பட்ட பள்ளி உலகத்திலுள்ள சுன்னத்து ஜமாஅத்துகளுக்காகக் கட்டப்பட்டது. ஆதலால், வாதிகள் பள்ளியில் தொழுகை புரிய யாதும் அதிகாரமில்லை. ஷை தாவாவை நூற்றுக்கு ஆறு வட்டியுடன் செலவு சகிதம் டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

இப்ராஹீம் அஹ்மத், சப்-ஜட்ஜ்.
30, ஜுன் 1914 பத்திரிகையில்.

அப்பீல்.

இவ்வாறு தீர்ப்புச் செய்யப்பட்ட பின்பு வாதிகள் டிஸ்டிரிக்ட் ஜட்ஜிடம் அப்பீல் செய்துகொண்டார்கள். அவரும், திரும்ப விசாரணை செய்து தீர்ப்புச் செய்யலானார்.

அதன் சுருக்கம் பின் வருமாறு:—

டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் தீர்ப்பு.

வாதிகள் தங்களுக்குத் தனி ஜமாஅத்தை ஏற்படுத்த ஆக்ஞை பிறப்பிக்க வேண்டுமென்கின்றார்கள். பிரதிவாதிகள் அவர்கள் இஸ்லாமானவர்களல்ல ஆதலால், பள்ளியில் தொழப் பாத்தியதை யுடையவர்களல்ல என்கின்றார்கள்.

இதிலிருந்து மூன்று விஷயம் வாதிக்கத் தக்கது:—

(1) மிர்ஸா குலாம் அஹ்மத் முஸ்லிமா அல்லவா.?

(2) விவாதத்திலிருக்கப்பட்ட பள்ளி யாருக்காகக் கட்டப்பட்டது.?

(3) வாதிகள் பள்ளியில் தொழத் தகுந்தவர்களா? அல்லவா? தகுந்தவர்களானால் ஒரு தனித்த இமாமிற்குப் பின்னால் மற்ற நேரங்களில் தொழக்கூடுமா? அல்லவா?

முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் மிர்ஸா குலாம் அஹ்மதைக் காபிரெனப் புகல்கிறார்கள். எனது அபிப்பிராயத்தில் வாதிகள் முஸ்லிகளென்பதில் சந்தேகமன்று. இப்பள்ளியாகிறது, சுன்னீ முஸ்லிம்களுக்காகவே கட்டப்பட்டது. பிரதிவாதிகள், வாதிகள் காபிராயிருக்கிறார்களென்று ஆதாரங் காட்டுகிறார்கள். அவைகளும் அஸ்திவார மற்றதுமல்ல. மிர்ஸா குலாம் அஹ்மதின் நூல்களைக்கொண்டே ருஜுவாகிறது. ஆயினும், சுன்னத்து ஜமாஅத்துகளின் முக்கிய கொள்கைகளுக்கு நேர் மாற்றமா யிருக்கிறார்கள். குர்ஆனின் சட்டப்படி யார் கடைசி நபியென்று தீர்ப்புச் செய்கிறது என்னைச் சம்மந்தப்பட்டதல்ல எனினும், இரு கக்ஷியாரும் ஒருவருக்கொருவர் காபிர் என்று பகர்வதில்ஆக்ஷேப மன்று. எனது அபிப்பிராயத்தில் வாதிகள் தனிஜமாஅத்தை ஏற்படுத்தத் தகுந்தவர்களல்ல. அப்பீல், செலவு சகிதம் தள்ளப்பட்டது. ஆனால் கீழ்க் கோர்ட்டாரின் தீர்ப்பில் ஒரு திருத்தஞ் செய்கிறேன்.

அதாவது: வாதிகள், பள்ளியில் ஏற்படுத்தப்பட்ட இமாமிற்குப் பின்னால் பிரதிவாதிகள்

மற்றும் சுன்னத்து ஜமாஅத்துகளுடன் சேர்ந்து தொழுகை புரிய அதிகாரமுண்டு.

மிஸ்டர். யன். கே. தத்.
18, மே 1915. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்.

அப்பீல்.

இரு கக்ஷியாரும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் தீர்ப்பைக்கொண்டு சமாதானப்படாமல் பங்கால் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்களிடம் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்களின் தீர்ப்பு.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்,வாதிகளைக் காபிரென்று தீர்மானிக்கவேண்டியதிருக்க அவரின் (மிர்ஸாவின் துவக்கமான நூல்களைப் பார்த்துக் கொண்டு முஸ்லிமென்று தீர்ப்புச் செய்துவிட்டார். அன்றியும், கீழ்க்கோர்ட்டாரின் தீர்ப்பில் திருத்தம் செய்து வாதிகள் பள்ளியில் சென்று முஸ்லிம்களோடு தொழுகை புரியலாமெனத் தீர்ப்புச் செய்திருக்கிறது தவறு என பிரதிவாதிவாதிகள் சொல்லுகிறார்கள்.

டிஸ்டிரிக்ட், ஜட்ஜ் வாதிகளை முஸ்லிம் என்று ஒப்புக்கொண்டு அப்பால் பிரதிவாதிகளின் ஜமாஅத்திற்கு முன்னாகவோ பின்னாகவோ வாதிகள் தனி ஜமாஅத்து ஏற்படுத்தலாம் என்று தீர்ப்புச்செய்யவேண்டியதிருக்க, மாற்றமாய்த் தீர்ப்புச் செய்திருக்கிறது சட்ட விரோதமாயிருக்கிறது என்று வாதிகள் சொல்லுகிறார்கள். கீழ்க் கோர்ட்டார்கள் வாதியை முஸ்லிம் என்று தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். எனினும், அவர்கள் மதாபிமானிகளான முஸ்லிம்களைக் காபிரென்று கூறுவதினால் அவர்கள் (மிர்ஸாயி மதத்தார்கள்) டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் டிக்ரியின் பிரகாரம் பிரயோஜனம் பெற வழியில்லை. வாதிகளின் தாவாவின்படி ஒரே பள்ளியில் இரு வகுப்பார், இரு ஜமாஅத்தை ஏற்படுத்துகிறது இஸ்லாமிய ஷரீஅத்தில் காணப்படவில்லை. இவ்வாறு இரு ஜமாஅத்து ஏற்படுத்த உத்தரவு கொடுத்தால் சுன்னீ முஸ்லிம்களின் தொழுகையின் நேரம் குறைவுபடும். அன்றியும், பூர்வீக முஸ்லிம்களுக்கு பரம்பரையாய்க் கிடைத்துக்கொண்டிருந்த பாத்தியதையழிந்துவிடும்; தேவாலயத்தில் சதாவும் கலகம் நடந்துகொண்டிருக்கும். இது காரணங்களால், வாதிகளின் தாவா ரத்துச் செய்யத்தகுந்ததாக இருக்கிறது. ஆகவே இரண்டு அப்பீலும், செலவு சகிதம் தள்ளப்பட்டது.

ஜஸ்டிஸ். ஷேமர் துரை பஹதூர்.
21, டிசம்பர் 1916.

இந்த அபிப்பிராயத்தை நானும் அங்கீகரிக்கின்றேன். இந்த வியாச்சியத்தைத் தீர்ப்புச் செய்திருக்கிற யோக்கியதையுடைய சப் ஜட்ஜ் ஒரு முஸ்லிமாயிருக்கிறார். அவர் தமது தீர்ப்பில் தனி ஜமாஅத்து ஏற்படுத்துகிறதைப்பற்றி ஒரு அழகான ஆதாரங் காட்டியிருக்கிறார். எனது அபிப்பிராயத்தில் இந்த ஆதாரம் ஸாதுல்மஆது என்ற நூலின் 3வது வால்யப் பாங்கினுடைய அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், வாதிகளுக்குத் தனி ஜமாஅத்து ஏற்படுத்த உத்தரவு கொடுக்கப்படமாட்டாது. இரு அப்பீலும், செலவு சகிதம் தள்ளப்பட்ட அப்பிராயத்தை நானும் அங்கீகரிக்கின்றேன்.

ஜஸ்டிஸ். ரோ துரை பஹதூர்.
21, டிசம்பர் 1916.

(ரிசாலா அர்ரஷீது ஷஅபான் 1338 ஹிஜ்ரி.)

1. மௌங்கீர் தேசத்திற்கடுத்தாப்போல் பாகல்பூர் என்று ஓர் நகரமிருக்கிறது. காதியானீ மதத்தைச் சேர்ந்த மௌலவீ. அப்துல் மாஜிது என்பவர் அவடத்திலுள்ள பெருநாள் தொழுகிற இடத்தை எங்களுக்குரியதென்றும், முஸ்லிம்கள் இதில் பிரவேசிக்கக்கூடாதென்றும் தடுக்கலாயினர். அப்பால், வியாச்சியம் நடைபெற்றது. கோர்ட்டார் விசாரணை செய்து காதியானிகள் அங்கே பிரவேசிக்கக் கூடாதென்று தீர்ப்புச் செய்துவிட்டார்கள். கிறுமைப் பட்டவர்களாக காதியானிகள் துரத்தப்பட்டார்கள்.

2. கட்டக் என்ற நகரத்தில் மிர்ஸாயி மதஸ்தர்கள் முஸ்லிம்களாகிய எங்கள்பள்ளியில் பிரவேசிக்கக் கூடாதென்று முஸ்லிம்களால் வியாச்சியம் நடத்தப்பட்டது. அதில் மௌங்கீர் ஜட்ஜிமெண்டு நகலை வருத்தி ஆஜர் செய்யப்பட்டது. கோர்ட்டார் விசாரணை செய்து தீர்ப்புச் செய்ததாவது:

காதியானீகள் சுன்னத் வல் ஜமாஅத்து முஸ்லிம்களுடைய நான்கு பள்ளிகளாகிய, (1) ரசூல்பூர், (2) கோசம்பீ, (3) முஹிய்யித்தீன்பூர், (4) துவான் சாஹீ முதலிய பள்ளிகளில் அடிவைக்கக்கூடாது. மீறி நடப்பார்க

ளானுல், சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தப்படும் என்பதே.

ஆகவே இங்கும் அவமானத்துடன் விரட்டப்பட்டார்கள்.

3. ஆப்பிரிக்காவில் மோரீஸ் என்று ஒரு தீவு இருக்கின்றது. சற்றேறக் குறைய 45,000 முஸ்லிம்கள் வசிக்கின்றூர்கள். அங்கு 40 பள்ளிக்கு அதிகமாக இருக்கின்றது. அவ்விடம், சென்ற ஆறு வருடங்களாக காதியானீ மிஷ்னரிகள் சென்று கிலாபத்துக்கு மாற்றமாகவும், கவர்ன்மெண்டுக்கு உதவியாகவுமிருந்து சாதாரண முஸ்லிம்களைப் பயமுறுத்தி சுமார் 50 பேர் வரை மிர்ஸாயி மதத்தில் சேர்த்துவிட்டார்கள். அவ்விடம் ஜும்ஆப் பள்ளியின் இமாமாகிய ஜனுப் மௌலானு, அப்துல்லா ரஷீது அவர்களுக்கு இது விஷயம் எட்டினதும் உடனே இம்மதத்தினரைக் கண்டனம் செய்ய ஆரம்பித்து பத்திரிகை, நோட்டீஸ், புத்தகம், தர்க்கம் முதலியவைகளால் மேற்கொண்டு வந்தனர். அப்பால், இவர்கள் எங்கள் பள்ளிகளில் பிரவேசிக்கத் தகுந்தவர்களல்லவென கோர்ட்டில் வியாச்சியம் நடத்தப்பட்டது. மௌலானு அவர்கள். இந்தியா, மௌங்கீர் ஜட்ஜ்மெண்டு நகலை வருத்திக் கோர்ட்டில் ஆஜர் படுத்தினுர்கள். காதியானீ, பி. எ. முதலியவர்கள் எவ்வளவு பிரயத்தினம் எடுத்தும் பலிக்காமல் சிறுமைப் பட்டவர்களாக எல்லாப் பள்ளிகளிலும் நுழையக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவுசெய்து துரத்தப்பட்டார்கள்.

4. கட்டக் என்ற நகரத்தில் மிர்ஸாஹி மதத்தைச் சார்ந்த ஒரு ஸ்திரீ மரணமாய் விட்டாள். அவளை முஸ்லிம்களின் சமாதிஸ்தானத்தில் அடக்கம்பண்ண ஆரம்பித்தார்கள். முஸ்லிம்கள் தடுத்துவிட்டனர். மிர்ஸாயி மதஸ்தர்களால் கோர்ட்டில் வியாச்சியம் நடத்தப்பட்டது. செஷன்ஸ் ஜட்ஜ் நன்கு விசாரணைசெய்து முஸ்லிம்களின் கப்ரஸ்தானங்களில் புதைக்க உங்களுக்கு அதிகாரமில்லை யென்று தீர்ப்புச் செய்துவிட்டார்.

5. பஞ்சாப் மாகாணத்தில் ஒஜ்ஷீர்கானென்றொரு தேசமுண்டு. அங்கே முஸ்லிமான ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டு அந்த ஸ்திரீ வீட்டிலேயே வாசம்பண்ணி வந்தான். அப்பால், அவன் மிர்ஸாயி மதத்தில் சேர்ந்துகொண்டானென்ற பிரஸ்தாபம் எட்டியவுடன் பெண் வீட்டார்கள் அவனை அந்த வீட்டிலிருந்து துரத்திவிட்டு பெண்ணையும் விடாமல் வைத்துக்கொண்டார்கள்: அவன் எனது ஸ்திரீ எனக்குக் கிடைக்கவேண்டுமென்று பாகல்பூர் கோர்ட்டில் பிராதுகொடுத்தான். முன்சீப் விஜாரணைசெய்து தீர்ப்புச்செய்ததாவது:

சற்றேறக்குறைய இந்தியாவிலுள்ள உலமாக்களடங்கலும் மிர்ஸாயி மதஸ்தன் முஸ்லிமான பெண்ணை விவாகஞ் செய்யத் தகுந்தவனல்லவென ஒற்றுமையாய்த்தீர்ப்புச் செய்திருக்கிறூர்கள். ஆதலால், நான்விவாகத்தைப் பிரித்து விட்டேன் என்பதே.

6. நமது ராஜப்பிரதிநிதி சிம்லாவில் காதியானீ தூதர்களுக்குப் பேட்டிகொடுத்தார். அதில் காதியானீ தூதர்கள் ராஜப்பிரதிநிதிக்கு ஓர் அட்ரஸ் வாசித்துக்கொடுத்தார்கள். அதில் ஒரு விஷயமாவது: எங்கள் மிர்ஸாசாஹிப் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று தாவாச் செய்ததிலிருந்து ஜிஹாது (யுத்தம்) என்ற வீண் எண்ணத்தை ஜனங்களின் மனதிலிருந்து எடுத்துவிடவில்லையானுல், இங்கிலீஷ் கவர்ன்மெண்டு இந்தியாவை விட்டுத்துரத்தப்பட்டுப்போய் வெகுநாளிருக்கும் என்றும் வாசித்தார்கள். ராஜப் பிரதிநிதி அவர்களின் அட்ரஸ்களுக்கெல்லாம் பதில் சொல்லிவந்து கடைசியில் இவர்களின் மதம் இஸ்லாமல்ல : மிர்ஸா சாஹிபால் உற்பத்தி செய்யப்பட்ட ஓர் புதிய மதமாயிருக்குமென்று பதிலளித்தார்.

முடிவுரை

இற்றைக்கு உங்கள் மார்க்கத்தை நிறை பூர்ணமாக்கி விட்டோம்; என்னுடைய நன்றியை உங்கள் மீது சம்பூர்ணமாக்கி விட்டோம்; உங்களுக்கு இஸ்லாத்தை சமயமாகப் பொருந்திக்கொண்டோம். (அல் குர்ஆன்) மக்களுக்கு நலவு கெட்டதுகளை அறிவிப்பது திருவேதங்களின் சேவையாகும். அவ்வாறு அறிவிப்பதை அல்லாஹ் தஆலா தனது நன்றி எனக் கூறியிருக்கின்றுன். சன்மார்க்கத்தின் சகல விபரங்களும் திருக்குர்ஆனில் கூறப்பெற்றுப் போயிருக்கின்றது. அதற்கு மேல் மக்களுக்கு வேறு எவ்வித அறிவிப்பும் அவசியமில்லை என்பது திண்ணம். ஆதலின் திருக்குர்

ஆனைப்பற்றிப் பிடித்துக்கொண்டு நடக்க வேண்டியது தான் முஸ்லிம்களின் கடமை யாகும். கியாம நாள் வரை அவ்வேதந்தான் தீர்ப்பளித்துக் கொண்டிருக்கும். இவ் வேதம் கடாசி வேதமாதலின் ஜனங் களுக்குஅறிவிப்பதென்னும் நன்றியை திருக் குர் ஆனைக்கொண்டே முடித்து விட்ட தாக மேல் கூறிய வசனத்தின் மூலம் ஆண்ட வன் அறிவித்துளான். இறுதி நபியான எம் பெருமானர் (ஸல்.) அவர்களின் மார்க்கந் தான் கடாசிவரை நீடித்திருக்குமென்பதை மேல்கூறிய வசனத்தால் தெரிந்து கொள் கிறோம். அதுதான் இகபர முதலிய சாத னங்களை அழிக்கக் கூடியது. அதுதான் ஜெயமளிக்கக்கூடிய மார்க்கம். உம்மத்த முஹம்மதிய்யாவுக்கு இதைத் தவிர்த்து வேறு எவ்வித மார்க்கமும், வேறு எவ்வித நபியும் அவசியமில்லை. ஆதலின் எம்பெரு மானர் (ஸல்) அவர்களை இறுதி நபீ என்று இறைவன் அருளியுள்ளான். இதனை நான்கா வது அதிகாரத்தில் சவிஸ்தாரமாய் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது.

மிர்ஸா சாஹிபின் சரித்திரமும், அவ ருடைய பொய்க்கூற்றுக்களும், அசத்திய மான தாவாக்களும் அவருடைய நூல்களி லிருந்தே தக்க ஆதாரங்களைக்கொண்டு நிரூ பித்தெழுதப்பட் டிருக்கின்றது. அதனை கணனுரும் ஒவ்வொருவரும் அவருடைய நிலைமை இன்னதெனக் கண்டுகொள்ளலாம். ஆதலின் அவருக்கு ஈமானிலும், இஸ்லாத் திலும் எவ்வித சம்மந்தமுமில்லை என்பது நன்கு புலனுகின்றது. தவிர அவருடைய கூற்றுக்கள் அவருடைய கிரந்தங்களில் பஹி ரங்கமாக எழுதப்பட்டிருப்பதால் அதற்கு எவ்வித "தாவீலும்" தக்க சமாதானங் களும் கூறுவதற்கிடமில்லா திருப்பதால், அவர் "முர்தத்து" காபிராய் விடுவாரென் பதில் எவ்வித சந்தேகமுமில்லை. யாரேனும் அவர் முர்தத்தென்பதில் சந்தேகங்கொள்வா ராயின், அல்லது அவரை சாமான்ய முஸ்லி மென்றுங்கூட கூறுவாராயின் அன்னே ரும் காபிராய் விடுவாரென்பதில் எவ்வித சந்தேகமு மில்லை.

எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்க ளுடைய உம்மத்தில் 30-தஜ்ஜால்கள் கிளம்பு வர், அவர்களுக்கு அடையாளம் தங்களை நபீ என்று கூறிக்கொள்வதாகும்; எனக் குப்பின் எவ்வித நபியுங் கிடையாது என்று கூறிய தீர்க்கதரிசனம் உண்மையாய் விட் டது. அந்தப் பொய்யர்களான தஜ்ஜால் களில் மிர்ஸாவும் ஒருவரென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்னும் விபரம் முந்திய அத்தியாயங்களில் செவ்வனே நிரூபிக்கப்பட் டிருக்கின்றது. இக்கடைசிகால தஜ்ஜாலான மிர்ஜா ஓர் புதிய மார்க்கத்தை நிறுவுவதற்கு முயற்சித்தார்; அது கிறிஸ்தவர்களின் கொள்கை, ஹிந்துக்களின் கொள்கை, முஸ் லிம்களின் கொள்கை ஆகிய மூவ்வகைக் கொள்கைகளைக் கொண்டு கலக்கப்பட்ட ஓர் நவீன மார்க்கத்தை நிறுவுவதற்கு முற்பட்டது போலிருந்தது. அவருடைய தாவாக்கள் கோரிக்கைகள் யாவும் நாச மாகஆகி அவர் தஜ்ஜாலென்றும், பொய்ய ரென்றும் நிரூபணமாய்விட்டது. இத்தஜ்ஜா லின் துன்மார்க்கத்தை ஒப்புக்கொள்பவரில் இன்றைக்கும் ஒரு சிலர் இல்லாமலில்லை. இவர்கள் தாம் கெட்டதுமல்லாமல் பாமர முஸ்லிம்களையும் கெடுப்பதற்கு முயற்சிக் கின்றனர். இவர்களை ஒரு நவீன கிறிஸ்தவர் களென்று கூறுவது மிகையாகாது. முஸ்லிம் காள்! இவர்களது வெளிவேஷத்தைக்கொ ண்டும், பசப்பு வார்த்தைகளைக் கொண்டும் ஏமார்ந்துவிடாதீர்கள். அன்னேர் தங்களின் வழிகெட்ட கொள்கைக்கு குர்ஆனையும் ஹதீதையும் ஆதாரமாகக் கொண்டிருப்பதா கவும், ஷிர்க் பித்அத்அனுச்சாரம்முதலியவை களை அகற்றுவதற்கென்றே தாங்கள் கிளம்பி யிருப்பதாகவும் கூறுவர். இவ்வாறான பசப்பு வார்த்தைகளைக்கொண்டு ஏமார்ந்துவிடவே ண்டாம். அவர்களுடைய கொள்கைகள் நிர்ண யங்கள்முதலிய மேலே விவரிக்கப்பட்டிருப்ப தால்அவர்களுக்கும்இஸ்லாத்திற்கும் எவ்வள வு வித்தியாசமிருக்கிற தென்பதை உற்று நோக்குங்கள், தன்சகோதிரர்களையும் இத் திய்ய கொள்கையில் சிக்குண்டழலாதிருக்க, முயற்சியுங்கள் ஏ ஆண்டவா!

முஸ்லிம்களை இக்கெட்ட கொள்கைகளை விட்டுக்காற்றி எம்பெருமானர் (ஸல்.) அவர் களின் அடிச்சுவட்டை ஏகதேசத்தில் பின் பற்றி நடக்கும்படி அருள் புரிந்து யாவர்களை யும் நேரான பாதையில் சீராக நடத்திவைப் பாயாக.

சென்னை உலமாக்களின் மார்க்கத் தீர்ப்பு

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் இவண் சென்னையம்பதியின் கண் காதியானிக் கொள்கை தலைகாட்ட ஆரம்பித்தது. அது பொழுது மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானீ உயிருடனிருந்தார். அவர் எழுதிய "இஜாலத்துல் அவ்ஹாம்" 'தவ்லீஹுல் மராம்' முதலிய புத்தகங்களில் நம் தூய்மை வாய்ந்த சன்மார்க்கத்திற்கு மாற்றமாக அநேகதவறுகள் வரையப்பெற்றிருந்தது. அவருடைய சிஷ்யர்கள் அத்தீய கொள்கைகளை பரப்ப பற்பல சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தனர். அதனால் நந்தமிழ்நாட்டில் பெரியதோர் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அதனை அனுசரித்து அதன் உண்மையினைத் தெரிந்துகொள்ள ஜனங்கள் ஆவல் கொண்டிருந்தமையால் அது சம்பந்தமாக வுள்ள மார்க்க முரண்களை விளக்கி நீண்டதோர் வினா எழுந்தது. அவ் வினாவில் மிர்ஸா சாஹிப் எழுதிய புத்தகங்களின் வால்யம், பக்கம் முதலிய யாவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ் வினாவுக்கு திருக்குர்ஆன், நாயகவாக்கியம் இவைகளின் தக்க அத்தாட்சிகளைக்கொண்டு இமாமுல் உலமா காளியுல்மலிக் பத்ருத்தவ்லா முஹம்மத் ஸிப்கத்துல்லாஹ் (ரலி) அவர்களின் குமாரர் சென்னை கவர்ன்மெண்ட் காளி ஷம்ஷுல் உலமா மௌலானா மௌலவீ உபைதுல்லாஹ் சாஹிப் அவர்களால் நீண்டதோர் தக்கவிடை யிறுக்கப்பட்டது. அதில் ஈஸா (அலை) அவர்கள் ஸ்தூலசரீரத்துடனும், (ரூஹ்) ஆத்மாவுடனும் வானலோகத்திற்கு உயர்த்தப்பட்டு ஹயாத்தாகவே இருக்கின்றார்கள்; பிற்காலத்தில் தஜ்ஜால் வெளியாகி ஜனங்களை வழிகெடுக்கும் சமயம் இமாம் மஹ்தீ(ரலி) அவர்கள் வெளியாவார்கள் அவ்வமயம் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களின் மகனாரான ஈஸா (அலை) அவர்கள் திம்ஷ்க் மஸ்ஜிதினுள்ள வெள்ளை மினாராவில் இறங்குவார்கள். அதுசமயம் மஹ்தீ (ரலி) அவர்கள் சுப்ஹ் தொழுகைக்குத் தயாராகயிருப்பார்கள். ஈஸா (அலை) அவர்களை நோக்கி இமாமத் செய்யும்படி கூறுவார்கள். தாங்களே (இமாம்மஹ்தியே) இமாமத்துச் செய்யுங்கள்; நான் பின் தொடர்ந்து தொழுகின்றேன் என ஈஸா (அலை) விடை பகர்வார்கள். அதன்பின் ஈஸா (அலை) அவர்களே தஜ்ஜாலைக் கொல்வார்கள். அவ்வமயம் ஈஸா (அலை) அவர்கள் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் மார்க்கத்தைக்கொண்டே தீர்ப்பளிப்பார்கள். நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தாக யிருப்பார்களேயன்றி தங்களுடைய சொந்த மார்க்கத்தை வெளியிட மாட்டார்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் யாராகிலுமொருவன் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு உயர்த்தப்படவில்லை; அவர்கள் மரணமாய்விட்டார்கள்; நான்தான் வாக்குச்சொல்லப்பெற்ற மஸீஹாகவும் மஹ்தியாகவுமிருக்கின்றேன்; எனக்கு வஹீ அறிவிக்கப்படுகின்றது என்று கூறுவானாகில், அவ்வாரே எம்பெருமானார் (ஸல்,)அவர்களுக்குப்பின் ஈஸா(அலை.) அவர்களைத்தவிர வேறு நபீ உண்டென்றுகூறுவானாகில் அவனும்அவனைப் பின்பற்றுபவனும் அக்கொள்கையைப் பிரசாரஞ்செய்பவனும் நிச்சயமாய் காபிராய் விடுவானென்று அதில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இம் மார்க்கத் தீர்ப்பை ஆதரித்து ஹைதராபாத் சமஸ்தான முப்தீ மௌலானா முஹம்மத் சயீத் சாஹிப் அவர்களும், மத்ராஸ் முப்தீ மௌலானா ஷெய்குல் இஸ்லாம் மஹ்மூத் சாஹிப் அவர்களும் மத்ராஸ் நவாபின் திவான் மௌலானா அஹ்மத் அலீ சாஹிப் அவர்களும் ஆற்காடு ஷெய்குல் மஷாயிக் மௌலானா அஹ்மத் பீரான் காதிரீ அவர்களும் இன்னுமனேக உலமாக்களும் கை எழுத்திட்டு முத்திரையும் போட்டிருக்கின்றார்கள். இவ்வினாவும் விடையும் ராயல் 1-8-ல் 70-பக்கங்கள் கொண்டதாகயிருக்கின்றது. இந்நூல் மிர்ஸா உயிருடனிருக்கும்போதேஎழுதப்பட்டு அச்சிறுத்து வெளியிடப்பட்டிருந்தும், அவரால் யாதொரு மறுமொழியும் எழுதமுடியாது போயிற்று. இந்நூல் குர்ஆன் ஹதீதுகளுடைய தக்க ஆதாரங்களைக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. இக்காலை அது கிடைப்பது மிக அரிதாகயிருக்கின்றது. இஃது உர்துவில் எழுதப்பட்டிருப்பினும் இதில் மேற்கோளாக் காட்டப்பட்டிருக்கும் அத்தாட்சிகள்யாவும் அரபிப்பாஷையிலேயே எழுதப் பெற்றிருக்கின்றது. இந்நூலை செந்தமிழில் மொழிபெயர்த்து அரபீ அத்தாட்சிகளுடனே அச்சிடப்படுமாயின் அஃது காதி

யானிக் கொள்கைகளை அகற்றுவதில் முதன் நூலாக விளங்குமென்பதிலய்யமில்லை. ஆதலால் இவ்வரிய நூலை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தார் செந்தமிழிலும், உர்துவிலும் அச்சிடுவதற்குப் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார்கள். கூடிய சீக்கிரம் வெளிவரும். காதியானிகள் வெளித் தோற்றத்திலும் பசப்பு வார்த்தைகளிலும் முஸ்லிம்களே போன்று காணப்படினும், அவர்களின் ஹிருதயத்தில் ஈமான் கிஞ்சிற்றேனும் கிடையாதென்பது திண்ணம். இப்பேர் வழிகள் பாமர முஸ்லிம்களிடையே தந்திரமாகவும், சாதுர்யமாகவும் கெட்ட கொள்கைகளைப் பிரசாரஞ் செய்ய முனைந்து நிற்கின்றனர். இவர்களைக்கண்டு ஏமார்ந்து போகாமல் தங்கள் ஈமானைக் காப்பாற்றிக்கொள்வார்களாக.

மௌலானா அவர்களின் நிருபம்.

(216-ம் பக்கத் தொடர்ச்சி)

IV. 5-11-31-ல் முஸ்லிம்களை 5 வேளையும் தொழுகைக்கு அழைப்பதற்காக ஒரு வாலண்டியர் பட்டாளம் அமைக்கப்பட்டது.

V. 25-12-31-ல் "மிர்ஜாயீ ஹகீகத்கா இஜ்ஹார்" (மிர்ஜாவின் உண்மையை வெளிப்படுத்தல்) என்னும் புத்தகத்தின் இரண்டாவது வாலியூம் வெளியிடப் பட்டது. அதில் மிர்ஜாவின் கபடவேஷங்களையும் பொய்க் கூற்றுக்களையும் பற்றி நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றது.

VI. ரஜபு 27வ வைபவமும், ஷஅபான் 15வ வைபவமும் ஜாமிஆ மஸ்ஜிதில் நம் மௌலானா அவர்களின் தலைமையின் கீழ் மிக்க உள்ளன்போடு நிறைவேற்றப்பட்டது. அது பொழுது வந்திருந்த ஜனங்கள் எல்லோருக்கும் இடம்போதவில்லை.

VII. 9-1-32-ல் ரமலான் மாதத்தில் குமாஸ்த்தா முதலிய வேலையாட்களுக்கு சிறிது ஒய்வு கொடுப்பதற்காக தற்போதுள்ள வேலை நேரத்தில் 3 மணியை குறைக்கும்படி மௌலானா அவர்கள் சிபாரிஷ் செய்ததற்கிணங்க வர்த்தகர்கள் யாவரும் ஒரு மனப்பட்டு அவ்வாறு அனுஷ்டானம் புரிந்தனர்.

ஜனப்! இவை அங்கு நடந்தேறிய முக்கியமான காரியங்களுள் சிலதேயாம். தவிர இதுவரை 34 பிறமத சகோதரர்கள் நந்தினுல் இஸ்லாத்தை தழுவி இருக்கின்றனர். (அல்ஹம்து லில்லாஹ்.)

முடிவாக, றியூனியனுக்கு விஜயஞ் செய்யுமாறு அழைப்புக் கடிதங்கள் வந்த வண்ணமாகவே இருப்பதால் நம்மௌலானா அவர்கள் இன்று மாறிடியூஸ் தீவை விட்டு பிரயாணமாகின்றார்களென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அங்கிருந்து அடுத்த பிறஞ்சு மெய்லில் (அதாவது மார்ச்சு 3).வ திரும்பி விடுவார்கள். குளிரான தேசங்களுக்குச்செல்லாமல் சுயஊருக்குத் திரும்பிப் போய் கொஞ்ச காலம் ஒய்வு எடுத்துக்கொள்ளும் படி டாக்டர்கள் யோசனை கூறுவதால் இனி இங்கிருந்து இன்ஷா அல்லாஹ் நம் மௌலானா அவர்கள் இந்திய நாட்டிற்கு கூடிய சீக்கிரம் பிரயாணமாவார்கள்.

ஒரு புதிய முஸ்லிம்.

எஸ். எஸ். கிரான்ட்லி கேஸில் ஆப் தி யூனியன் கேஸில் லைன் போர்டில் இருக்கும் ஒரு ஆங்கிலேய ஆபீஸராகிய மிஸ்டர் றெஜினல்டு ஆங்கிலி என்பவர் சென்ற ஜனவரிமீ 6வ மாலை போர்ட்டு லுயிஸிலுள்ள ஜாமிஆ மஸ்ஜிதைப் பார்வையிட்டார். அன்றிரவு $10\frac{1}{2}$-மணிக்கு நம் மௌலானா அவர்களை நேரில் சந்தித்துக்கொள்ள அவருக்கு சந்தர்ப்பம் வாய்த்தது. நம் மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் மேன்மையைப் பற்றியும் அதன் தாராளக் கொள்கைகளைப் பற்றியும் மனது கவரும்படியான அத்துணை அழகாகவும் உருக்கமாகவும் உபந்நியாஸித்தார்கள். மிஸ்டர் ஆங்கிலி அவர்கள் மிக்க ஆச்சரியமும் திருப்தியுமடைந்து, அன்றிரவு நம் மௌலானாவைப் பார்க்க வந்திருந்தவர்களாகிய சுமார் ஐம்பது முஸ்லிம்கள் முன்னிலையில் அவர் இஸ்லாத்தைத் தழுவினர். 7வ மாலை கப்பல் போர்ட்டு லுயிஸை விட்டும் புறப்பட்டு விட்டது. அதனால் மிஸ்டர் ஆங்கிலி அவர்கள் மறுமுறையும் மௌலானாவுடன் சம்பாஷிக்க சமயம் வாய்க்காமல் போனமைக்காக பெரும்பாலும் வருத்தமுற்றார். எனது மனப்பூர்வமான சலாம் எல்லோருக்கும் உண்டாவதாகவும்.

தங்கள் பிரியமுள்ள,

(Sd.) E. D. ABDUL LATIFF.